பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 30 செவ்வாய்க்கிழமை (14.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 230

# ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த தமிழ் கூட்டமைப்பினர் ஆர்வம்

## விரைவில் கோரிக்கைக் கடிதம்

கொழும்பு, ஜூலை 14

வவுனியா முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் மூன்று லட்சம் தமிழ் அகதிகளின் வாழ்வியல் பிரச்சினைகள் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்ற முக்கிய விடயங்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தனித்துவமான சந்திப்பு ஒன்றை மேற்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய சந்திப்புக்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு கோரும் கடிதம் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் அடுத்த ஓரிரு தினங்களில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பார் என நம்பகரமாகத் தெரியவருகின்றது. (16ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடர்**

**உள்ளே**

க.பொ.த. உயர்தர பரீட்சை 4 பக்கங்கள் கொண்ட மாதிரி வினாத்தாள்கள்

**நாளை**

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

# மூன்று லட்சம் அகதி மக்களில் அறுபது வீதத்தினர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் விடுவிப்பு

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 14

நாட்டுக்குள் இடம்பெயர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ள மூன்று லட்சத்துக்கும் அதிகமான அகதி மக்களில் குறைந்த பட்சம் ஐம்பது வீதத்தினரை - நான் அறுபது வீதத்தினர் என்றே கூறுவேன் - அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவரவர்களது இடத்திற்கு விடுவித்திருக்க முடியும் என நம்புகிறேன்.

- இப்படித் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அமெரிக்காவின் 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் எதைச் செய்து முடித்துவிட விரும்புகிறீர்கள் என்று கேட்டபோதே அப்பத்திரிகைக்கு ஜனாதிபதி மேற்படி பதிலை அளித்தார்.

ஜனாதிபதி அந்தப் பேட்டியில் மேலும் கூறியவை வருமாறு :-

பிரபாகரன் கொல்லப்பட்டதாக அறிந்ததும் இறைவனிற்கும் மும்மணிகளுக்கும் நன்றி தெரிவித்தேன். அது ஒரு வரம்.

அவர் சுடப்பட்டார் என்பது எமக்குத் தெரியும். அவ்வளவுதான். அவர் எப்படி சுடப்பட்டார் என்பது குறித்து நான் ஆர்வம் காட்டவில்லை. அதனைச் செய்தது யாரென்றாலும் அவரைப் பாராட்ட வேண்டும்.

பிரபாகரன் தற்போது இல்லை என்பதே முக்கியமானது. அவரை இங்கு கொண்டு வந்து கதைக்க விரும்பினேன். அவரை ஒரு போதும் நான் பார்த்ததில்லை.

அவரை சந்தித்திருந்தால் ஏன் இந்தப் பைத்தியகாரத்தனம் என்று அவரைக் கேட்டிருப்பேன். இதைவிட நான் வேறு என்ன அவரிடம் கேட்கமுடியும்?

அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் குறுகிய மனப்பான்மை கொண்டவை என நான் கருதவில்லை. (13ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மாகாண அமைச்சர் நவரட்ணராஜாவை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய உத்தரவு

## தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கில் கல்முனை நீதிமன்று பணிப்பு

கல்முனை, ஜூலை 14

கிழக்கு மாகாண அமைச்சர் நவரட்ணராஜாவை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.

கல்முனை நீதிவான் என்.எம். அப்துல்லா குற்றச்சம்பவம் ஒன்று தொடர்பாக மேற்படி அமைச்சரையும் அவருடன் தொடர்புடைய அமைச்சரின் ஆள்களையும் கைது செய்து எதிர்வரும் 27ஆம் திகதி மன்றில் ஆஜராக்குமாறு கல்முனைப் பொலிஸ் நிலைய சிறு குற்றப் பிரிவு பொலிஸாருக்கு கண்டிப்பான உத்தரவொன்றைப் பிறப்பித்தார்.

ஓட்டோவில் பயணம் செய்த ஒருவரை கையாலும், காலாலும், துப்பாக்கியாலும் அடித்து (16ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கு 6,000 மில்லியன் ரூபா செலவில் மின் வசதி

கொழும்பு, ஜூலை 14

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் 6,000 மில்லியன் ரூபா செலவில் மின்சார வசதிகள் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத் திட்டத்தை செயற்படுத்த துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் திட்டத்தின் கீழ் வவுனியாவில் இருந்து மாங்குளம் வரை 50 கிலோ மீற்றர் தூரத்துக்கு மின்சாரத் தொகுதி அமைக்கப்பட்டு வருவதோடு மாங்குளத்தில் இருந்து கிளிநொச்சி வரை 30 கிலோமீற்றர் தூரத்துக்கும் அமைக்கப்படுவதாக அமைச்சுக் கூறியது. அத்தோடு கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவு வரை 45 கிலோ மீற்றர் தூரத்துக்கு மின்மாற்றித் தொகுதி அமைக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது. இந்தப் பணிகளை இரண்டு வருடங்களில் பூர்த்தி செய்ய உள்ளதாக அமைச்சுக் கூறியது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம், வவுனியா தேர்தல்களில்

# போட்டியிடும் எந்தக் குழுவும் ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்.மாநகரசபை தேர்தலில் எந்தக் குழுவும் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்படமாட்டாது. வவுனியா நகரசபைத் தேர்தலுக்கும் இது பொருந்தும்.

வடபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் நிமால் வியூக் இத் தகவலை தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களுடன் நடமாட எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. யாருக்காவது பாதுகாப்பு தேவையானால், அவரது பாதுகாப்புக் கருதி உரிய பாதுகாப்பு வசதி ஏற்பாடு செய்யப்படும் - என்றும் அவர் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

# மீட்கப்பட்ட ஆயுதங்களை அழிக்க நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஜூலை 14

வாழைச்சேனைப் பிரதேசத்தில் அண்மையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்ட சட்ட விரோத ஆயுதங்களை அழிப்பதற்கான அனுமதியை நேற்று வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு வழங்கியுள்ளது.

இம்மாதம் 5ஆம் திகதி அன்று ஆலங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கைக்குண்டுகள் மற்றும் வெடிபொருள்கள், 7ஆம் திகதியன்று பெண்டுகள் சேனையில் கண்டு பிடிக்கப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி -01, ஆர்.பி.ஜி. - 01 மற்றும் ரி-56ரக துப்பாக்கி ரவைகள், (16ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பினர் ஜனாதிபதியைச் சந்தித்த பின் வவுனியா முகாம்களுக்குச் செல்வார்கள்

## இணையத்தளத்துக்கு வழங்கிய பேட்டியில் ஸ்ரீகாந்தா

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பெரும்பாலும் நாளை மறுதினம் அளவில் சந்திப்பதற்குத் தாங்கள் எண்ணியுள்ளனர் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீகாந்தா, இந்தச் சந்திப்பின் போது இடம்பெயர்ந்தோர் விடயங்கள் குறித்து ஆராய்ந்த பின்னரே தாங்கள் இந்த மக்களுக்கான முகாம்களுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளனர் என்றும் கூறினார்.

ஜனாதிபதி சம்பந்தத்தில் தெரிவித்துள்ள கருத்துகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தருணத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவதைப் புலப்படுத்துகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் (15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில்
(ஈழத்துச் சிதம்பரம்)

## வருடாந்த தேவி மஹோற்சவம்-2009

### மஹோற்சவ கிரியை விபரம்

16.07.2009 - கொடியேற்றம் வியாழக்கிழமை காலை 11 மணி

19.07.2009 - ஞாயிற்றுக்கிழமை மாலை 8 மணிக்கு கைலாச வாகனத் திருவிழா

21.07.2009 - செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை

24.07.2009 - வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா. காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை. 9.30 மணியளவில் அம்பாள் தேரில் எழுந்தருளும் காட்சி இடம்பெறும்.

25.07.2009 - சனிக்கிழமை ஆடிப்பூரம், தீர்த்த உற்சவம் 10.30 மணியளவில் இடம்பெறும். மாலை 8 மணிக்கு கொடிஇறக்கம்.

திருவிழா 10 தினங்களும் மகேஸ்வர பூசை இடம்பெறும்.

ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர்.

ஆதீன கர்த்தாக்கள். (அ/559533)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கம்மா செல்லத்துரை

அல்வாயைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவையும் வவுனியாவையும் வதிவிடமாகவும் தற்பொழுது யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.தங்கம்மா செல்லத்துரை நேற்று (13.07.2009) திங்கட்கிழமை சிவ்பதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நாகம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் சகோதரியும், காலஞ்சென்ற காந்தரூபி, காலஞ்சென்ற புவனேந்திரன் மற்றும் கமலராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா. ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்), மங்கையர்க்கரசி (கனடா), சுபத்திராதேவி (ஆசிரியை வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயம்), சர்வமங்களம் (கொழும்பு), ரேவதி (வவுனியா), தர்மநாயகி (ஆசிரியை - கொழும்பு), விஜயரஞ்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் Dr.சிவானந்தன், கமலேஸ்வரன் (கனடா), கரிச்சந்திரன் (வவுனியா), கணபதிப்பிள்ளை (கணக்காளர் - கொழும்பு), அல்பிறட் (வவுனியா), பற்றிக்ஸ் ஞானசேகர்(முகாமையாளர் , Rotex, கொழும்பு), ஜெகதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், சத்தியவாணி - மகாலிங்கம் (வவுனியா), சந்திரவதனி-ஞானலிங்கம்(பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரமோகன் மற்றும் சத்தியசீலன், சாந்தி (லண்டன்), சித்திரரூபிணி - தங்கவேல் (நோர்வே), வித்தியாதரன் - சோபனா (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (R/ACLG) அலுவலகம்), சிவோதயன் (நிறைவேற்று அதிகாரி Ceylinco Life), Dr.பிரதீபனா- Dr.செல்வகரன், அருணோதயன், ராதிகா, கிரிசன், மைத்ரேயி, நிவேதிகா, காஞ் சனா(விவசாயபீடமாணவி), காண்டீபன், சுஜீவன், அரவிந்தன், அஜிதா- சுரேஸ், பிரவீன், ஹர்சர், மிர்னா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பிரதீபன், திலக்சனா, திலக்சிகா, சர்மிளா, தர்சிகா, பிரவீன், வைத்தி, தியா, வர்ணா, ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2009) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் பி.ப 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
Dr.சிவானந்தன் (மருமகன்).

## துரைசிங்கம் பிரதீபன்



தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பிரதீபன் நேற்று (13.07.2009) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் துரைசிங்கம் - நகுலேஸ் வரி தம்பதியினரின் அன்பு மகனும், துசந்தி (லண்டன்), பிரரூபன், முரளி, குருபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிக்குமாரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடிப்பிள்ளையார் கோயிலடி,
கொக்குவில்.

தகவல்:
துரைசிங்கம் குடும்பத்தினர்
(முரளி)

### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த வலி. தெற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், விவசாயக் குழுக் கூட்டம் ஆகியவை எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு பிற் போடப்பட்டுள்ளது என பிரதேச செயலரால் அறிவிக்கப் பட்டுள்ளது. (1)

### நகரப் பகுதியில் சுவரொட்டிகள் அகற்றப்பட்டன

யாழ். நகரப் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்த மாநகர சபை தேர்தல் பிரசார சுவரொட்டிகளை பொலிஸார் அகற்றி வருகின்றனர்.

சுவரொட்டிகளை கிழித்து அகற்ற இயலாத பட்சத்தில் கருநிறகழிவு எண்ணெய் பூசி வாசகங்கள் மற்றும் உருவப்படங்களை மறைப்பதிலும் ஈடுபட்டிருந்தனர்.

அரசு தேர்தல் பிரசாரத்துக்கு இவ்வாறான சுவரொட்டிகள் மற்றும் 'கட்டவுட்' குறிக்கும் பதாகைகளை அனுமதிக்கவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.

### நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலயத்துக்குச் செல்ல படையினர் அனுமதி

வடமராட்சிகிழக்கு நாகர்கோயில் அதி உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள நாகதம்பிரான் கோயிலுக்குச் செல்ல நீண்ட காலத் திற்குப் பின்னர் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

படைத்தரப்பின் அனுமதியுடன் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் எம்.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் ஆலய பரிபாலன சபையைச் சேர்ந்த ஐவர் இன்று செவ்வாய்க் கிழமை இங்கு சென்று பார்வையிட உள்ளனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு இப்பகுதியிலிருந்து மக்கள் வெளியேறிய பின்னர் இரண்டொரு தடவைகள் கோயிலைப் பார்க்க அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் இப்போது கோயிலை சென்று பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கோயில் பரிபாலகர்கள் தெரிவித்தனர். (50-275)



## முதலாவது பிறந்தநாள் அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் ஜூலை மாதம் 14.07.2009 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் வரும் சுப வேளையில் திரு.திருமதி ஈஸ்வரன் சசிகலா தம்பதியரின் செல்வப் புதல்வி

**நதீரா**

தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாட இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன்அழைக்கின்றோம்.

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்*

இல.12, ஜமுனாவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு.திருமதி ஈஸ்வரன்
சசிகலா தம்பதிகள்

**வாழ்த்துவோர்:** அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, பெரியமாமா, அத்தை, சின்னமாமா,(பிரான்ஸ்), சித்தி,அண்ணாமார்(அரிசாந், பவித்), மச்சான் அஸ்வந்



## யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலயம்

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் -2009

### காலக்கிரியா விபரம்

**விநாயகர் வழிபாடு, சாந்தி**
14.07.2009 செவ்வாய்க்கிழமை வாஸ்துசாந்தி, அங்குரார்ப்பணம்

**கொடியேற்றம்**
15.07.2009 புதன்கிழமை முற்பகல் 10 மணி

**இரதோற்சவம்**
24.07.2009 வெள்ளிக்கிழமை காலை 9 மணி

**தீர்த்தோற்சவம்**
25.07.2009 சனிக்கிழமை முற்பகல் 10.45 மணி
பூர உற்சவம் நண்பகல் 12 மணி

**அன்னாபிஷேகமும் அன்னதானமும்**
26.07.2009 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி

**வைரவர் சாந்தி**
27.07.2009 திங்கட்கிழமை பிற்பகல் 5 மணி

மஹோற்சவ பிரதமகுரு
சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக் குருக்கள்.

ஆலயபிரதமகுரு
சிவ ஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்

## நாளொன்றுக்கு ரூ.2,000/= - ரூ.5,000/= வரையிலான இலாபம் பெற....

| பேக்கரி தளபாடங்கள் | சிறிய அளவிலான உற்பத்தி | நடுத்தர உற்பத்தி |
|---|---|---|
| மெனுவல் காஸ் அவன் | 2 தட்டு -1 | 3 தட்டு -1 |
| பல் தொழில் கலவை இயந்திரம் | 30 லீற். - 1 | 50 லீற். - 1 |
| பாண் அச்சுகள் | 72 | 108 |
| பாண் அச்சு வைக்கும் தட்டு | 06 | 09 |
| பணிஸ் தட்டு | 09 | 12 |
| சிறிய சன்ட்வீச் அச்சுக்கள் | 24 | 36 |
| பெரிய சன்ட்வீச் அச்சுக்கள் | 16 | 24 |
| சன்ட்வீச் அச்சு தட்டு | 04 | 06 |
| ஸ்பொன் அச்சுக்கள் | 108 | 162 |
| சீனி சம்பல் அச்சு | 75 | 75 |
| 8×4 கறைபடியாத உருக்கு மேசை | 01 | 01 |
| ஒவன் ஸ்டான்ட் | 01 | 01 |
| பாண், பணிஸ் வண்டில் | 01 | 01 |
| றோஸ் பாண் அச்சுக்கள் | 02 | 03 |
| | 699,000/= | 799,000/= |

குறைந்த அளவு கையிருப்புகளே உள்ளன.

பூபதி பாண், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
0217900022, 0777427777

# விடுதலை நற்செய்திக் கூட்டம்

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் -மத்11:28

**இடம்:** எபநேசர் ஜெப ஆலயம், கச்சாய் வீதி, கொடிகாமம்
**காலம்:** புதன், வியாழன் 15 - 16 ஜூலை 2009 மாலை 4 மணி

**தேவ செய்தியாளர்:** ஜீவ அப்பம் மிஷனரி சபை(ஜேர்மனி)போதகர் அல்பிரட் அவர்கள்
கலந்து சிறப்பிக்கும் விடுதலை நற்செய்திக் கூட்டம்.

வாழ்வில் வியாதியா? வேதனையா? பிரச்சினையா? பில்லி சூனியக் கட்டா? எதுவானாலும் சுகம் பெற்றிட உங்கள் யாவருக்காகவும் விஷேசித்த ஜெபம் (பிரார்த்தனை) ஏறெடுக்கப்படும்.

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
*கலந்துகொள்வீர்! சுகம் பெறுவீர்!*

**கிளை ஆலயம்**, எபநேசர் ஜெப ஆலயம், கச்சாய் வீதி, கொடிகாமம், தொ.பே.: 0779116134

தலைமை ஆலயம், எபநேசர் ஜெப ஆலயம், கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை, தொ.பே.: 0602218157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தடுப்பு முகாம்களில் இருந்து மக்களை உடன் விடுவிக்குக!

வன்னியில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் மூன்று லட்சம் தமிழர்களும் யுத்தக் குற்றவாளிகள் அல்லர். யுத்தத்தால் வஞ்சிக்கப்பட்டவர்கள்; போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள். இந்த இலங்கைத் தீவில் ஏனைய பிரஜைகளுக்கு உள்ள சகல உரிமைகளும் இவர்களுக்கும் உண்டு. எனவே, யுத்தத்தால் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்புகளுக்கும் காயங்களுக்கும் உரிய நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக அவர்கள் யுத்தக் குற்றவாளிகளாகக் கருதப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. எந்த வித சட்ட திட்டத்துக்கும் அமையாத முறையில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு விசனத்துடன் சுட்டிக்காட்டியிருக்கின்றது இலங்கையின் மூத்த கல்விமான்கள், பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள் அடங்கிய தமிழர்களின் குழு.

நலன்புரி மையங்களில் ஆள்கள் காணாமல் போவது மற்றும் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருகின்றமை போன்றன குறித்துத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அந்த அமைப்பு, ஆகவே இந்தப் பாதக விளைவுகளுக்கு முடிவு கட்ட உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளது.

இதேசமயம், ''வவுனியா முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இரண்டரை லட்சத்துக்கும் அதிகமான மக்களில் ஒவ்வொருவரும் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆழிப் பேரலையால் பாதிப்புற்ற மக்களை விடப் பரிதாபகரமான நிலையில் இந்த மக்கள் உள்ளனர். அவர்களுக்கு உரிய சிகிச்சைகளை அளிக்க முடியாத நிலைமை உள்ளது.'' - என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமே நேரடியாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

அங்கு, இரு தினங்களில் மட்டும் ஐயாயிரம் அம்மை நோயாளர்களுக்குத் தாங்கள் சிகிச்சை அளித்திருக்கின்றார்கள் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பதில் இருந்தே, அந்த மக்கள் எத்தகைய துன்பியல் நிலைமையில் சிக்கிக்கொண்டுள்ளார்கள் என்பதை ஏவராலும் சுலபமாக ஊகித்துக்கொள்ள முடியும்.

வன்னி யுத்தம் உக்கிரமடைந்திருந்த காலத்தில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கியிருந்தனர். அவர்களை விடுதலைப் புலிகள் பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்திருக்கின்றனர் என்று தொடர்ந்து குற்றம் சுமத்தி வந்தது அரசு. அந்த மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வெளியேறுவதற்கு ஓர் அரைமணி நேரமாவது பாதையைத் திறந்து விடுங்கள், அந்த மக்கள் அங்கிருந்து வெளியேறிவிடுவர் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே ஒரு தடவை புலிகளை விளித்துக் கூறியிருந்தார்.

இப்போது, அதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பார்த்து, சுமார் மூன்று லட்சம் தமிழ் மக்களை நீங்கள் தடுத்து வைத்திருக்கின்றீர்கள், அந்த முகாம்களின் கதவுகளை ஒருநாள் மட்டும் திறந்து வைப்பீர்களானால் ஒருவர் கூட அங்கு மிஞ்சமாட்டார்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கூறும் அளவுக்கு நிலைமை மாறிப் போய் விட்டது.

அன்று, புலிகள் மக்களைத் தடுத்து வைத்திருக்கின்றார்கள் என்று கூறி அதற்குக் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்த பல தரப்புகள், இன்று அதே மக்கள் வவுனியாவில் சிறிய நிலப்பரப்புக்குள் தடுத்து வைக்கப்பட்டு, முக்கிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாடுவதை - வஞ்சிக்கப்படுவதை - கண்டும் காணாமலும் பார்த்திருப்பது போன்று பாவனை - பாசாங்கு - செய்கின்றன.

இப்படித் தனது மக்களையே ஒட்டுமொத்தமாக - மூன்று லட்சம் பேரைக் கூட்டாக - தடுத்து வைத்திருப்பதற்கு இலங்கையில் மட்டுமல்ல, எந்த ஒரு நாட்டிலுமே சட்டத்தில் இடமில்லை.

ஆனால், இலங்கைத் தேசத்தில் மட்டும் இது இலகுவாக சாத்தியமாகின்றது; இயலுகின்றது.

மாவிலாறு முதல் தென்னிலங்கையில் இடம்பெற்ற பிற சம்பவங்கள் வரை அனைத்திலும் வன்செயல்களால் பாதிப்புற்ற மக்களுக்கு விரைந்து நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்துள்ளமை கண்கூடு.

ஆனால் வன்னித் தமிழ் மக்கள் விடயத்தில் மட்டும், 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை போன்று', யுத்தத்தில் பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு உடனடி நிவாரணம், நஷ்டஈடு என்பவற்றுக்குப் பதிலாகத் தடுப்பு முகாம் வாசமும், சுமுக வாழ்வுக்கான தடையுமாகக் கட்டுப்பாடுகள் இறுக்கப்படுகின்றன.

தமிழ் புத்திஜீவிகள் கூறுவது போல இந்த மக்களுக்கு உடனடியாக நஷ்டஈடும் சுமுக வாழ்வும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்த மக்களின் விவகாரம் உட்பட யுத்தத்தின் பின்னரான விடயங்களில் உண்மைகளைக் கண்டறிந்து அம்பலப்படுத்த உரிய ஆணைக்குழு அமைக்கப்படவேண்டும். ஆனந்தசங்கரி போன்ற அரசியல் தலைவர்கள் சுட்டிக்காட்டுவது மாதிரி இந்த மக்கள் உடன் தடுப்பு முகாம்களிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும்.

செய்யுமா அரசுத் தலைமை......?

# கடற்கரையோரக் குடியிருப்புக்களில் வசிப்பதற்கு மீனவக் குடும்பங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும்

## யாழ்.வந்த அமைச்சரிடம் கடற்றொழிலாளர் கோரிக்கை

நல்லூர்,ஜூலை14

மீனவர்கள் கடற்கரைப் பகுதிகளில் உள்ள தமது வீடுகளில் குடியிருப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும். அத்துடன் கடற்கரையில் உள்ள வீதிகளை மீனவர்களின் பாவனைக்குத் திறந்து விடவேண்டும்.

இவ்வாறு யாழ். வந்த கடற்றொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவிடம் கடற்றொழிலாளர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே கடற்றொழிலாளர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

பாசையூரில் உள்ள மீனவர்களுக்கான துறைமுகத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மீனவர்கள் கடற்றொழில் அமைச்சரிடம் கேட்டுக்கொண்டனர்.

மீனவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டபோது, நஷ்ட ஈட்டுக்குப் பதிலாகக் கட்டம் கட்டமாக மீன்பிடி உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

மன்னாரில் இருந்து மீனவர்கள் பெரிய படகுகளில் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இங்கு அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை எனவும் இரவில் மரப்படகுகளில் இருவர் சென்று தொழில் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் சுமார் 3 ஆயிரம் மரப்படகுகளும் 7 ஆயிரம் தொழிலாளர்களும் இந்த அனுமதி இன்மையால் தொழில் செய்யமுடியாதிருப்பதாகவும் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மீனவக் குடும்பங்களின் 250 வீடுகள் இருப்பதாகவும் இந்த வீடுகளுக்குரிய மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வருகின்றமையால் இவை குறித்தும் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் இக்கூட்டத்தில் கோரப்பட்டது.

பாதுகாப்பு குறித்த செயற்பாடுகளுடன் தொடர்புடைய சகல கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்ட பின்னரே நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும் எனவும் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் மீன்பிடி அமைச்சின் அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (50-111)

# சுகாதார அமைச்சின் புதிய நியமனத்தின் கீழ் வடக்கு- கிழக்குப் பகுதிகளுக்கு 50 வைத்தியர்கள்

## பட்டியலை ஜனாதிபதி அங்கீகரித்தார்

கொழும்பு,ஜூலை14

வடக்குக் கிழக்கில் பணிசெய்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள அரச வைத்தியர்களின் புதிய பட்டியலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கீகரித்துள்ளார். இந்தப் புதிய பட்டியலின் பிரகாரம் வடக்குக் கிழக்கில் 50 வைத்தியர்களுக்கு நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

ஏற்கனவே வெளியிடப்பட்ட வைத்தியர்கள் பட்டியல் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்ததுடன் சுகாதாரத் துறையில் வேலைநிறுத்தங்களுக்கும் வழிகோலியிருந்தது.

புதிய வைத்தியர்கள் பெயர்ப்பட்டியல் நேற்றுத் திங்கட்கிழமை வெளியிடப்படுவதாக இருந்தது.

சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் டாக்டர் நிகால் ஜயத்திலக இத்தகவலை வெளியிட்டிருந்தார்.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவால் முன்னர் வெளியிடப்பட்டிருந்த 970 சுகாதாரப்பிரிவு நியமனங்கள் வழமையான நடைமுறைகளைப் பின்பற்றாமல் செய்யப்பட்டிருந்ததால் பெரும் எதிர்ப்புகளைத் தோற்றுவித்திருந்தது. இதனையடுத்து அரச துறை வைத்திய அதிகாரிகள் சங்கம் நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது. இதனால் நாடு முழுவதும் ஒருநாள் வேலை நிறுத்தம் நடைபெற்றிருந்தது. எனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதில் தலையிட்டு நியமனப் பட்டியலை இரத்துச் செய்ததுடன் அரச துறை வைத்திய அதிகாரிகள் சங்க உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாகப் புதிய நியமனப் பட்டியில் ஒன்றைத் தயாரிக்கும்படி சுகாதார அமைச்சின் பதில் செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

பதில் செயலாளர் மருத்துவர் ஜயதிலக்க வெளியிட்ட தகவலின்படி புதிதாக நியமனம் பெற்றுள்ள 230 பேரில் 50 வைத்தியர்கள் வடக்கு கிழக்கில் பணிபுரிய அமர்த்தப்படவுள்ளனர். (ப)

# குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான ஆள்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை நாளை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 14

வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தால் குடும்பநல உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளை புதன்கிழமை முதல் ஆரம்பமாகின்றது. இந்தப் பரீட்சை நாளை மறுதினம் வியாழக்கிழமையும் 18 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்களத்துக்கு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாகவும் இவற்றில் ஏறத்தாழ 500 விண்ணப்பங்கள் மட்டுமே கோரப்பட்ட தகைமைகளை உடையனவாகவிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை புதன், வியாழன் மற்றும் சனிக்கிழமை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களிலிருந்து விண்ணப்பித்தோருக்கான நேர்முகப் பரீட்சை சம்பந்தப்பட்ட நலன்புரி நிலையங்களில் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

வடமாகாணம் முழுவதிலும் தகைமையுள்ள 300 விண்ணப்பதாரிகள் புள்ளிகள் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தி தெரிவுசெய்யப்படுவார்கள். இவர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 150 பேருக்கும் வவுனியா தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 150 பேருக்கும் நடைபெறும். இப்பயிற்சிக் காலம் 18மாதங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பித்த தகைமையுடயவர்களுக்கு இதுவரை நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்கத் தவறியிருந்தால் உடனடியாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# யாழ்.பல்கலை மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை14

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவுடன் கலந்துரையாடியதையடுத்து இதற்கான தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அண்மையில் யாழ்.வந்திருந்த அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவை மேற்படி டிப்ளோமாதாரிகள் சந்திப்பதற்கான ஏற்பாட்டை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்திருந்தார்.

இச்சந்திப்பின்போது யாழ்.மாவட்டத்திற்குள் மேற்படி டிப்ளோமாதாரிகளில் ஐவரை அரச பணியில் இணைத்துக் கொள்வதற்கும் மேலும் நால்வரை நீர்கொழும்பில் கடலுற்பத்திகள் ஏற்றுமதி நிறுவனத்தில் பணியில் இணைத்துக்கொள்வதற்கும், இதேநேரம் இரண்டு வருடகால டிப்ளோமா படிப்பை மேற்கொண்டவர்களுக்கு மேலும் இரு வருடங்கள் பட்டப்படிப்பினை மேற்கொண்டு பிறநாடுகளிலும் இலங்கையிலும் வேலைவாய்ப்புக்களைப் பெற வசதியேற்படுத்திக் கொடுப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இப்பாட நெறியை மேற்கொள்ள மீன்பிடியியல் துறைசார்ந்த பல்கலைக்கழகத்தில் சுமார் மூன்று லட்சம் ரூபா கட்டணம் அறவிடப்படுகின்ற போதிலும் ஐந்து பேருக்கும் உணவு, தங்குமிட வசதிகள் உட்பட இலவசமாக இப்பாடநெறியைக் கற்க வசதி செய்யவேண்டும் என்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கு அமைச்சர் பீலிக்ஸ்பெரேரா இணக்கம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேநேரம் கூடு மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு தொடர்பில் தென்பகுதியில் பெண்களுக்கு உணவு, தங்குமிட வசதிகளுடன் பத்து நாள் பயிற்சி அளிப்பதற்கும் பயிற்சியின் பின்னர் தேவையான மீனினங்களை இலவசமாக வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (203)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 31 | 15.07.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | அட்டமி |
| | மு.இ. 10.44 வரை |
| நட்சத்திரம்: | ரேவதி |
| [illegible] | [illegible] 01.34 வரை |
| [illegible] | 04.30 - 06.00 |
| ராகுகாலம்: | 12.00 - 01.30 |

# வலைப்பாடு பிரதேசத்தில் கடந்த வாரத்தில் மட்டும் 22 லட்சம் ரூபா பெறுமதியான கடலட்டைகள் சிக்கின

வண்ணை,ஜூலை14

குடாக்கடலில் வலைப்பாடு பிரதேசத்தில் கடந்த வாரம் 22 லட்சம் ரூபா பெறுமதியான கடலட்டைகள் பிடிக்கப்பட்டதாக மீனவர் வட்டாரங்கள் தெரிவித்தன.

நீண்டகாலமாக அப்பகுதிக்கு கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்குச் செல்லாமல் இருந்ததால் கடல் தேக்கமொன்றில் பெருந்தொகை கடலட்டைகள் கிடந்து விளைந்திருந்ததாக மீனவர்கள் தெரிவித்தனர்.

குருநகர் மற்றும் பாசையூர், கொழும்புத்துறை மீனவர்கள் கடல் வலயச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் அப்பகுதிக்குச் சென்றபோதே மேற்படி பெருந்தொகை கடலட்டைகள் சிக்கியதாக தெரியவருகிறது.

குறித்த ஒரு தினம் மட்டும் தொழிலுக்குச் சென்றிருந்த கடற்றொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சம் ரூபா இலாபகரமாகக் கிடைக்கப் பெற்றதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (50-160)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல்
## "வடக்கின் வசந்தம்" அபிவிருத்தித் திட்டம் -180 நாள்கள் துரித அபிவிருத்தித் திட்டம் - 2009

1. தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
2. பின்வரும் தகுதிகளை கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
3. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்,பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பதிவுப்புத்தகம் 2009ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
4. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
5. கேள்விப்பத்திரங்கள் 2009.07.14ஆம் திகதியிலிருந்து 2009.07.24ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் 2009.07.29ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் மேலதிக மாகாண கல்விப் பணிமனை, யாழ்ப்பாண அலுவலகத்தில் முற்பகல் 11.00 மணிக்கு கேள்விப் பத்திரப்பெட்டி திறக்கப்படும்.
6. கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்கமுடியாத வைப்புப் பணங்களை யாழ்ப்பாண கல்வி வலய கணக்குப் பகுதியில் செலுத்துவதன் பேரில் கேள்விப்பத்திர படிவங்களை மேலதிக மாகாண கல்விப் பணிமனையின் பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும், மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளவும் முடியும்.

*வேலையின் விவரங்கள்:*

| பாடசாலையின் பெயரும் வேலையின் விவரமும | இக்ராட் இலக்கம் | மீளளிக்கமுடியாத படிவக்கட்டணம | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாண கல்வி வலயம். | | | |
| 01) யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம் மாடிக்கட்டட மீதி வேலை 90'X25' | M7/C8 | 750.00 | 47,500.00 |
| 02) யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம் மாடிக்கட்டட மீதி வேலை 110'X25' | M7/C8 | 750.00 | 30,000.00 |
| 03) யா/சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம் மாடிக்கட்டட மீதி வேலை 40'X25' | M8/C9 | 500.00 | 17100.00 |
| 04) யா/சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம் மாடிக்கட்டட மீதி வேலை 40'X25' | M6/C7 | 1000.00 | 119000.00 |
| 05) யா/வைத்தீஸ்வராக் கல்லூரி. மாடிக்கட்டட மீதி வேலை 40'X25' | M7/C8 | 750.00 | 30700.00 |
| 06) யா/சென்.மேரிஸ் வித்தியாலயம் மாடிக்கட்டட மீதி வேலை 140'X25' | M6/C7 | 1000.00 | 177400.00 |
| 07) யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை மாடிக்கட்டட மீதி வேலை 60'X25' | M7/C8 | 750.00 | 23800.00 |
| தென்மராட்சி கல்வி வலயம். | | | |
| 08) யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (1) மாடிக்கட்டட மீதி வேலை 160'X25' | M6/C7 | 1000.00 | 113000.00 |
| 09) யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (11) மாடிக்கட்டட மீதி வேலை 60'X25' | M7/C8 | 750.00 | 31300.00 |
| வலிகாமம் கல்வி வலயம் | | | |
| 10) யா/சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம் மாடிக்கட்டட மீதி வேலை 150'X25' | M6/C7 | 1000.00 | 149600.00 |
| 11) யா/சில்லாலை றோ.க.த.பாடசாலை. மாடிக்கட்டட மீதி வேலை 90'X25' | M6/C7 | 1000.00 | 105400.00 |
| 12) யா/மல்லாகம் மகா வித்தியாலயம் மாடிக்கட்டட மீதி வேலை 110'X25' | M7/C8 | 750.00 | 43400.00 |
| 13) யா/இணுவில் இந்துக் கல்லூரி மாடிக்கட்டட மீதி வேலை 160'X25' | M6/C7 | 1000.00 | 149800.00 |
| வடமராட்சி கல்வி வலயம். | | | |
| 14) யா/இமையாணன் அ.த.க.பாடசாலை. மாடிக்கட்டட மீதி வேலை 110'X25' | M6/C7 | 1000.00 | 109650.00 |
| 15) யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம். மாடிக்கட்டட மீதி வேலை 70'X25' | M7/C8 | 750.00 | 33500.00 |
| 16) யா/சிறிநாரதா வித்தியாலயம். மாடிக்கட்டட மீதி வேலை 50'X25' | M8/C9 | 500.00 | 12900.00 |
| 17) யா/ஞானசாரியார் கல்லூரி. மாடிக்கட்டட மீதி வேலை 95'X25' | M7/C8 | 750.00 | 25100.00 |
| 18) யா/வல்வை மகளிர் வித்தியாலயம் மாடிக்கட்டட மீதி வேலை 40'X25' | M7/C8 | 750.00 | 20600.00 |
| 19) யா/கொற்றாவத்தை .மெ.மி.த.க.பாடசாலை மாடிக்கட்டட மீதி வேலை 70'X25' | M7/C8 | 750.00 | 36000.00 |
| தீவக கல்வி வலயம். | | | |
| 20) யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம் மாடிக்கட்டட மீதி வேலை 90'X25' | M7/C8 | 750.00 | 43400.00 |

7. கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொண்டவர்கள் மேலதிக மாகாண கல்விப் பணிமனையின் பாடசாலை வேலைகள் பகுதியினில் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கை பத்திரங்களில் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதனை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
8. கேள்வியாளர் பூர்த்திசெய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும் இரண்டு கடித உறையும் வேறு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர், கேள்விச்சபை, மேலதிக மாகாண கல்விப்பணிமனை, யாழ்ப்பாணம் என விலாசமிட்டு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வபிப் பெட்டியில் 2009.07.29ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் இடப்படவேண்டும்.
9. குறித்த நேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படுகையில் கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கமுடியும்.

**திரு.க.கணேஷ்,**
*மாவட்ட கேள்விச்சபைத்தலைவரும், அரச அதிபரும்,*
*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*

(தி/559535)

கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி
Diploma in Computerized Accounting
உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான
100% செய்முறைப்பயிற்சியுடன்..
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
Quick Book + ACCPAC + MYOB
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்
Tally
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
Batch I :13/06/2009 11 am
Batch II :14/06/2009 11 am
Batch III :16/06/2009 10 am
Batch IV :18/06/2009 10 am
COMPUTER EXPRESS
Head Office : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250

## வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# வெளிவாரிப் பரீட்சைகள் - 2008
## கலைமுதற் தேர்வு -2007&2008 (வெளிவாரி)

மேற்படி கலைமுதற் தேர்வு 2007 & 2008 பரீட்சையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் மிகவிரைவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மீள் பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரி பட்டப்படிப்புகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

தபால்மூலம் விண்ணப்பப் படிவத்தை பெற விரும்புவோர் நிதியாளர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= க்கான காசுக் கட்டளை /தபாற்கட்டளையுடன், சுய முகவரியிடப்பட்ட ரூபா40/= பெறமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28×20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரி பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 31.07.2009 (வெள்ளிக்கிழமை) வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர், 13.07.2009

## வலயக்கல்வி அலுவலகம் - தென்மராட்சி
# கேள்வி அறிவித்தல் - 2009

1. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உலக வங்கியிடமிருந்து கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கென செலவுக்கான மானியத்தினைப் பெற்றுள்ளது. அதன் ஒரு பகுதியை 'கற்றைத் தாரகை' (Learning Star) 'அறிவுக்கோபுரம்'(Tower of Knowledge) ஆகிய கட்டுமான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற் கான நிர்மாண வேலை ஒப்பந்தத்திற்கான கொடுப்பனவுகளுக் காகப் பெற்றுள்ளது. அந் நிதி ஒதுக்கீட்டில் இருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
2. ஒப்பந்தகாரர் இக்ராட்(ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும் பதிவுப் புத்தகம் 2009 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் 16.07.2009 ஆம் திகதி தொடக்கம் 24.07.2009 ஆம் திகதி பி.ப. 2 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 28.07.2009 ஆம் திகதி மு.ப. 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே எமது அலுவலகத்தில் மு.ப. 11 மணிக்கு கேள்விப் பத்திரப்பெட்டி திறக்கப்படும்.
4. கேள்விப் பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்க முடியாத வைப்புப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயக் கணக்குப் பகுதியில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரப் படிவங்களை தென்மராட்சி வலய அலுவலக பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக் கொள்ளவும்.
5. இல. 3 இல் குறிப்பிட்டப்பட்டுள்ள வேலையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கேள்விப் படிவக் கட்டணம் பாதுகாப்பு வைப்புப் பணம் இன்றி பங்கெடுக்க முடியும்.

| இல | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01. | யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. செயற்பாட்டறை அமைத்தல் | 500.00 | 20,000.00 | M7 |
| 02. | யா/வரணி ம.வி. பிரிவு... மண்டபத் திருத்தம் | 500.00 | 5,000.00 | M8 |
| 03. | யா/மீசாலை ... வித்தியாலயம் வகுப்பறைத் திருத்தம் | 250.00 | 700.00 | M8 |

6. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களில் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
7. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்வி பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும்.தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற் குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அன்றையதினம் எமது அலுவலகத்தில் மு.ப. 11 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டிகள் திறக் கப்படும்.
8. கேள்விப்பத்திரம் பெற வரும் ஒப்பந்தகாரர், பாடசாலை வேலைகள் பகுதி பொறியியலாளரின் கேள்விப்பத்திரம் பெறுவதற்கான அனுமதிக் கடிதத்துடன் வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

திரு.கு.பிறேமகாந்தன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் இலங்கை தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபையால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச சபைச் செயலாளர் வே.குலநாயகம் ஆகியோர் மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: சுந்தா)

# அரச களஞ்சியங்களில் இருந்து பொருள்களைப் பெறுவதற்கு முன்னர் அவற்றின் தரத்தை ப.நோ.கூ.சங்கங்கள் உறுதிப்படுத்தவேண்டும்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரச களஞ்சியங்களில் இருந்து உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு முன்னர் அப்பொருள்கள் தரமானவை என்பதை உறுதிப்படுத்திய பின்னரே பெற்றுக் கொள்ளவேண்டும்.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமும் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அரச களஞ்சியத்தில் உள்ள பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்று அவற்றை நுகர்வோருக்கு விநியோகிக்கும் சமயம் சில முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த முறைப்பாட்டைத் தவிர்க்கும் முகமாக ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் அரச களஞ்சியத்தில் உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு முன்னர் அவை தரமானவையா என்பதை உறுதிப் படுத்திப் பெற்று மக்களுக்கு விநியோகம் மேற்கொள்ளவேண்டும்.

நிவாரண விநியோகம் என்றாலும் சரி ரொக்க வியாபாரம் என்றாலும் சரி தரமான பொருள்களை களஞ்சியத்தில் இருந்து பெற்று மக்களுக்கு விநியோகம் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203 - 224)

# நேர்முகத்தேர்வு

மாற்று ஆற்றலுடையோருக்கான மின்சார உபகரணங்கள் திருத்தல் பயிற்சி நெறியின் பயிற்சியாளர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை நாளை புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு இல48, காட்டுக்கந்தோர் ஒழுங்கையிலுள்ள மாவட்ட சமூக நலத் துறைத் திணைக்களத்தில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்பயிற்சியாளர் தெரிவிற்காக விண்ணப்பித்த அனைவரையும் இந்த நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்குமாறும் மாவட்ட சமூக சேவை அலுவலர் ஆ. ஞானவேல் கேட்டுள்ளார்.

(50- 288)

# பிணக்குகளை மத்தியஸ்தம் செய்வோருக்கான நேர்முகத் தேர்வு செயலகத்தில் இடம்பெற்றது

யாழ்ப்பாணம், ஜூலை14

யாழ். மாவட்டத்தில் விசேட வகையான பிணக்குகளை மத்தியஸ்தம் செய்வதற்காக உருவாக்கப்படும் மத்தியஸ்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்.செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

விசேட வகையான பிணக்குகள் தீர்த்து வைக்க விசேட மத்தியஸ்த சபை உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை கொழும்பு - மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழு மேற்கொண்டுள்ளது.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், யாழ்.பிரதேச செயலர் ஆகியோர் தலைமையிலான குழு கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள், சமூகசேவை ஈடுபாடு, அரசாங்க சேவையில் ஈடுபாடு, அரசாங்க சேவையில் ஈடுபடும் தன்மை ஆகியவை குறித்து விசேட மதிப்பீடுகளை மேற்கொண்டன.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் மத்தியஸ்த சபைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு புதியவர்களை நியமிக்கவும் காலம் முடிவடைந்த சபைகளின் பதவிக் காலத்தை முடிவுக்குக் கொண்டு வரவும் நடவடிக்கை எடுத்து வருகிறது மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு.

இதேநேரம் யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான மத்தியஸ்த சபைகள் இணக்கமான தீர்வினை வழங்கிய சான்றிதழ்களை விட தீர்க்க முடியாமைக்கான சான்றிதழ் வழங்கியே பிரச்சினையைத் தீர்த்து வருவதாக மத்தியஸ்த சபைகளின் புள்ளிவிவரங்கள் மூலமான அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (203- 302)

# உள்ளூராட்சி அமைப்புகளின் சேவைகள் மக்கள் மயப்பட்டவையாக அமைய வேண்டும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உரை

சுன்னாகம், ஜூலை 14

உள்ளூராட்சி அமைப்புக்கள் மக்களின் பங்களிப்புடன் மக்களுக்காகச் சேவையாற்றுபவையாகும். எனவே அவற்றின் செயற்பாடுகள் மக்கள் மயப்பட்டனவாக அமைய வேண்டியது இன்றியமையாததாகும்.

இவ்வாறு கூறினார் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார்.

தேசிய ஆவணமாக்கல் சபையால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் வடமாகாணத்தில் சிறந்த நூலகமாக சுன்னாகம் நூலகம் தெரிவு செய்யப்பட்டமையையும், சிறந்த நூலகர் தேர்வில் க.செளந்தரராஜன் வடமாகாணத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றமையையும் கௌரவித்து நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் அவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

வாகசர் வட்டத் தலைவர் சு.தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரையாற்றிய அவர் தனதுரையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சுன்னாகம் பொது நூலகம் வடமாகாணத்தில் முதலிடம் பெற்றமையானது நூலகச் செயற்பாடுகளை மக்கள் மயப்படுத்தியதால் பெற்ற நல்விளைவாகும். பிரதேச மக்களது கருத்துக்களை உள்வாங்கி, அவர்களை ஒன்றிணைத்துச் செயற்படும் போது உள்ளூராட்சி அமைப்புக்கள் சிறப்பாக செயற்பட முடியும். சிறப்பான திட்டங்களை மக்களின் பங்கேற்புடன் நடைமுறைப்படுத்துவதனூடாகப் பிரதேச அபிவிருத்தியைத் துரிதப்படுத்தலாம்.

அத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் ஒவ்வொரு செயற்பாட்டினையும் ஆவணப்படுத்தி வைப்பது அவசியமாகும். அல்லாவிடின் அவை பற்றிய விடயங்கள் மறக்கப்பட்டு அழிந்து விடும்.

பிரதேச சபையின் அதிகாரிகள் தமது ஊழியர்களைத் தட்டிக் கொடுத்து அவர்களின் சேவையை நன்கு பயன்படுத்த வேண்டும்.

ஒரு ஊழியர் சோர்வடைந்தாலும் அங்குள்ள சூழல் சோர்வடைந்து விடும். நன்றாகச் செயற்படுபவர்களை ஊக்குவித்து கௌரவிப்பது அவசியமாகும்.

இன்று நூலகப் பணியாளர்கள் அனைவரையும் கௌரவிப்பது வரவேற்கப்பட வேண்டிய முன்மாதிரியான செயற்பாடாகும். ஏனெனில் நூலகத்தின் வெற்றியில் அவர்கள் ஒவ்வொருவரினதும் அர்ப்பணிப்பு பொதிந்துள்ளது என்றார்.

விழாவில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கந்தசாமி, பிரதேசசபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம், ஓய்வுபெற்ற அதிபர் பொ.கமலநாதன், சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் ந.சண்முகவேல் உட்படப் பலரும் உரையாற்றினர். நூலகருக்கு மூதறிஞர் சிற்பி சிவசரவணபவன் வாழ்த்துப் பாமாலை அளித்து, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (203-38)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்.வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 14

வேலணை, வங்களாவடி முருகன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 14

நல்லூர், ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கும் நடைபெறும். (204)

* * *

வடமராட்சி, ஜூலை 14

புலோலி, குரும்பைகட்டி ஞானவைரவர் ஆலய வருடாந்த அபிஷேகம் கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

அபிஷேக தினங்களின் இறுதி நாளான நாளை மறுதினம் வியாழக்கிழமை மகா சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகல் மகேஸ்வரபூசையும், மாலை 5 மணிக்கு சுவாமி வீதிஉலா வருதலும் இடம்பெறும். (201-236)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 14

காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த தேவி பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமையும் இடம் பெறும். (201-250)

* * *

சுழிபுரம், ஜூலை 14

பண்ணாகம் ஆலடி வைரவர் ஆலய மணவாளக் கோல மகா சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை9 மணிக்கு நடைபெறவுள்ளது.

(201-28)



தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்துக்கு கனடாவில் வசிக்கும் பாடசாலையில் பழைய மாணவர்களான பி.கலைவாணன், பி.பாலமுரளி, பி.பால்ராஜ், எஸ்.நவநீதன் ஆகியோர் பல்லூடக எறிகருவியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். பழைய மாணவர்கள் சார்பாக செல்வி பாலகிருஷ்ணன் சிரேஷ்ட அதிபர் கே.கே.யோகநாதனிடம் அந்தக் கருவியைக் கையளிப்பதை படத்தில் காணலாம். உப அதிபர் திருமதி வி.சிவகுமாரனும் படத்தில் காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதி துப்புர்வு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இதனை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிடுவதையும் யாழ்.முனியப்பர் ஆலயப் பகுதியைப் பார்வையிட்டு ஆலய அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

## பாதாள உலகப் புள்ளி ஒருவர் பதுளையில் சுட்டுக்கொலை

பதுளை, கந்தேகெதர பகுதியில் சனிக்கிழமை இரவு 11 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

அதேஇடத்தைச் சேர்ந்த மொஹமட் ரிஷ்வான் (வயது - 31) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். அவர் வீட்டிலிருந்த சமயம் அங்கு வந்த இனந்தெரியாதவர்கள் அவரை வீட்டிற்கு வெளியே அழைத்துச் சென்று பொது மயானம் ஒன்றுக்கு அருகில் வைத்து சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த நபர் பல பாலியல் வல்லுறவு, கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்தவர் என்றும் அவர் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தவர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். உயிரிழந்தவரின் சடலத்தைப் பொலிஸார் நேற்று முன்தினம் காலை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

கடந்த சில நாள்களாக நாட்டின் பல பகுதிகளில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

# வடமராட்சி வலய மாணவர்களின் கணிதப் புதிர்ப் போட்டி முடிவுகள்

வடமராட்சி, ஜூலை 14

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே இடம்பெற்ற கணிதப் புதிர்ப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு:

**தமிழ்மொழி மூலம்**

தரம் 6: விஜயராசா சாளினி (யா/கரணவாய் மகா வித்தியாலயம்), கிருஸ்ணகுமார் யுவேகா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), நவரட்ணம் நிதுஜன் (யா/ஹாட்லிக் கல்லூரி), மகேந்திரன் கவியரசன் (யா/விக்னேஸ்வராக் கல்லூரி).

தரம் 7: சுப்பிரமணியம் ஆர்த்திகாயினி (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), சிவலிங்கராசா றிஷிகோபன் (யா/ஹாட்லிக் கல்லூரி), முத்துராசா சுபிர்ணா (யா/ஞானாசாரியார் கல்லூரி).

தரம் 8: கலாமணி மதனாகரன் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), நேசலிங்கம் ராஜமனோகரி (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), சிவசுப்பிரமணியம் தனுஷன் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

தரம் 9: ஜெயபாலன் கீர்த்தனன் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), வித்தியானந்தன் சாமந்தி (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), முத்துராசா சன்ஜிகா (யா/ஞானாசாரியார் கல்லூரி).

தரம் 10: றம்மிஜா ரட்ணராஜா (யா/மெதடிஸ்த பெண்கள் உ.த.பாடசாலை), தவராஜா லக்ஷன் (யா/ஹாட்லிக் கல்லூரி), கதிர்காமலிங்கம் நிதுஷன் (யா/ஹாட்லிக் கல்லூரி), மாதங்கி மகேந்திரன் (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

தரம் 11: குபேந்திரராசா ஐங்கரன் (யா/ஹாட்லிக் கல்லூரி), சிவப்பிரகாசம் கமலக்கண்ணன் (யா/ஹாட்லிக் கல்லூரி), கௌதமி கதிர்வேலு (யா/விக்னேஸ்வராக் கல்லூரி), கணேசமூர்த்தி கௌதமன் (யா/விக்னேஸ்வராக் கல்லூரி).

**ஆங்கில மொழி மூலம்**

தரம் 6: சுப்பிரமணியம் திலக்ஷன் (யா/ஹாட்லிக் கல்லூரி), துளசிகா புவனேந்திரன் (யா/மெதடிஸ்த பெண்கள் உ.த.பாடசாலை), பாலேஸ்வரன் பவித்ரா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

தரம் 7: மனோகரன் துஷிதா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), லிங்கரட்ணம் ஜெயசுதா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), லாவண்ஜா லோகநாதன் (யா/மெதடிஸ்த பெண்கள் உ.த.பாடசாலை).

தரம் 8: லிங்கரட்ணம் விதுர்ஷா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), தர்மகுலசிங்கம் துவாரகா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), கனகசபை மகிந்தன் (யா/ஹாட்லிக் கல்லூரி).

தரம் 9 : தனபாலசிங்கம் கோகுலன் (யா/ஹாட்லிக் கல்லூரி), கீர்த்தனா உதய மூர்த்தி (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), தர்சிகா பிறேமகாந்தன் (யா/மெதடிஸ்த பெண்கள் உ.த.பாடசாலை), ஜெகநாதன் ராஜேந்தர் (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

தரம் 10: விக்னேஸ்வரமூர்த்தி முகுந்தன் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), செல்வராஜா சஞ்சிகா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), சிவமூர்த்தி கிருஷ்ணபிரதாப் (யா/ஹாட்லிக்கல்லூரி), கிருஷ்யாயினி கருணாகரன் (யா/வட. இந்து மகளிர் கல்லூரி).

தரம் 11: பாலகோபாலன் கபிலன் (யா/ஹாட்லிக் கல்லூரி), கைலாயபிள்ளை விநோதா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), பரமநாதன் ஹரிதர்ஷன் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

(203-236)

# நலன்புரி முகாம்களின் உயர்தர மாணவர் பரீட்சைக்குத் தோற்ற விசேட அடையாள அட்டைகள்

கொழும்பு, ஜூலை 14

அடுத்த மாதத்தில் (ஓகஸ்ட்) நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்கு வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து தோற்றவுள்ள மாணவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்க பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அரச பரீட்சை ஒன்றுக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் விசேட அடையாள அட்டைகள் வழங்குவது இதுவே முதல் தடவை என்றும் அடையாள அட்டைகளுக்கான புகைப்படங்களை எடுக்கும் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப் பரீட்சைக்கு முகாம்களில் இருந்து ஆயிரக் கணக்கான மாணவர்கள் தோற்றவுள்ளதுடன் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து இராணுவத்தினரிடம் சரணடைந்த 42 பேரும் தோற்றவுள்ளதாகவும் இது அவர்களுக்கு அரசாங்கம் கல்வி மூலம் இயல்பான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சி என்றும் பரீட்சை ஆணையாளர் சொன்னார்.

இம் மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களும் கடந்த பரீட்சை வினாத்தாள்களும் வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, ஓகஸ்ட் மாதம் 23 ஆந் திகதி நடைபெறும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு நலன்புரி முகாம்களில் இருந்து 5 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளதாகவும் இவர்களுக்கு விசேட வகுப்புகளை முகாம்களில் உள்ள ஆசிரியர்களும், பல் கலைக்கழக மாணவர்களும் வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(அ-06)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி இராசம்மா பொன்னுத்துரை**

பிறப்பு: 15.07.1930 இறப்பு: 01.07.2002

*திதி: ஸப்தமி (14.07.2009)*

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்.

*25/7, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்.*

(87019)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



அமரர்
**வெற்றிவேலு சாந்தலிங்கம்**

தோற்றம் 17*01*1949

மறைவு 14*06*2009

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
அன்பால் அரவணைத்து ஆசை மொழிபுகட்டி
மன்னுபுகழ் கீர்த்தியுடன் வாழவைத்த தெய்வமே!
மீளாத்துயரில் கொண்டு முப்பத்தொரு நாள்கள்
சென்றாலும் அகலவில்லை உங்கள் நினைவுகள்

தகவல்:
குடும்பத்தினர்.

*84, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.*

(சி/559517)

## 45ஆம் நாள் நெஞ்சில் நீங்கா நினைவலைகள்



தாய்மடியில்
22.03.2003

ஆண்டவன்
அடியில்
31.05.2009

**செல்வி றொபின்ஷாந் தர்ணிகா**

இன்றுடன் பிரிந்து நாள்கள் நாற்பத்தைந்து ஆகுதே
தாங்கமுடியாத கண்ணீர் வற்றவில்லை தர்ணிக்குட்டி
உனது பிரிவு - யாரும் அறியாத பொழுதில் மரணம் - எங்கள்
செல்லக்குட்டியைக் கொண்டு போயிற்றே - உன் மரணம்
எங்கள் உயிரைப் பிழிந்து வதைக்குதம்மா - உன் இழப்பு
எங்கள் நெஞ்சங்கள் இருக்கும்வரை தர்ணிக்குட்டியின் நினைவுகளை
சுமந்திருப்போம்.
எங்கள் செல்வமே நீ என்றென்றும் அம்பிகையின் பாதமலரினை
அலங்கரிக்கும் புனித மலராய் வீற்றிருக்க கவலையில் வாழும்
நாங்கள் என்றுதான் உம்மைக் காண்போம் தர்ணிக்குட்டி
விடை சொல்வாயே!

*நிரந்தர முகவரி:*
வரணி இயற்றாலை, வரணி.
*தற்காலிக முகவரி:*
106 B, கோயிற்புதுக்குளம்,
வவுனியா.

பெரியம்மா, அண்ணாமார்கள்,
அக்கா, மாமா (ரவி),
அம்மம்மா.

(சி/559443)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

நற்சிந்தனை

"கல்விக்காக எதையும் தியாகம் செய் எதற்காகவும் கல்வியைத் தியாகம் செய்யாதே!"

க.பொ.த.உயர்தர

# கல்விச்சுடர்



14.07.2009 20 செவ்வாய்க்கிழமை

Special Guidance For A/L 2009&2010

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும் கல்வி இணைப்பிதழ்

யாழ்.ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் S.தங்கராஜாவின் வழிகாட்டலில்
S.T.ஜனார்த்தனன் தொகுத்து வழங்கும்

## க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள் - 2009

## பொது இரசாயனம் - 01

### பகுதி - 1

01. இலத்திரன் உண்டு என்பதற்குச் சான்றாக அமையாத கூற்று எது?
   1) நிலைமின் பரிசோதனைகள்.
   2) மின்பகுப்புப் பரிசோதனைகள்.
   3) மின்கலச் செயற்பாடுகள்.
   4) கதோட்டுக்கதிர் பரிசோதனைகள்.
   5) வன்கார-வன்னமில நடுநிலையாக்கற் சுற்றாக்கம்.

02. கதோட்டுக் கதிரின் இயல்பு அல்லாதது எது?
   1) நேர்கோட்டிற் செல்லும்.
   2) கதிரின் பாதையில் வைக்கப்பட்டுள்ள இலசான பற்சில்லு சுழலும்.
   3) கதிரின் பாதைக்குச் செங்குத்தாகக் காந்தப்புலத்தைக் கொண்டுசெல்ல கதிரின் பாதை செங்குத்தாகத் திரும்பலடையும்.
   4) கதிரின் பாதைக்குச் செங்குத்தாக நேர் மின்புலத்தைக் கொண்டுவர கதிர் நேர்மின்புலத்தால் கவரப்படும்.
   5) கதிர் அனோட்டை நோக்கிச் செல்வதில்லை.

03. நேர்க்கதிரின் இயல்பு அல்லாதது எது?
   1) கதிரின் பாதையில் இலேசான பற்சில்லை வைத்தால் அது சுழலும்.
   2) கதிரின் பாதைக்குச் செங்குத்தாக காந்தப்புலத்தைக் கொண்டுசெல்ல கதிர் செங்குத்தாகத் திரும்பலடையும்.
   3) கதிர் அனோட்டிலிருந்து வெளியேறும்.
   4) கதோட்டுக்கதிரின் துணிக்கை இயல்பிலும் நேர்க்கதிரின் துணிக்கை இயல்பு அதிகமானது.
   5) கதோட்டுக்கதிரின் அலை இயல்பிலும் நேர்க்கதிரின் அலை இயல்பு குறைந்தது.

04. கீழே தரப்படும் துணிக்கைகளும் அவற்றின் தொடர்புகளும் சார்பாக சரியானது எது?

| | புரோத்தன் | இலத்திரன் | நியூத்திரன் |
|---|---|---|---|
| 1) | சட்விக் | இரதபோட் | தொம்சன் |
| 2) | குறூக்ஸ் | சட்விக் | இரதபோட் |
| 3) | குறூக்ஸ் | இரதபோட் | சட்விக் |
| 4) | இரதபோட் | தொம்சன் | சட்விக் |
| 5) | இரதபோட் | குறூக்ஸ் | தொம்சன் |

05. $Ca^{2+}$ இன் e/m விகிதம் $4,825Cg^{-1}$ எனின், $Ne^{+}$ இன் dm விகிதம் யாது? (Ca, Ne என்பவற்றின் சாரணுத்திணிவுகள் முறையே 40, 20)
   1) $2,412.5\ Cg^{-1}$
   2) $4,825\ Cg^{-1}$
   3) $96,500\ Cg^{-1}$
   4) $1.602\times10^{-19}\ Cg^{-1}$
   5) $8.01\times10^{-20}\ Cg^{-1}$

06. ஓர் இலத்திரனின் ஏற்றம் e C எனவும், அவகாதரோ மாறிலி $Lmol^{-1}$ எனவும், ஐதரசனின் சாரணுத் திணிவு 1 எனவும் தரப்படின், புரோத்தனின் e/m விகிதம் $Cg^{-1}$ இல்,
   1) eL
   2) L/e
   3) e/L
   4) eL/96,500
   5) 96,500/1,840eL

07. புரோத்தனின் திணிவு : இலத்திரனின் திணிவு = 1,840 : 1 எனவும், இலத்திரனின் ஏற்றம் e C எனவும், அவகாதரோ மாறிலி L எனவும், H இன் சாரணுத்திணிவு 1 எனவும் தரப்படின், இலத்திரனின் e/m விகிதம் யாது?
   1) 1,840 eL
   2) 1,840 L/e
   3) e/1,840L
   4) 1,840eL/96,500
   5) 69,500/1,840eL

08. திணிவு நிறமாலைப் பதிகருவியில் பின்வரும் எவ் ஏற்றமுடைய துணிக்கையின் இயல்பு அறியப்படுவதில்லை?
   1) புரோத்தன்.
   2) இலத்திரன்.
   3) $He^{+}$
   3) $Ne^{+}$
   5) $Na^{+}$

09. திணிவு நிறமாலைப் பதிகருவியில் கூடிய திரும்பலைக் காட்டும் கற்றயன் எது?
   1) $H^{+}$ 2) $D^{+}D\equiv{}^{2}_{1}H$ 3) $T^{+}T\equiv{}^{3}_{1}H$ 4) ${}^{12}_{6}C^{+}$ 5) ${}^{14}_{6}C^{+}$

10. திணிவு நிறமாலைப் பதிகருவியில் $H_2, D_2, T_2$ வாயுக்களைச் செலுத்தி முதலில் அணுக்களாக மாற்றப்பட்ட பின்பு மீண்டும் அவை மூலக்கூற்று நிலைக்குக் கொண்டுவரப்பட்டு அவற்றில் ஈரணு மூலக்கூறு கொண்ட ஒரு நேர்க் கற்றயன் தோற்றுவிக்கப்படின், அவை அப்பகுதியில் எத்தனை கோடுகளை விழுத்தும்?
   1) 3 2) 5 3) 6 4) 7 5) 9

11. திணிவு நிறமாலைப் பதிகருவியில் இருந்து ஒரு மூலகத்தின்,
   1) அயனாக்கற் சக்தி.
   2) சமதானிகளின் எண்ணிக்கை.
   3) சமபாரங்களின் எண்ணிக்கை.
   4) நியூத்திரன்களின் எண்ணிக்கை.
   5) இரசாயன இயல்பு.

12. $127I^{+}$, $131I^{+}$ சமதானிகளின் சார்புவளங்கள் முறையே 80%, 20% எனின், அம் மாதிரியின் அணுக்களால் உருவாக்கப்பட்ட மூலக்கூறுகளின் அயன்களான $({}^{127}I-{}^{127}I)^{+}$, $({}^{127}I-{}^{131}I)^{+}$, $({}^{131}I-{}^{131}I)$ இன் சார்புவளன் விகிதம் யாது?
   1) 1:6:9 2) 9:6:1 3) 16:8:1 4) 25:8:1 5) 25:6:1

13. உருதபோட்டின் ∝ சிதறல் பரிசோதனையில் இருந்து எதனை அறியமுடியும்?
   1) ஓர் அணு அதிகளவு கருக்களைக் கொண்டிருக்கும்.
   2) அணு தொடர்ச்சியான துணிக்கை இயல்பு உடையது.
   3) அணு ஒன்றில் பல்வேறு சக்திமட்டங்களில் இலத்திரன்கள் அசைகின்றன.
   4) அணுவில் பெரும்பகுதி வெற்றிடமானது.
   5) கரு நடுநிலையானது.

14. H நிறமாலையை விளக்குவதற்கு போர் முன்வைத்த கருதுகோள்கள் எதனை அறிவதற்குப் போதுமானவை?
   1) கருவில் இருந்து அப்பாற் செல்ல கோடுகள் நெருங்கிச் செல்லும்.
   2) பெறப்படும் நிறமாலை கோட்டு நிறமாலை என்பதை விளக்குவதற்கு.
   3) கருவில் திணிவு குவிக்கப்பட்டுள்ளது.
   4) அணுவின் பெரும்பகுதி வெற்றிடம்.
   5) ஒரு திருசியக் கோட்டிற்கு அணுவின் ஒரு சக்திமட்டம் காரணம்.

15. H நிறமாலை தொடர்பான கூற்றுக்களுள் தவறானது எது?
   1) UV பகுதிகளிலும், கட்புலப்பகுதியிலும் அமைந்துள்ள கோடுகளின் போக்குகள் ஒரேமாதிரியானவை.
   2) H நிறமாலையை விளக்க பாமர் தொடர்கோடுகள் பயன்படுத்தப்பட்டன.
   3) பிறாக்கட் தொடர்கோடுகளும், பவுண் தொடர்கோடுகளும் கலந்து காணப்படுகின்றன.
   4) IR பகுதியில் பசன் தொடர்தோடுகள் காணப்படுகின்றன.
   5) முடிவில் இருந்து 3ஆவது பிரதான சக்திமட்டத்திற்கு H அணுவில் இலத்திரன் பாயும்போது காலற் சக்திக்குரிய கோடு கட்புலப்பகுதியில் விழும்.

### ★ ★ ★ இவ்வார இணைப்பிதழில்...

- ★ பொது இரசாயனம் ...(S.T. ஜனார்த்தனன்)
- ★ பௌதிகவியல் 01 வினாத்தாளின் (10.07.2009) தொடர்ச்சி (கொழும்பு தமிழ்ச்சங்கம்)
- ★ கணக்கீடு வினாத்தாள் 02இன் பகுதி11 (கொ.தமிழ்ச்சங்கம்) ...

16. H நிறமாலை பற்றிய கூற்றுக்களுள் தவறானது எது?
   1) H நிறமாலையில் இருந்து H இன் அயனாக்கற் சக்தியை அறியமுடியும்.
   2) H∝ என்பது சிவப்புத் திருசியக் கோடாகும்.
   3) ஒவ்வொரு தொடரிலும் சக்தி குறைந்த காலலுக்குரிய திருசியக் கோடுகள் அலைநீளம் அதிகரிக்கும் திசையில் நெருங்கிச்செல்லும்.
   4) லைமன் தொடர்கோடுகள் அலைநீளம் அதிகரிக்கும் திசையில் நெருங்கிச்செல்லும்.
   5) $E_1, E_2, .....E_a$ என்பது 1ஆவது, 2ஆவது, .... என்ற சக்திமட்டங்களின் சக்திப் பெறுமானங்களைக் குறிப்பின், $E_2 - E_1 > E_a - E_2$.

17. d தொகுப்பு மூலகங்களுள் நான்கு சோடிசேராத இலத்திரன்களை தரைநிலையில் கொண்ட மூலகம்,
   1) Fe 2) Mn 3) Cr 4) V 5) Cu

18. உபசக்திமட்டங்கள் அதிகரிக்கும் ஒழுங்குகளில் தவறானது எது?
   1) 4f < 5f
   2) 4s < 4p < 4d < 4f
   3) 2s < 3s < 4s < 5s
   4) 3p < 3d < 4s < 4p
   5) 5s < 4d < 5p < 6s

19. பின்வரும் அணுக்கள் தாக்கங்களில் ஈடுபடும்போது அருட்டப்பட்ட $e^{11}$ நி - அ காணப்படச் சாத்தியமற்றது எது?
   1) Be - $1s^2 2s^1 2p^1$
   2) B - $1s^2 2s^1 2p^2$
   3) C - $1s^2 2s^1 2p^3$
   4) W - $1s^2 2s^1 2p^3 3s^1$
   5) P - $1s^2 2s^2 2p^6 3s^2 3p^2 3d^1$

20. பின்வருவனவற்றுள் எவ் அணு தரைநிலை இலத்திரன் நிலையமைப்பில் சோடிகாட்டாத தனி இலத்திரன் ஒன்றை மட்டும் கொண்டிருக்கும்?
   1) Mg 2) Sc 3) Si 4) S 5) Cr

21. $Mo^{+}$ (அணுவெண்-42) என்ற அயனின் d உபசக்திமட்ட இலத்திரன்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   1) 3 2) 5 3) 13 4) 15 5) 19

22. பின்வருவனவற்றுள் எவ் இலத்திரன் நிலையமைப்பு தவறானது?
   1) N ⇒ [He] $2s^2 2p^3$
   2) P ⇒ [Ne] $3s^2 3p^3$
   3) As ⇒ [Ar] $3d^{10} 4s^2 4p^3$
   4) Sb ⇒ [Kr] $4d^{10} 5s^2 5p^3$
   5) Br ⇒ [Xe] $5d^{10} 6s^2 6p^3$

23. அணுஎண் 24 இன் இறுதி இரு உபசக்திமட்டங்களின் இலத்திரன் நிலையமைப்பாக அமைவதுயாது?
   1) $3d^4 4s^2$ 2) $3d^5 4s^1$ 3) $3d^6 4s^6$ 4) $3d^3 4s^2 4p^1$ 5) $3d^2 4s^2 4p^2$

24. ஆவர்த்தனப் பாகுபாட்டில் கூட்டம் VI, ஆவர்த்தனம் - 5 ஐ உடைய மூலகத்தின் அணுஎண் யாது?
   1) 32 2) 34 3) 50 4) 52 5) 84

25. ஆவர்த்தனப் பாகுபாட்டில் A,B,C,D என்னும் மூலகங்கள் குறித்த ஓர் ஆவர்த்தனத்தில் அமைந்துள்ளன. A மாறா வலுவளவுடைய அல்லுலோகம், B உலோகப்போலி, C எளிய மூலக்கூறு வடிவில் காணப்படக்கூடியது, D ஈரியல்பைக் காட்டக்கூடியது. ABCD இன் அணு ஆரை ஏறுவரிசை ஒழுங்கு யாது?
   1) ACBD 2) ACDB 3) DBCA 4) BDCA 5) ABCD

26. ஆவர்த்தனப் பாகுபாட்டில் சில உபசக்தி மட்டங்களும் நிரம்பிய, நிரம்பிக்கொண்டிருக்கும் மூலகங்களின் அணு எண் வீச்சும் தரப்படுகின்றன. அவற்றுள் தவறானது எது?
   1) 4p : 31 - 36
   2) 5p : 49 - 54
   3) 6p : 80 - 86
   4) 4f : 57 - 71
   5) 4d : 39 - 48

27. அணுவெண் 30 உடைய மூலகம் தொடர்பான கூற்றுக்களுள் தவறானது எது?
   1) இது ஒரு d தொகுப்பு மூலகம்.
   2) இது அமைந்துள்ள கூட்ட மூலகங்களின் அணு எண்கள் 48, 71, 103 ஆக அமையும்.
   3) இம்மூலக அணுவில் சோடிகாட்டாத இலத்திரன் இல்லை.
   4) இதன் அயனாக்கற்சக்தி அசாதாரணமாக உயர்ந்தது.
   5) இதன் அணு ஆரை Sc இலும் உயர்வானது.

28. தரப்பட்டுள்ள மூலகங்களுள் அயனாக்கற்சக்தி குறைந்த மீலகம் எது?
   1) B 2) F 3) Ar 4) Si 5) K

29. பின்வருவனவற்றுள் 3ஆம் அயனாக்கற்சக்தி கூடிய மூலகம் எது?
   1) Ne 2) Na 3) Al 4) Si 5) P

30. பின்வரும் மூலகங்களுள் 4ஆம் அயனாக்கற்சக்தி குறைந்த மூலகம் எது?
   1) Si 2) C 3) Al 4) B 5) Mg

31. தரப்பட்டுள்ள மூலகங்களுள் எது அணு ஆரை கூடியது?
   1) Ti 2) V 3) Cr 4) Mn 5) Fe

32. பின்வருவனவற்றுள் எது அணு ஆரை குறைந்தது?
   1) Na 2) Br 3) Cl 4) Al 5) Zn

33. பின்வருவனவற்றுள் எது அயனாக்கற்சக்தி கூடியது?
   1) Sc 2) Ti 3) Mn 4) Cu 5) Zn

34. பின்வருவனவற்றுள் எது அயன் ஆரை கூடியது?
   1) $O^{2-}$ 2) $F^{-}$ 3) $N^{3-}$ 4) $Na^{+}$ 5) $Mg^{2+}$

35. பின்வருவனவற்றுள் எது அயன் ஆரை குறைந்தது?
   1) $H^{-}$ 2) $F^{-}$ 3) $Cl^{-}$ 4) $Na^{+}$ 5) $Mg^{2+}$

36. பின்வருவனவற்றுள் எது மின்னெதிர் இயல்பு கூடியது?
   1) Li 2) Be 3) C 4) O 5) Cl

தொடர்ச்சி பக்கம் IV இல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August
மேல்மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும்
மாதிரிப்பரீட்சைத் தொடர் 02


# பௌதிகவியல் - 01

10.07.2009 இன் தொடர்ச்சி...

## பகுதி - 1

26. கிடையாக T இழுவைக்கு ஈரக்கப்பட்ட இழையொன்றில் 60Hz மீடிறனையுடைய குறுக் கலைகள் பிறப்பிக்கப்பட்டபோது 3 தடங்களாக அதிர்ந்தது. மீடிறனை மாற்றாமல் ஒரு தடமாக இழையை அதிரச்செய்வதற்கு இழுவை மாற்றப்படவேண்டிய புதிய பெறுமானம்,
1) 9T 2) T/9 3) 3T
4) $(3T)^{1/2}$ 5) (3T) 1/2


27. காட்டப்பட்டிருக்கும் சுற்றிலுள்ள ஒளிகாலும் இருவாயி ஒளிரும் எப்போதெனில்,
A ஆளிகள் P,Q இரண்டும் திறந்துள்ளபோது.
B ஆளிகள் P,Q இரண்டும் மூடப்பட்டுள்ளபோது.
C ஆளி P மூடப்படும் Q திறந்துள்ளபோது




1) A,B,C எல்லாம். 2) A,B மட்டும்.
3) B மட்டும். 4) A மட்டும்.
5) C மட்டும்.

28. அருகில் தரப்பட்டுள்ள உண்மை அட்டவணையை தரக்கூடிய சுற்று எதுவாகும்,

| A | B | V |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 1 |
| 1 | 1 | 0 |




29. 1m அலைநீளமுடைய ஒலியொன்றும் 1.01m அலைநீளமுடைய வேறோர் ஒலியொன்றும் வாயுவொன்றினூடு செலுத்தப்படும்போது 3secஇற்கு 10 அடிப்புகள் அவதானிக்கப்பட்டது. வாயுவினுள் ஒலியின் வேகம் $ms^{-1}$இல்,
1) 337 2) 300 3) 1120
4) 1,400 5) 660


30. இரு புள்ளிகளுக்கிடையில் இணைக்கப்பட்ட கம்பியொன்றின் அடிப்படை மீடிறன் f ஆகும். அதே பதார்த்தத்தினாலான இரு மடங்கு விட்டமுடைய புதிய கம்பி அப்புள்ளிகளுக்கிடையில், அதே இழுவிசையில் இணைக்கப்பட்டிருக்கும்போது அதன் அடிப்படை மீடிறனாக அமைவது,
1) $f/2$ 2) $f$ 3) $2f$
4) $4f$ 5) $f/4$

31. எளிமையிசையியக்கத்தில் இயங்கும் துணிக்கையின் ஆர்முடுகல் $\alpha$ ஆனது $\alpha = -bx$ என்பதனால் தரப்படும் அத்துணிக்கையின் அமைவுகாலம்
1) $P = 2\pi/b$ 2) $P = 2\pi/\sqrt{b}$ 3) $P = \sqrt{b}/2\pi$
4) $T = \sqrt{2\pi/b}$ 5) $P = \sqrt{2\pi b}$

32. 600Hz மீடிறனுடையதும் சமவீச்சமும் உடைய இரு அலைகள் வளியில் மேற்பொருந்துவதனால் நின்ற அலைகள் உருவாக்கப்படுகின்றன. வளியில் ஒலியின் வகம் $300ms^{-1}$ எனின், இரு அடுத்தடுத்த கணுக்கரைக்கிடையிலான தூரம்.
1) 2m 2) 0.5m 3) 0.25m
4) 0.125m 5) 0.1m

33. n முறிவுச்சுட்டியுடைய கண்ணாடியாலான அரியமொன்றின் முதலாவது முகத்திற்கு செங்குத்தாகப்படும் ஒளிக்கதிரானது இரண்டாவது முகத்தினை மருவி வெளிப்படுகின்றது. இவ்வரியத்தின் முறிவுக்கோணம் A இனை தருவது.
1) $Sin^{-1}(1/n)$ 2) $Con^{-1}(1/n)$ 3) $tan^{-1}(1/n)$
4) $90^0 - Sin^{-1}(1/n)$ 5) $90 - Cos^{-1}(1/n)$

34. $A = 30^0$ ஆயுள்ள இரு சமபக்க முக்கோண கண்ணாடி அரியம் ஒன்றின் மீது P,Q எனும் சமாந்தர ஒளிக்கதிர்கள் படத்தில் காட்டியவாறு படுகின்றன. கண்ணாடியின் முறிவுக்குணகம் 3 எனின், வெளிப்படுகதிர்களுக்கிடையிலான கோணம்





1) $0^0$ 2) $30^0$ 3) $60^0$
4) $90^0$ 5) $120^0$

35. 15 மணித்தியாலம் அரை ஆயுள் உடைய ஒரு சிறிய அளவு சோடியம் சமதானி நிமிடத்திற்கு 12000 கதிர்ப்புக்களை பிறப்பிக்கும் நிலையில் ஒரு நோயாளியின் இரத்தத்தோடு கலக்குமாறு உட்பாச்சப்பட்டது. 30Hours பின் நோயாளியின் $4cm^3$ இரத்தம் நிமிடத்திற்கு 2 கதிர்ப்புக்களை பிறப்பித்தது. எனவே, நோயாளியின் உடம்பிலுள்ள இரத்தத்தின் கனவளவு
1) $2400cm^3$ 2) $12000cm^3$ 3) $6000cm^3$
4) $3000cm^3$ 5) $800cm^3$

36. ஒரு கதிர்த்தொழிற்பாடுடைய சமதானியின் அரை ஆயுள் 2 நிமிடங்கள் $log_e 2=0.7$ எனக் கொண்டால் அதன் தேய்வு ஒருமை
1) $0.0058s^{-1}$ 2) $0.35s^{-1}$ 3) $1.4s^{-1}$
4) $2.86s^{-1}$ 5) $84s^{-1}$


37. ஒரு உலோகத்தட்டின் தடுக்கும் அழுத்தத்தை கணிப்பதற்கான பரிசோதனையில் கிடைக்கும் முடிவு தங்கியிருப்பது
1) ஒளியின் மீடிறனில் மட்டும். 2) ஒளியின் செறிவில் மட்டும்.
3) உலோகத் திரவியத்தில் மட்டும். 4) ஒளியின் செறிவிலும் மீடிறனிலும்.
5) ஒளியின் மீடிறனிலும் உலோகத்திரவியத்திலும்.

38. தரப்பட்ட சுற்றில் ஒவ்வொரு தடையினது வலு வீதப்பாடு 1W எனின் எந்தவொரு தடையும்சேதமுறாது X,Yஇற்கும் குறுக்கே பிரயோகிக்கத்தக்க உயர் வோல்ற்றளவு.





1) 11.3V 2) 21.3V
3) 22.5V 4) 42.5V
5) 45.0V

39. உருவில் காணப்படும் தடைகளின் வலைவேலைக்கு உயர்வலுவை பற்றரி வழங்கும் சந்தர்ப்பத்தில் R இன் பெறுமானம் Ω





1) 4/9 2) 2
3) 8/ 3 4) 8
5) 18

40. உருவில் காணப்படும் சுற்றில் Rஇன் எப்பெறுமானத்துக்கு 10Ω தடையில் வெப்பம் பிறப்பிக்கப்படாது?




1) 0 2) 3Ω
3) 6Ω 4) 9Ω
5) 12Ω

41. உருவில் காணப்படும் சுற்றில் கலங்கள் இலட்சியமானவை R என்னும் தடையினூடாக ஒட்டம் பூச்சியமாக உள்ள $E_1$இன் பெறுமானம் யாது?




1) $R_1/R_2 E$
2) $(R_1+R_2)/R_2 E$
3) $R_2/R_1 E$
4) $R_2/R_1 + R_2 E$
5) $R_2/R_1 + R_2 E$

42. கடத்தும் கம்பி ABஇன் குறுக்கே 10V அழுத்த வித்தியாசம் பிரயோகிக்கப்படுகிறது. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - Aஇலிருந்து Bஇற்கு நகரும் இலத்திரன்கள் ஒவ்வொன்றும் சராசரியாக 10ev சக்தியை இழக்கும்.
B - A,Bஇற்கிடையே 1C ஏற்றும் பாயக்கூடியதாகச் செய்வதற்கு இக்கடத்திக்கு 10J சக்தி வழங்கப்படல் வேண்டும்.
C - கடத்தியில் 2A ஓட்டம் இருக்குமாயின் இக்கடத்தியில் ஒவ்வொரு செக்கனுக்கும் 5J சக்தி வெப்பமாக விரயமாக்கப்படும்.

43. $3 \times 10^{11}Nm^{-2}$ என்னும் யங்கின் மட்டைக் கொண்டிருக்கும் உலோகத்தால் செய்யப்பட்டதும் சீர் குறுக்கு வெட்டுப்பரப்பளவு $5\times10^{-6}m^2$ உடையதுமான வளையம் ஒன்றினது ஆரை 5cm ஆகும். இவ்வளையம் 5.1cm குறுக்குவெட்டு அரையுடைய மர உருளை ஒன்றின் மீது பொருத்தப்படுமாயின் அவ்வளையத்திலுள்ள இழுவை
1) $5 \times 10^7N$ 2) $2 \times 10^7N$
3) $8 \times 10^5N$ 4) $5 \times 10^5N$
5) $2 \times 10^5N$

44. பிசுக்குத்திரவம் ஒன்றில் விழும் m திணிவுடைய உருக்குக்கோளம் ஒன்றில் முடிவு வேகம் V ஆகும். அதே பிசுக்குத் திரவத்தில் விழும் 64m என்னும் திணிவுடைய இன்னொரு உருக்குக் கோளத்தின் முடிவு வேகம்.
1) V 2) 4V 3) 8V
4) 16V 5) 32V


45. 6 நாட்களில் கதிர்த் தொழிற்பாட்டுப் பதார்த்தமொன்றின் பிரிகையற்ற அணுக்களின் எண்ணிக்கையானது அதன் ஆரம்ப (பிரிகையுறாத) அணுக்களின் 7/8 பங்காயிருக்க காணப்பட்டது. அடுத்த 4 நாட்களின் பின்னர் பிரிகையுற்றிருக்கும் ஆரம்ப அணுக்களின் எண்ணிக்கையினது பின்னம்.
1) 31/32 2) 77/80 3) 15/16
4) 71/80 5) 29/32

46. இரு சவர்க்காரக் குமிழிகள் ஒன்றினது ஆரை 3cm அடுத்ததன் ஆரை 4cm சம வெப்ப நிபந்தனைகளின் கீழ் வெற்றிடத்தில் ஒன்றுசேர்கின்றன. உருவாகும் ஒற்றைக் குமிழியினது ஆரை
1) 1cm 2) 2cm 3) 5cm
4) 6cm 5) 8cm

47. ஓர் உயர்த்தியினுள் ஒரு பாரமானி வைக்கப்பட்டுள்ளது. உயர்த்தி ஓய்வில் இருக்கும்போது பாரமானியின் இரச நிரலின் உயரம் h ஆகும். உயர்த்தி கீழ்நோக்கி α ஆர்முடுகலுடன் செல்லும்போது உயர்த்தியில் உள்ள பாரமானி காட்டும் அமுக்கம் (ρ - இரசத்தின் அடர்த்தி)
1) h ρ g 2) hρ(g+a) 3) hρ (g-a)
4) h ρ (a-g) 5) பூச்சியம்.

48. ரொக்கற் ஒன்றினுள்ளே நிலைக்குத்தாக இருக்கும் குறுக்கு வெட்டுப்பரப்பளவு $4.0 \times 10^4cm^2$ ஐ உடைய தாங்கியில் $1.6 \times 10^4kg$ திரவ ஒட்சிசன் உள்ளது.
ரொக்கற் நிலைக்குத்தாக மேல்நோக்கிப் புறப்படும் கணத்தில் தாங்கியின் அடித்தளம்மீதுள்ள அமுக்கம் $4.4 \times 10^4pa$ ஆகும். அக்கணத்திலே ரொக்கற்றின் மேல்நோக்கிய $m5^3$ இலான ஆர்முடுகல்?
1) 1.0 2) 1.1 3) 1.5
4) 2.0 5) 2.2

49.





$C_1$, $C_2$ என்னும் சமாந்தரக் தட்டக் கொள்ளளவிகள் இரண்டு (1) (2) என்னும் மின்சுற்றுகளில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு பற்றரியுடன் தொடுக்கப்பட்டுள்ளன. $C_2$இனது தட்டங்களுக் கிடையே மின்னுழையப்பாளம் ஒன்று புகுத்தப்படுகையில் (1) (2) ஆகிய மின்சுற்றுக்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக.
A - சுற்று (1)இல் ஏற்றம் பற்றரியில் இருந்து வெளியே பாயும்.
B - சுற்றுக்கள் 1, 2 ஆகிய இரண்டிலும் சமவலுக் கொள்ளவம் அதிகரிக்கும்.
C - சுற்று (1)இன் $C_1$இற்கு குறுக்கே உள்ள அழுத்த வித்தியாசம் குறையும் ஆனால் சுற்று (2) இல் மாறாதிருக்கும் மேலுள்ள கூற்றுகளில்
1) A மாத்திரமே உண்மை.
2) B மாத்திரமே உண்மை.
3) A, B மாத்திரமே உண்மை.
4) B, C மாத்திரமே உண்மை.
5) A, B, C மூன்றும் உண்மையானவை.

50. உராய்வில்லாத முசலங்களை உடைய A,B எனும் இரு ஒத்த கொள்கலன்கள் ஒரே வெப்ப நிலையில் ஆனால், வெவ்வேறு அமுக்கங்களில் சம கனவளவு ஒரே இலட்சிய வாயுவை கொண்டுள்ளன. ஒவ்வொரு கொள்கலனிலும் உள்ள வாயுவும் இப்போது ஆரம்ப கனவளவு இரட்டிப்பாகும் வகையில் சமவெப்ப நிபந்தனையில் விரிய அனுமதிக்கப்படுகின்றது. Aஇல் ஏற்பட்ட அமுக்கமாற்றம், Bஇற்கு ஏற்பட்ட அமுக்கமாற்றம் 2: 3 ஆக இருப்பின் Aஇன் திணிவு / Bஇன் திணிவு என்னும் விகிதம்
1) 9 /4 2) 3 / 2 3) 1
4) 2 /3 5) 4 /9

51. வளிவெப்பநிலை -40Cஇல் மாறாதிருக்கும்போது 10m ஆழமான ஏரியொன்றின் அடியில் $4^0C$ என்னும் மாறா வெப்பநிலை உள்ளது. நீரினது வெப்பக்கடத்தாறி 3 மடங்கு கடத்தாறை பனிக்கட்டி கொண்டிருப்பின் இவ் ஏரியின் பரப்பிலே உறையும் பனிக்கட்டிப் படையின் உயர் தடிப்பு.
1) 1.0m 2) 2.5m 3) 5.0m
4) 6.0m 5) 7.5m

52. $0^0C$இல் 10mm சதுரமுகி ஒன்றும் $200^0C$இற்குச் சூடாக்கப்படுகையில் அதன் கனவளவில் ஏற்படும் சதவீத மாற்றம் என்ன?
1) 0.1 2) 0.2 3) 0.4
4) 1.2 5) 2.0

53. புதிதாக வாங்கப்பட்ட குளிரேற்றி (Rcefrigerator) ஒன்று வெறுமையாகவும் மூடப்பட்டும் உள்ள நிலையில் முதன்முறையாக ஆளியிடப்படுகிறது. இக் குளிரேற்றியின் உட்புற வளியினது, நேரத்துடனான, தொடர்பு ஈரப்பதனின் மாறலையும், (RH) தனி ஈரப்பனின் மாறலையும் (AH) திறம்பட வகைகுறிக்கும் வளிகள்,




தொடர்ச்சி பக்கம் IV இல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certicate of Education (Advance Level) Model Examination - 2009 August
மேல்மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும்
மாதிரிப்பரீட்சைத் தொடர் 02

**கணக்கீடு -02** நேரம்: 2மணித்தியாலம்

## பகுதி - 11

முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

01. வரையறுத்த அபேனஸ் பொதுக்கம்பனியின் 31.3.2008இல் உள்ளவாறான பரீட்சைமீதி பின்வருமாறு.

| | வரவு '000 | செலவு '000 |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்குமுதல் | | 4000 |
| கூறப்பட்ட 1/= முன்னுரிமைப்பங்குமுதல் | | 1000 |
| பொது ஒதுக்கம் | | 1100 |
| இடைக்காலப் பங்குலாபம் சா.ப. | 100 | |
| மு.ப. | 50 | |
| முதலீடு | 1000 | |
| கொள்வனவு | 18200 | |
| 1.4.08இல் முடிவுப்பொருள் இருப்பு | 510 | |
| விற்பனை | | 28320 |
| நிறுத்தி வைத்தலாபம் (1.4.2008) | | 2850 |
| வருமதியாளர் | 3920 | |
| சென்மதியாளர் | | 2560 |
| காசு மீதி | 1920 | |
| வங்கி மீதி | 810 | |
| காணிகட்டடம் (கிரயம்) | 4000 | |
| இயந்திரம் (கிரயம்) | 3100 | |
| மோட்டார் (கிரயம்) | 2700 | |
| தளபாடம் (கிரயம்) | 2650 | |
| தேய்மான ஏற்பாடு: (1.4.2008) | | |
| கட்டடம் | | 700 |
| இயந்திரம் | | 820 |
| மோட்டார் | | 1100 |
| தளபாடம் | | 650 |
| ஐ.க. ஏற்பாடு 1.4.2008 | | 240 |
| நிர்வாகச் செலவுகள் | 2950 | |
| விற்பனை விநியோகச் செலவு | 1940 | |
| வங்கிக்கடன் 12% | | 800 |
| வருமானவரி ஏற்பாடு | | 450 |
| செலுத்திய வரி | 740 | |
| | 44590 | 44590 |

★ மேலதிக தகவல்கள்

1. 31.03.2009இல் இறுதி இருப்பு தொடர்பான தகவல்கள்

| உருப்படி | கிரயம் | நிகரப்பெறுமதி |
|---|---|---|
| A | 120,000 | 105,000 |
| B | 210,000 | 240,000 |
| C | 90,000 | 80,000 |
| D | 420,000 | 425,000 |

**இருப்பு மதிப்பீடானது உருப்படி ரீதியாக கணிப்பிடுவது இந் நிறுவனத்தின் கொள்கையாகும்.**

2. 30.6.2008ல் 300,000 ரூபா பெறுமதியான மோட்டார் வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் 30.9.2008இல் 50,000 ரூபா கொள்விலையான தளபாடம் ஒன்று 30,000 ரூபாவிற்கு விற்கப்பட்டது. தளபாட விற்பனை மூலம் பெற்ற காசு காசுக்கணக்கிலும், விற்பனைக் கணக்கிலும் பதியப்பட்டது. தவிர வேறு எப்பதிவும் செய்யப்படவில்லை. இத்தளபாடம் 1.9.2005இல் கொள்வனவு செய்யப்பட்டது. நிறுவனமானது கொள்வனவு செய்யும் ஆண்டுக்கு முழு ஆண்டுத்தேய்மானம் கணிப்பதுடன், விற்பனை செய்யும் ஆண்டுக்கு தேய்மானம் கணிப்பிடுவதில்லை என்ற கொள்கையைப் பின்பற்றுகின்றது.
3. தேய்மானமானது கிரயத்தின் மீது பின்வருமாறு கணிக்குக.
   - கட்டடம் ஆண்டுக்கு 5%
   - மோட்டார் ஆண்டுக்கு 8%
   - இயந்திரம் ஆண்டுக்கு 10%
   - தளபாடம் ஆண்டுக்கு 8%
4. காணிகட்டடம் என்பதனுள் 2,500,000 ரூபா காணி உள்ளடங்கியுள்ளது. இது 3,000,000 ரூபா என மீள்மதிப்பிடப்பட்டுள்ளது.
5. நிறுவனம் 12,000 ரூபா கடன்பட்டோரான சதாவிற்கு விசேட ஏற்பாட்டினைச் செய்வதற்கும் மீதிக் கடன்பட்டோரில் 5% ஐ ஐயக்கடனுக்கான பொது ஏற்பாட்டை மேற்கொள்கின்றது.
6. நடைமுறை ஆண்டு வரி 850,000 ரூபா ஏற்படுத்தப்பட்டதுடன், சென்ற ஆண்டு வரி 400,000 ரூபாவாக இணக்கப்பட்டு செலுத்தப்பட்டது.
7. இயக்குநர் சபையானது பொதுஒதுக்கத்திற்கு 1,000,000 ரூபாவை மாற்றுவதெனவும் ஏற்கனவே உள்ள 8 சாதாரண பங்குகளுக்கு 2 பங்கு உபகாரப்பங்கு வழங்குவதெனவும் தீர்மானித்ததுடன், சாதாரண பங்குகளுக்கு 5% பங்குலாபத்தையும் பிரேரித்தது.
8. வங்கிக்கடனானது வட்டியுடன் வருடாந்தம் வங்கி நடைமுறைக் கணக்கிலிருந்து கழிப்பது என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது. வங்கிக்கடனும் அதற்கான வட்டியுமாக 176,000 ரூபாவை வங்கி நடைமுறைக்கணக்கில் வரவில் வைத்திருந்தது. இது பற்றிய தகவல் வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக்கூற்று மூலம் தெரியவந்தது.
9. 31.03.2009இல் அட்டுறு செலவுகளும், முற்பணச் செலவுகளும் பின்வருமாறு:

| | 31.03.2009 அட்டுறு | 31.03.2009 முற்பணம் |
|---|---|---|
| மின்சாரம் | 20,000 | - |
| விற்பனைத் தரகு | | 12,000 |
| விளம்பரம் | 32,000 | - |

**வேண்டப்படுவது.**

1. சிராக்கங்கள் 4, 5, 7, 8 என்பவற்றுக்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.
2. வரையறுத்த அபனேஸ் பொதுக்கம்பனியானது பிரசுரிப்பதற்கு பொருத்தமான முறையில் பின்வரும் நிதிக் கூற்றுக்களை (குறிப்புக்கள் உட்பட) தயாரிக்குக.
   - 31.03.2009இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று
   - 31.03.2009இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மாற்றக் கூற்று
   - 31.03.2009இல் உள்ளவாறான ஐந்தொகை.

02. அ. சிமான் நிறுவன ஊழியர்களது சம்பளம் தொடர்பான பேரேட்டுக்கணக்குகள் பின்வருமாறு

**சம்பளக்கட்டுப்பாட்டுக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| ஊழியர் முற்பணம் | 3200 | சம்பளம் | 98000 |
| ஊழியர் கடன் | 4000 | | |
| அங்கத்துவக்கட்டணம் | 400 | | |
| EPF | 7840 | | |
| காசு | 82560 | | |
| | 98000 | | 98000 |

**சம்பளக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| சம்பளக் கட்டு க/கு | 98000 | இ/ந | 98000 |
| | 98000 | | 98000 |

**EPF (ஊழியர் கடன் சேமலாபநிதிக் க/கு)**

| | | | |
|---|---|---|---|
| மீதி.செ | 19600 | சம்பளகட்டு | 7840 |
| | | ஊழி.செ.நிதி.செ | 11760 |
| | 19600 | | 19600 |
| | | மீதி.வ | 19600 |

**ஊழியர் சே.நிதி.செலவு க/கு**

| | | | |
|---|---|---|---|
| EPF க/கு | 11760 | இ/ந | 11760 |
| | 11760 | | 11760 |

**ஊழியர் கடன் க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீதி. வ. | 32000 | ச. கட் | 4000 |
| | | மீதி.செ. | 28000 |
| | 32000 | | 32000 |
| மீதி. வ. | 2800 | | |

**ஊழியர்முற்பணக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீதி.வ. | 12000 | ச.கட் | 3200 |
| | | மீதி.செ. | 8800 |
| | 12000 | | 12000 |

மேலதிக தகவல்கள்

1. இந்நிறுவனத்தில் ரகு, ரவி, ரமேஸ், ரதீஸ் ஆகிய ஊழியர்கள் அடிப்படைச்சம்பளத்தை சமமாக பெறுகின்றனர். இவர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படியாக மாதாந்தம் 2000 வழங்கப்படுவதுடன் ரகு, ரமேஸ் ஆகிய ஊழியர்கள் தமது அடிப்படைச்சம்பளத்தில் 25% இனை மேலதிக ஊதியமாக (O.T) பெறுகின்றனர்.
2. ஒவ்வொரு ஊழியரும் பண்டிகைக்கால முற்பணமாக ரூ. 8000/= ஐ ஜனவரி மாதத்தில் பெற்றிருந்தார். பண்டிகை முற்பணத்தை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து 10 மாதங்களில் அறவிடுவது வழக்கமாகும்.
3. ரகு, ரமேஸ் கடனாக 40000 ரூபாவை பெற்றிருந்தனர். இவர்கள் கடனுக்காக சம்பளத்தில் சமமான தொகை அறவிடப்படுகின்றது.
4. EPF 8% மொத்தச்சம்பளத்தில் அறவிடுவது வழக்கமாகும்.
5. ஊழியர்களிடமிருந்து அங்கத்துவக்கட்டணம் சமமாக அறவிடுவது நிறுவன வழமையாகும். மேற்கூறப்பட்ட தகவல்களைக் கருத்தில் கொண்டு சீமான் நிறுவன சம்பளப்பட்டியலைத் தயாரிக்குக.


ஆ. சர்மா கம்பனியில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு ROWAN முறையைப் பயன்படுத்தி உபகாரப்பணத்தை வழங்குகின்றது. சதா என்ற ஊழியர் தொடர்பான விவரம்
அனுமதித்த காலம் 10 மணி
எடுத்த காலம் 8 மணி
கூலி வீதம் மணிக்கு 120 ரூபா


1. சதாவிற்கான உபகாரப்பணம் எவ்வளவு?
2. மொத்தக் கூலியைக் குறிப்பிடுக.

இ. பிரபா கம்பனியின் மூலப்பொருள் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு
வருடாந்த கேள்வி அலகுகள் 12000
பொருள் ஒன்றுக்கான கிரயம் 4 ரூபா
இருப்புவைத்தல் கிரயம், பொருள் கிரயத்தில் 20% ஆகும்.
ஒரு கட்டளைக் கிரயம் 12 ரூபா
காலம் - 3-6 வாரம்
பயன்படுத்திய அலகு குறைந்தது 100, கூடியது 400

1. சிக்கனக் கட்டளைத் தொகை 2. மறுகட்டளை இடும் மட்டம்
3. ஆகக்கூடிய இருப்பு மட்டம் 4. ஆகக் குறைந்த இருப்பு மட்டம்
5. வருடத்தில் அனுப்பவேண்டிய கட்டளைகளின் எண்ணிக்கை

03. அ. பொம்மைகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வரையறுத்த ML கம்பனியின் பொம்மை ஒன்றின் விற்பனை விலை 100 ரூபா ஆகும். 1200 பொம்மை உற்பத்தி விற்பனை மட்டத்தில் இலாபநட்ட வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.




மேலே உள்ள தகவல்களை பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. சமப்பாட்டுப் புள்ளியினை அலகுகளிலும், பெறுமதியிலும் கணிப்பிடுக.
2. பாதுகாப்பு எல்லை அலகுகளில் 3. பொம்மை ஒன்றுக்கான பங்களிப்பு
4. பங்களிப்பு வீதம்.
5. 1000 பொம்மைகளின் விற்பனை மட்டத்தில் உழைக்கக்கூடிய இலாபம்/ நட்டத்தைக் கணிப்பிடுக.
6. ஏனைய காரணிகள் மாறாத நிலையில் நிலையான கிரயம் ரூபா 6000 இனால் அதிகரிக்கப்பட்டமையினால் மாறும் கிரயம் முன்னைய நிலையில் இருந்து ரூபா 5 இனால் குறைக்கப்பட்டது எனில்.
   1. புதிய சமப்பாட்டு புள்ளி (அலகுகளில்) கணிப்பிடுக.
   2. ரூபா 18,000 இலாபத்தினை அடைவதற்கு விற்பனை இலக்கினை கணிப்பிடுக.
   3. எல்லைக்கிரய அடிப்படையில் (18,000 இலாபத்தினை காட்டும் வகையில்) வருமானக் கூற்றினை தயாரிக்குக.

ஆ. பாலேஸ் நிறுவனம் ஒரு செயற்திட்டத்தில் முதலீடு செய்ய விரும்பி அடிப்படைக்கிரயமாக 40,000 ரூபாவை செலவிடுகின்றது. இதன் 4 வருட செயல்திட்ட காசுப்பாய்ச்சல் பின்வருமாறு.

| வருடம் | காசுப்பாய்ச்சல் |
|---|---|
| 1 | 18,000 |
| 2 | 12,000 |
| 3 | 20,000 |
| 4 | 8,000 |

| வருடம் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| 8% கழிவீட்டுக்காரணி | 0.926 | 0.857 | 0.794 | 0.735 |

**வேண்டப்படுவது**

1. செயற்றிட்டம் திரும்பப்பெறும் காலம்
2. கழிவுக் காரணி 8% எனக்கொண்டு தேறிய நிகழ்காலப் பெறுமதியைக் கணிக்குக

04. வரையறுத்த வினோத் கம்பனி பங்கு ஒன்று 20/= வீதம் 80000 சா.பங்குகளை பின்வருமாறு பணம் செலுத்தப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் வழங்கியது.

★மனு 8/= ★ஒதுக்கம் 7/= ★அழைப்பு 5/=

January 10ஆம் திகதி 90000 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன. இதில் 10000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. மீதி Feb 20 இல் 2500 பங்குக்கு விண்ணப்பித்த சதா தவிர ஏனையோரிடம் பணம் பெறப்பட்டது.

March 1இல் March 30 அல்லது அதற்குமுன் பணம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் அழைப்பு விடப்பட்டது. March 30 சதாவும், 1200 பங்குகளைப் பெற்ற கலையும் தவிர ஏனையோரிடம் அழைப்புப்பணம் பெறப்பட்டது. நிலுவை அழைப்புக்களுக்கு 5% வட்டி அறவிடுவது கம்பனியின் வழமையாகும்.

April 10ஆம் திகதிக்கு முன் நிலுவைகளையும் செலுத்துமாறும் தவறின் மீள்விற்பனை செய்யப்படும் என பங்குதாரருக்கு அறிவிக்கப்பட்டது. April 11இல் நிலுவையாக உள்ள அனைத்து பங்குகளும் ரூபா 19/= வீதம் மீள் விற்பனை செய்யப்பட்டது. மீள்விற்பனைச் செலவு 3000/= செலுத்தப்பட்டது. சதாவுக்கும், கலைக்கும் நிலுவைப்பணத்தையும், வட்டியையும் மீள்விற்பனைச் செலவையும் கழித்து பணம் செலுத்தப்பட்டது.

1. பேரேட்டுக் க/கு
2. ஐந்தொகையில் இடம்பெறும் அம்சங்களைக் காட்டுக.

05. வரையறுத்த சம்பத் நிறுவனத்தின் 31.3.2008, 31.3.2009இல் எடுக்கப்பட்ட மீதி பின்வருமாறு

| | 31.3.2008 '000 | 31.3.2009 '000 |
|---|---|---|
| காணிக்கட்டடம் | 1400 | 2750 |
| மோட்டார் வாகனம் | 2500 | 2565 |
| கணினி இயந்திரம் | 1000 | 1550 |
| முதலீடுகள் | 1000 | 1200 |
| கடன்பட்டோர் | 200 | 120 |
| இருப்புக்கள் | 240 | 160 |
| வங்கி மீதி | 180 | 445 |
| நன்மதிப்பு | 50 | - |
| 10% தொகுதிக் கடன் | 600 | 900 |
| பங்கு இலாப சென்மதி | 30 | 15 |
| வருமானவரி ஏற்பாடு | 50 | 70 |
| தொ. கடன் வட்டி சென்மதி | 20 | - |
| கணக்காய்வு கட்டணம் சென்மதி | 20 | - |
| முற்பண காப்புறுதி | - | 10 |
| கடன் கொடுத்தோர் | 150 | 110 |

31.3.2009 இல் எடுத்த உரிமைமாற்றக் கூற்று பின்வருமாறு:

| விவரம் | சாதா.பங்கு | மு.பங்கு | மீள்.மதி மிகை | பொ.ஒது | இ/நட்டம் |
|---|---|---|---|---|---|
| 1.4.2008 மீதி | 3000 | 2000 | 800 | 200 | (300) |
| வரிகழித்த பின் இலாபம் | | | | | 560 |
| கணினி மீள்மதிப்பீடு | | | 200 | | |
| புதிய பங்கு வழங்கல் | 1600 | | | | |
| பங்கு மீட்பு | | (500) | | | |
| பொது ஒதுக்கம் | | | | 100 | (100) |
| செலுத்திய ப. இலாபம் | | | | | |
| சா.பங். | | | | | (25) |
| மு.பங். | | | | | (15) |
| இறுதி ப. இலாபம் | | | | | |
| மு.பங். | | | | | (15) |
| | 4600 | 1500 | 1000 | 300 | 105 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதிகவியலின் iiஆம் பக்கத் தொடர்ச்சி....

54. புறக்கணிக்கத்தக்க வெப்பக் கொள்ளளவையுடைய கொள்கலன் ஒன்றிலிருக்கும் சூடான திரவம் ஒன்றின் வெப்பநிலை, அது திண்மமாகத் தொடங்குவதற்குச் சற்று முன்னர், நிமிடத்துக்கு $2^{\circ}C$ வீதம் வீழ்ச்சியடைக் காணப்பட்டது, பின்னர் வெப்பநிலை 20 நிமிடங்களுக்கு மாறாதிருக்கும்போது அத்திரவம் முழுவதும் திண்மமாக மாற்றமடைந்தது. இத்திரவத்தினது (தன் வெப்பக் கொள்ளளவு) / (உருகலின் தன் மறை வெப்பம்) என்னும் விகிதம்

1) $40k^{-1}$ 2) $10k^{-1}$ 3) $1k^{-1}$
4) $1/10k^{-1}$ 5) $1k^{-1}$

55. உருவில் x,y என்னும் பிணைந்த (சர்வசமமானவையும் ஒரே அவத்தையில் காலுகின்றவையுமான) அலைமுதல்கள் இரண்டு காட்டப்பட்டுள்ளன. புள்ளி Pஇல் ஆக்க தலையீடு ஒன்று நிகழ்வதற்கு நடைமுறைப்படியிலமைந்த உயர் அலைநீளத்தின் சாத்தியப் பெறுமானம்,





1) 5.0m 2) 3.3m 3) 2.0m
4) 1.3m 5) 0.5m.

56. $S_1$,$S_2$ என்னும் இரு சற்றலைற்றுக்கள் வட்டமண்டிலங்களிலே, கோள் ஒன்றைச்சுற்றி வருகின்றன. $S_1$,$S_2$இன் சுழற்சி ஆவர்த்தனங்கள் முறையே 1hஉம், 8hஉம் ஆகும். ($S_1$இன் கதி) /($S_2$இன் கதி) என்னும் விகிதம்


1) 4 2) 2 3) 1
4) 1 /2 5) 1 /4

57. உருவில் காட்டப்பட்டுள்ள ஒழுங்காக்கிச் சுற்றில் சேனர் இருவாயியின் உடைவு அழுத்தம் 6V ஆகும். இவ் இருவாயியினூடான ஓட்டம் mAஆகும்,

1) 70
2) 13
3) 7
4) 63
5) 7




58. உருவில் காட்டப்பட்டுள்ளதைப்போல பாய அடர்த்தி B யை உடைய சீர்க்காந்தப் புலத்துக்குச் செங்குத்தாக மேல்முகம் இருக்கும் வகையில், செவ்வகக்கடத்தும் கீலம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதனூடாகப் பாயும் ஓட்டம் Iஇன் திசையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அப்போது ஹோல் வோல்ற்றளவு $V_H$ ஒன்று நிலைநாட்டப்பட்டிருக்கும். பின்வரும் கூற்றுக்களை கருதுக.





A - முகம் N ஐ விட முகம் M கூடிய நேர் அழுத்தத்திலிருப்பின் இப்பாளம் ஒரு P வகைக்குறை கடத்தியாக இருக்கமுடியும்.
B - ஹோல் வோல்ற்றளவு, காந்தப்பாய அடர்த்திக்கு நேர்விகித சமன்.
C - ஹோல் வோல்ற்றளவு மின் ஓட்டத்துக்கு நேர்விகித சமன்.
மேலுள்ள கூற்றுக்களில் உண்மையானது உண்மையானவை,

1) B மட்டும் உண்மை. 2) A,B மட்டும் உண்மை.
3) B,C மட்டும் உண்மை. 4) A,C மட்டும் உண்மை.
5) A,B,C ஆகிய யாவும் உண்மை.


59. முறையே 3k,2k,k என்னும் வெப்பக்கடத்தாறுகளையுடையவையும் ஒத்த பரிமாணங்களைக் கொண்டவையுமான $R_1$, $R_2$, $R_3$ ஆகிய கோல்கள் அவற்றின் சுயாதீன அந்தங்கள் முறையே $100^0C$, $50^0C$, $0^0C$ என்ற வெப்ப நிலைகளில் பேணப்படும்போது, மறு அந்தங்கள் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒருமித்து இணைக்கப்பட்டுள்ள அவற்றின் வளைந்த மேற்பரப்புக்கள் நன்கு காவற் கட்டிடப்பட்டிருப்பின் அக்கோலங்களின் இணைப்பில் உள்ள வெப்பநிலை,

1) $75^oC$
2) $(200/3)^oC$
3) $40^oC$
4) $(100/3)^oC$
5) $30^oSC$




60. உருவில் காணப்படும் கொள்ளளவிகளில் ஒழுங்கில் முழுவிடயங்கள் A, Bஇற்கு குறுக்கே 1kv அழுத்த வித்தியாசம் ஒன்று பிரயோகிக்கப்பட்டபோது தொகுதியிலே சேகரிக்கப்பட்ட மொத்த ஏற்றம் 0.75mc ஆகக் காணப்பட்டது. கொள்ளளவி C இன் கொள்ளளவம் μF இல்

1) 0.5
2) 2.0
3) 2.5
4) 310
5) 315




நன்றி: மேல்மாகாணக் கல்வித்திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

## கணக்கீட்டின் iiiஆம் பக்கத் தொடர்ச்சி....

மேலதிக தகவல்கள்

1. மோட்டார் வாகனங்கள், கணினி இயந்திரம் மீது ஆண்டு புத்தக பெறுமதி மீது 10% தேய்வு இடுவது கொள்கையாகும். 350,000/= புத்தக பெறுமதி உடைய மோட்டார் வாகனத்தைக் கொடுத்து 2.4.2008 இல்700,000/= கிரயமுள்ள வாகனம் கைமாற்றாக பெறப்பட்டது. இவை தொடர்பாக கொடுத்த காசு 200,000/ஆகும்.
2. ஏனைய வருமானம் என்பதில் மோட்டார் கைமாற்று இலாபமும், முதலீட்டு வருமானம் 50,000/= உம் உள்ளடங்கும்.
3. ஆண்டுக்காலத்திற்கான விற்பனவு 6800 ஆகும்.இவற்றில் கடன்விற்பனை 5400 ரூபா. மொத்த இலாபம் 1600, நிர்வாகச்செலவுகள் 615, விற்பனை செலவுகள் 415, நன்மதிப்பு பதிவழிப்பு 50 ஆகும்.
4. 1.10.2008 இல் 10% தொகுதிக்கடன் கொள்வனவு செய்யப்பட்டது.

வேண்டப்படுவது

1. நேரில் முறையில் காசு பாய்ச்சல் கூற்று
2. பின்வரும் கணக்கீட்டு விகிதங்கள் காண்க.

அ. இருப்பு புரள்வு வீதம் ஆ. வட்டி காப்புவீதம்
இ. கடன்பட்டோர் புரள்வு வீதம் ஈ. மொத்தச் சொத்து மீதான வருவாய் வீதம்

06. இரண்டு வகையான உற்பத்தி பொருள் உற்பத்தியில் ஈடுபடும் மெகா தொழிற்சாலை ஒன்றின் இரண்டு திணைக்களங்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| நேரில் கூலி | 20000 ரூபா | நேரில் மூலப்பொருள் | 10000 ரூபா |
| ஊழியர் நலன் பேணல் | 4000 ரூபா | வாடகை | 8000 ரூபா |
| இயந்திர பெறுமானத் தேய்வு | 12000 ரூபா | ஏனைய மேந்தலை | 18000 ரூபா |

1. ஒவ்வொரு ஊழியரும் குறித்த மாதத்தில் 200 மணித்தியாலம் வேலை செய்கின்றனர்.
2. திணைக்களம் A இல் 15 ஊழியர்களும் திணைக்களம், B இல் ஊழியர்களும் உள்ளனர்.
3. நேரில் மூலப் பொருட்கள் 3: 2 என்றவாறு இதற்கிடையே பகிர்தல்
4. திணைக்களம் A இல் 4 இயந்திரங்களும் திணைக்களம் B இல் 2 இயந்திரங்களும் உள்ளன. இவையாவும் ஒரே தன்மை வாய்ந்தவை.
5. இரண்டு நிலப்பரப்புக்களும் சமநிலப்பரப்பளவு உடையவை
6. ஏனைய மேந்தலை மொத்த மேந்தலை விகிதாசார அடிப்படையில் பகிர்தல்
7. உற்பத்தி தொழிற்சாலையில் P பொருள், Q பொருள் உற்பத்தி தொடர்பான மெய் அலகு கிரயம்வருமாறு

| கிரயம்வருமாறு | | P | Q |
|---|---|---|---|
| நேர்மூலப் பொருள் | | 400 | 300 |
| நேர் ஊழியம் | | 800 | 600 |
| நேரடி ஊழிய மணி | | | |
| திணைக்களம் | A- | 5 மணி | 3 மணி |
| | B- | 8 மணி | 5 மணி |

வேண்டப்படுவது

1. மேந்தலைக் கிரயங்களைப் பகிர்வு செய்க.
2. நேர் ஊழிய மணிவீத அடிப்படையில் உறிஞ்சல் வீதம் தருக.
3. Pபொருள்,Q பொருள் தொடர்பான உற்பத்திக் கிரயத்தைக் காண்க.

## இரசாயனவியலின் முதலாம் பக்கத் தொடர்ச்சி...

37. ஆவி நிலையில் H பிணைப்பை உடைய சேர்வை எது?
1) HF 2) $NH_3$ 3) $H_2O$ 4) HCl 5 $PH_3$

38. பின்வரும் சேர்வைகளுள் எது கொதிநிலை கூடியது?
1) $H_2S$ 2) HCl 3) $PH_3$ 4) $CH_4$ 5 $SiH_4$

39. A,B,C,D மூலகங்களின் மின்னெதிர் இயல்புப் பெறுமானங்கள் முறையே 1.2, 1.5, 3.5, 4.0 ஆகும். எம்மூலகங்கள் சேர்ந்து உருவாக்கும் பிணைப்பு கூடிய பங்கீட்டுவலுத் தன்மையானது?
1) A, B 2) A, C 3) A, D 4) B, C ) C, D

40. பின்வரும் சேர்வைகளுள் எது ஈதற்பிணைப்பு உருவாக்கத்தால் உருவாாது?
1) $N_2O_5$ 2) $N_2O_3$ 3) $HNO_5$ 4) $NH_4Cl$ 5) $Al_2Cl_6$

* 41-50 வரையான வினாக்களுக்கு பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுக.

| விடைத்தெரிவு இலக்கம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கூற்றுக்கள் | a,b சரி | b,c சரி | c,d சரி | a,d சரி | வேறு சேர்க்கை |

41. ஒபிற்றல்கள் தொடர்பான கூற்றுக்களுள் சரியானது/சரியானவை,
a) ஓர் அணுவின் ஒபிற்றல்கள் கலப்பில் ஈடுபடுவதாலேயே கலப்புஒபிற்றல்கள் தோன்றுகின்றன.
b) வெவ்வேறு மூலக அணுக்களின் ஒபிற்றல்கள் நேர்கோட்டில் மேற்பொருந்துவதால் σ பிணைப்பு தோற்றுவிக்கப்படுகின்றது.
c) வெவ்வேறு மூலக அணுக்களின் p ஒபிற்றல்கள் பக்கவாட்டு மேற்பொருந்துகை மூலம் π பிணைப்பு தோற்றுவிக்கப்படுகிறது.
d) வெவ்வேறு மூலக கலப்பு ஒபிற்றல்கள் பக்கவாட்டில் மேற்பொருந்துகை மூலம் π பிணைப்பு தோற்றுவிக்கப்படும்.

42. பின்வரும் எம்மூலக்கூறில்/எம்மூலக்கூறுகளில் கலப்பு ஒபிற்றல் கொண்ட அணு காணப்படுகிறது?
a) $CH_4$ b) $BeCl_2$ c) $N_2$ d) HF

43. நேர்கோட்டு வடிவமுடைய மூலக்கூறுகளைக் கொண்ட சேர்வைகளின் VSEPR குறியீட்டைத் தருக.
a) $NH_3$ b) $Ax_2El$ c) $Ax_2E_2$ d) $Ax_3E_3$

44. திரவநிலையில் H பிணைப்பினால் ஏற்படும் மூலக்கூறு எது? /மூலக்கூறுகள் எவை?
a) $NH_3$ b) $H_2O$ c) $CH_3OCH_3$ d) $CHCl_3$

45. ஒரு மூலக்கூறில் 4 அணுக்களை ஒரே நேர்கோட்டில் காணக்கூடியதாக இருப்பின், அம் மூலக்கூறு எது? / அம் மூலக்கூறுகள் எவை?
a) CH=CH b) $CH=CH_2$ c) H-P=P-H d) $CH_3$-C≡C-$CH_2$.

46. பின்வருவனவற்றுள் மையஅணுவில் உள்ள இலத்திரன் முகில்கள் நான்முகி அமைப்பில் காணப்படுகின்றன?
a) $CH_4$ b) $H_2O$ c) $NH_3$ d) $CH_2Cl$

47. ஒரே தளத்தில் எல்லா அணுக்களும் அமையக்கூடிய மூலக்கூறு எது?
a) $CH_2$=$CH_2$ b) $NH_2$=$NH_2$ c) $XeF_4$ d) $ICl_3$

48. பின்வருவனவற்றுள் எது/எவை பங்கீட்டுவலுப் பிணைப்பை ஏற்படுத்தும்?
a) உலோக மூலகங்கள் சேர்ந்து.
b) உலோக, அல்லுலோக சேர்வைகள் சேர்ந்து.
c) அல்லுலோக, அல்லுலோக மூலகங்கள் சேர்ந்து.
d) மேதரப்பட்டுள்ள எல்லா வகைகளும்.

49. மைய அணு அட்டக இலத்திரன் நிலையமைப்பைக் கொண்டிராத மூலக்கூறு எது?/ மூலக்கூறுகள் எவை?
a) $BCl_3$ b) $IF_5$ c) $SF_6$ d) $PCl_5$

50. மைய அணுவின் வலுவளவு ஓட்டில் சம இலத்திரன் எண்ணிக்கையைக் கொண்டிராத அயன் எது?/ அயன்கள் எவை?
a) $[Fe(N_6)]^{4-}$ b) $[Co(NH_3)_6]^{3+}$
c) $[Zn(NH_3)_4]^{2+}$ d) $[Ni(NH_3)]^{2+}$

* 51-60 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கான வழிகாட்டி.

| முதலாம் கூற்று | 2ஆம் கூற்று | தெரிவு இலக்கம் |
|---|---|---|
| உண்மை | உண்மையும், தகுந்த விளக்கமும். | 1 |
| உண்மை | உண்மை, ஆனால் தகுந்த விளக்கம் இல்லை. | 2 |
| உண்மை | பொய். | 3 |
| பொய் | உண்மை. | 4 |
| பொய் | பொய். | 5 |

| | கூற்று - 1 | கூற்று - 11 |
|---|---|---|
| 51. | திண்ம பொட்டாசியம் குளோரைட்டு ஒரு நல்ல மின்கடத்தி ஆகும். | பொட்டாசியம் குளோரைட்டு ஓர் அயன் சேர்வை ஆகும். |
| 52. | பரந்தனில் NaOHஇன் பரும்படித் தயாரிப்பில்இரும்பு அனோட்டுக்கள் பயன்படுத்தப்பட்டன. | இரும்பு, NaOH உடன் தாக்கமடைவதில்லை. |
| 53. | வெள்ளி ஒட்சைட்டும், வெள்ளி குளோரைட்டும் அமோனியா கரைசலில் கரைகின்றன. | இவை நீரில் கரையக்கூடிய சிக்கல் அயனை அமோனியாவுடன் உண்டாக்குகின்றன. |
| 54. | புளோரின் நேர் ஒட்சியேற்ற எண்களைக் கொண்டிருப்பதில்லை. | புளோரின் அலசன் கூட்டத்தைச் சேர்ந்ததாகும். |
| 55. | B இன் 4ஆம் அயனாக்க சக்தியானது, Be இன் 3ஆம் அயனாக்க சக்தியிலும் கூடுதலானது. | ஆவர்த்தனத்தில் இடமிருந்து வலமாக 3ஆம் அயனாக்க சக்தி குறைந்து செல்கின்றது. |
| 56. | $CO_2$ இற்கும், $SiO_2$ இற்கும் சமனான வடிவம் உண்டு. | $CO_2$ உம், $SiO_2$ உம் பங்கீட்டுப் பிணைப்பி லான எளிய மூலக்கூறுகள் ஆகும். |
| 57. | நேர்க்கதிர்கள் மின்காந்தம் ஒன்றின் எதிர்முனைவை நோக்கிக் கவரப்படுகின்றன. | நேர்க்கதிர்கள் புரோத்தன்களைக் கொண்டுள்ளன. |
| 58. | $H_2S$ ஒட்சியேற்றும் கருவியாகத் தொழிற்படும். | $H_2S$ இல் S ஆகக்குறைந்த ஒட்சியேற்ற நிலை யில் உள்ளது. |
| 59. | ஆவர்த்தன அட்டவணையின் 4ஆம் ஆவர்த்தனத்தில் 18 மூலகங்கள் உண்டு. | 4ஆவது பிரதான சக்திமட்டத்தில் 18 இலத்தி ரன்கள் வரை நிரப்பப்படலாம். |
| 60. | $CsCl_2$ கரைசலில், $Br_2$ தாக்கம் அடைந்து $CsBr_2$ உண்டாகின்றது. | $Br_2$ ஆனது $Cl_2$ இலும் பார்க்கச் சிறந்த ஒட்சியேற்றும் கருவியாகும். |

தொடர்ச்சி அடுத்தவார இணைப்பிதழில்...

★ உங்கள் அபிமான உதயன் கல்விச்சுடர் வழங்கும்
உயர்தர மாணவர்களுக்கான தயார்படுத்தல் வினாத்தாள்கள்
மாகாணக்கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் ... மாதிரி வினாத்தாள்கள் யாழ் மாணவர்களின் நலன் கருதி
உங்கள் அபிமான கல்விச் சுடரில் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில். வெளிவருகின்றன.
மேலதிக தொடர்புகளுக்கு: 071-4273035/ 071-6850005

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மனித உரிமை மீறல்; சர்வதேச விசாரணையே அவசியம்!

## ஐ.நா. உயர் பிரதிநிதி விடாப்பிடி



இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையையே விரும்புவதாக ஐ.நா வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஆணையாளர் ஜோன் ஹோம்ஸ் மீண்டும் தெரிவித்துள்ளார்.

எந்த அரசுக்கும் பொறுப்புக்கூறும் தன்மை முக்கியமானது என அல் ஜஸீரா தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ள அவர், இலங்கை அரசின் செயற்பாடுகளை ஆராய்ந்தால் சட்டத்தின் பிடியிலிருந்து விதிவிலக்களிக்கப்படுவது அதிகமாகக் காணப்படுகின்றது என்றும் - இலங்கையிலேயே காணாமற்போனவர்கள் அதிகம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள அகதிமுகாம்களின் நிலை தொடர்பாக அல்ஜஸீரா தொலைக்காட்சி வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யுத்தத்தின் இறுதித் தருணங்கள் மிகவும் அவதானமாக உலகின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களின் குரல்கள் அச்சம் மற்றும் பாதுகாப்பின்மையால் மௌனமாக்கப்பட்டுள்ளன.

யுத்தக் குற்றம், பாலியல் வல்லுறவு, சித்திரவதை மற்றும் படுகொலை, தொடர் குண்டு வீச்சுகள் குறித்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அல் ஜஸீரா தனது சொந்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் மனிதாபிமானப் பணியாளர்களுடன் உரையாடியுள்ளது.

இவர்கள் இதுவரை மௌனமாகவே இருந்தனர். உலகம் நம்பவேண்டும் என இலங்கை அரசு எதிர்பார்க்கும் விடயங்கள் இந்த மக்களின் தகவல்களால் கேள்விக் குறியாகியுள்ளன.

''கடந்த மூன்று நாள்களாக நாங்கள் குளிக்கவில்லை. இரவு மாத்திரம் உணவு கிடைக்கின்றது. அழுக்கில் வாழ்கின்றோம். எங்கிருந்தும் அசுத்த நாற்றம் வருகின்றது'' எனத் தமிழ் அகதி ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினரின் பிரசன்னம் காரணமாக அகதிகள் உரையாடுவதற்கு அச்சமடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

சர்வதேச மனிதாபிமானப் பணியாளர்களும் அச்சமடைந்து காணப்பட்டனர்.

நிலைமை மிக மோசமாகவுள்ளது. கூடாரங்கள் போதாது. நீர் மற்றும் சுகாதார வசதி மோசமாகவுள்ளது என அவர்கள் தெரிவித்தனர்.

பாலியல் துஷ்பிரயோகம் குறித்த குற்றச்சாட்டுகள் அதிகளவில் காணப்படுகின்றன. சுயாதீன விசாரணைகள் இல்லாமல் இதனை உறுதிசெய்ய முடியாது.

அரசு இவ்வாறான விசாரணைகளை மறுக்கின்றது.

''நான் இதற்குக் காரணம் யார் எனச் சொல்லமாட்டேன். இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் துன்புறுத்தலும் முறைகேடான நடவடிக்கைகளும் காணப்படுகின்றன. விரக்தியே இதற்குக் காரணமாக இருக்கலாம். எனினும் மிக மோசமான சம்பவங்களுக்கு அதிகாரிகளே காரணம்'' என்கிறார் ஜோன் ஹோம்ஸ்.

எனினும் அரசு இதனை நிராகரித்துள்ளதுடன் தனக்கு எதிரான பிரசாரத்தின் ஒரு பகுதியே இது எனத் தெரிவித்துள்ளது.

முதலில் கொலைக் குற்றச்சாட்டு. தற்போது பாலியல் வல்லுறவு துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகள் எனத் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம.

''இவை அனைத்தும் கட்டுக்கதைகள். இடம்பெயர்ந்தவர்களைப் பராமரிக்க நாங்கள் மிகவும் ஒழுக்கம் நிறைந்த நிர்வாகத்தைப் பணியில் அமர்த்தியுள்ளோம்'' என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

''அரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் களங்கத்தை ஏற்படுத்தவே இவ்வாறான கட்டுக்கதைகள் முன்வைக்கப்படுகின்றன'' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூலை14

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் 2009/2010 கல்வியாண்டில் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான வியாபார நிர்வாக முதுமாணிக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருப்பதுடன் 3 வருடங்களுக்குக் குறையாத தொழில்நிர்வாக அனுபவம் உடையவராக இருத்தல்வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை14

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் 2009/2010 கல்வியாண்டில் மென்பொருள் எந்திரவியல் இளமாணிப் பட்ட கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 சித்திகளைப் பெற்றிருத்தல்வேண்டும். விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (201)

# முகாம்களுக்குள் நடப்பவற்றை மூடி மறைக்கவே மனிதாபிமான அமைப்புகளுக்குக் கதவடைப்பு!

## தொண்டுப் பணியாளர்களை மேற்கோள்காட்டி 'ரொய்ட்டர்' விமர்சனம்

கொழும்பு,ஜூலை14

இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களுக்குள் நடைபெறும் விடயங்கள் வெளியில் தெரியவராமல் தடுப்பதற்காகவே, அரசு மனிதாபிமான அமைப்புகளைத் தமது பணிகளைக் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டுள்ளது.

- இவ்வாறு பல மனிதாபிமானப் பணியாளர்கள் கருதுகின்றனர் என ரொய்ட்டர் செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான கட்டுப்பாடுகளை அரசு விதித்துவரும் நிலையில், இலங்கையில் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை என மனிதாபிமானப் பணியாளர்கள் கருதுகின்றனர் எனவும் ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது.

ரொய்ட்டர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களுக்குச் செல்வதற்கான போதிய அனுமதி வழங்கப்படாதமை குறித்து மனிதாபிமானப் பணியாளர்கள் முறைப்பாடு செய்து வருகின்றனர்.

### தடுத்து வைக்கப்படுவதற்குச் சமம்

முகாம்களுக்குள் காணப்படும் நிலைமையை வெளியிலிருந்து வருபவர்கள் பார்ப்பதைத் தவிர்ப்பதற்காகவே மனிதாபிமான நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்ளுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது எனவும் -

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் உள்ளவர்களுக்கு நடமாட்டச் சுதந்திரம் மறுக்கப்படுகின்றமை கண்மூடித்தனமாகத் தடுத்து வைக்கப்படுவதற்குச் சமனானது எனவும் - மனிதாபிமானப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முகாம்களில் நடைபெறும் ஆள்கடத்தல் மற்றும் காணாமற் போதல் போன்ற உரிமை மீறல்கள் குறித்தும் மனிதாபிமானப் பணியாளர்களும், மனித உரிமை அமைப்புகளும் கவலை கொண்டுள்ளன.

### முகாம்களை நிரந்தரமாக வைத்திருக்கும் நோக்குடன்....

இடம்பெயர்ந்த மக்களை ஆறு மாதங்களுக்குள் மீளக் குடியேற்றுவதற்கு அரசு உறுதியளித்துள்ள போதிலும், முகாம்களை நிரந்தரமாக வைத்திருக்கும் நோக்கத்துடன் அரசு செயற்படுகின்றது என மனிதாபிமானப் பணியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முகாம்களில் நிரந்தரக் கட்டடங்களை அமைக்குமாறு அரசு அழுத்தம் கொடுத்து வருகின்றது. நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதை அது மந்தகதியில் முன்னெடுப்பதன் நோக்கம் மக்கள் மீளக்குடியேறுவதைத் தடுப்பதே என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இடம்பெயர்ந்துள்ள அனைத்து மக்களையும் மீளக்குடியமர்த்த அரசிற்கு முழுமையான திட்டமொன்று அவசியம் எனவும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அகதிகள் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. முகாம்களுக்குள் மறைந்துள்ள விடுதலைப் புலிகளைக் கண்டு பிடிப்பதற்குத் தனக்கு கால அவகாசம் தேவை என அரசு தெரிவித்துள்ளது - இப்படி மேலும் ரொய்ட்டர் தெரிவித்துள்ளது. (சி)

# யாழ்.மாவட்ட தமிழ்த்தினப் போட்டி 20ஆம் திகதி ஆரம்பமாகிறது

கட்டைவேலி,ஜூலை14

யாழ்.மாவட்டத் தமிழ்த் தினப் போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அடுத்த மாதம் 6ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை எழுத்தாக்கப் போட்டிகளும், 25ஆம் திகதி சனிக்கிழமை பிரிவு Iஇன் போட்டி நிகழ்ச்சி தவிர்ந்த ஏனைய தனிநிகழ்வுக்கான போட்டிகளும் இடம்பெறும்.

26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரிவு Iஇன் குழுமப் போட்டிகளும் அடுத்த மாதம் 6ஆம் திகதி நாட்டுக்கூத்துப் போட்டிகளும் இடம்பெறும்.

போட்டிகள் நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-275)

# வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலவிய வேறு ஓர் அரசியல் சூழ்நிலையே இங்கு கல்வியியற் கல்லூரிகள் அமைக்கும் வாய்ப்பு தள்ளிப் போகக் காரணம்

## அமைச்சர் டக்ளஸ் உரை



யாழ்ப்பாணம்,ஜூலை14

நாடு முழுவதும் கல்வியியல் கல்லூரிகளை அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்த சமயம் வடக்குக் கிழக்குப் பிரதேசம் வேறு ஓர் அரசியல் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தமையால் இங்கு இக்கல்லூரிகளை அமைக்கும் வாய்ப்புக்களை நாம் இழக்க நேரிட்டது.

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 9ஆம் திகதி யாழ்.கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற குழந்தை அரங்க குதூகலிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்ட தகவலைக் கூறினார்.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அமைச்சர் மேலும் தெரிவித்தவை:-

தமது சுயலாப அரசியலுக்காகத் தமிழ் மக்களைத் தவறாக வழிநடத்தியதன் விளைவுதான் இன்று எமது தேசம் எதிர்கொண்டுள்ள பேரழிவாகும்.

இந்த அழிவிலிருந்து எமது மக்களை மீட்டெடுப்பதே எமது பிரதான குறிக்கோளாகும்.

எமது இலக்கை வென்றெடுப்பதற்கு அனைவரும் ஒன்றாக அணி திரளவேண்டும். இக்கல்லூரியைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராகவுள்ளோம் - என்றார்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய கோப்பாய் கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.கமலநாதன்:-

நாடகங்களுடாகப் பிள்ளைகளுக்குச் சீரான கல்வியை வழங்கும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது கல்வியை இலகுவாக கற்பிப்பதற்கான சிறந்ததொரு ஏற்பாடாகும்.

இதனை கல்லூரியின் அனைத்து துறை சார்ந்த பாடநெறிகளுக்கும் அறிமுகப்படுத்திக் கல்வியைச் சிறப்பாக முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார். (203)

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை14

சிவலிங்க யோகேந்திரா நிலையத்தின் ஏற்பாட்டில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நல்லூர், ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணிக்கு ''அம்பிகையால் ஆட்கொள்ளப் பட்ட அடியார்கள்'' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நா.நவராஜின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

நாளை புதன்கிழமை பிற்பகல் 5.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை ''பாவையர் வழிபாட்டில் பத்தினி'' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசீதரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (201)

# அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை14

வலி.மேற்கு பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் ஆகியன இன்று செவ்வாய்க்கிழமை முறையே முற்பகல் 9.30, 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டங்களுக்குத் துறைசார்ந்த பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலி.மேற்குப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச் சட்டத்தை இனியும் நீடிப்பதன் மூலம் இனங்களுக்கிடையே இடைவெளியைக் கூட்ட வேண்டாம்

## நல்லிணக்க செயற்பாடுகளே அவசியம் என்கிறார் பத்மினி எம்.பி.



கொழும்பு, ஜூலை 13

அவசரகாலச் சட்டம் என்று தமிழ் மக்களை ஒதுக்கும் சட்டங்களைக் கொண்டு வந்து இனங்களுக்கிடையே இடைவெளியைக் கூட்டாமல் அதனை நீக்கி நல்லிணக்கத் செயற்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அவசரகாலச் சட்டம் என்பது எனது நாடாளுமன்ற அனுபவத்தை பொறுத்தவரை தமிழ் மக்களது வாயைப் பூட்டுவதற்கான ஒரு சட்டம். தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான ஒரு சட்டம். பாரம்பரியமாகத் தமிழ் அடையாளத்தோடு செயற்பட்டு தமிழர்களின் உரிமைகளைப் பெற முனைப்புடன் செயற்படும் கட்சி என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இச்சட்டத்தை எதிர்த்து வருகின்றது. அந்த வகையில் இன்றும் நான் இந்த அவசரகாலச் சட்டத்தை எதிர்க்கின்றேன்.

இன்று நாம் எதிர்கொள்ளும் சூழலை எடுத்து நோக்கின் ஊழித்தாண்டவம் ஒன்று நடந்து முடிந்திருக்கினறது. ஒரு பெரும் பேரழிவு ஒன்று நடந்து முடிந்திருக்கிறது. சொல்லவே கூசுகின்ற; நினைக்க நெஞ்சம் நடுங்குகின்ற பேரவலம் நிகழ்ந்திருக்கின்றது.

பல்லாயிரக்கணக்கில் மக்கள் இறந்திருக்கின்றார்கள்; பல்லாயிரக்கணக்கில் அங்கவீனராகியிருக்கின்றார்கள்; பல நூற்றுக்கணக்கான குழந்தைகள் அநாதரவாகி உள்ளனர். தமிழ் மக்களைப் பாதுகாக்க என ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் பயங்கரவாதத்தை முறியடிக்கவென புறப்பட சிங்கள இளைஞர்களும் கொலையுண்டிருக்கின்றார்கள். புதல்வர்களை இழந்த தமிழ்த் தாய்மார்களும், சிங்களத் தாய்மார்களும் கலங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

### மூன்று லட்சம் மக்கள் முகாம்களில் அகதிகளாக

மூன்று லட்சம் அளவிலான மக்கள் தமது விருப்பத்திற்கு மாறாக முகாம்களில் அடையுண்டு கிடக்கின்றார்கள்.

இன்று இரு தரப்பும் தோற்று சரிந்துள்ளோம். சிங்கள-தமிழ் சமூகங்கள் இரண்டுமே தோற்றுள்ளார்கள். தமிழ் மக்கள் தமது தாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என நினைத்தார்கள், தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தினார்கள். ஆனால் இன்று ஆயுதப் போராட்டம் வலுவிழந்து விட்டது.தமிழ் மக்கள் தோற்றுவிட்ட மனநிலையோடு குறுகிப் போயுள்ளார்கள். அரசும் தோற்றுவிட்டது. அரசு ஒற்றையாட்சியை பாதுகாக்க, ஒருநாடு என்பதைப் பாதுகாக்க பெரு விருப்பம் கொண்டு நின்றது. ஆனால் அரசு ஒரே நாடென்று சொல்லிக் கொண்டு அந்த நாட்டுக்குள்ளேயே பெரும் பீரங்கிக் குண்டுகளை வீச வேண்டியேற் பட்டது. தனது சொந்த மக்கள் என்று சொல்லிக் கொண்டு அந்த சொந்த மக்கள் மீதே குண்டுகளை வீச வேண்டியேற்பட்டது. தனதுசொந்த மக்கள் என்று நாட்டின் சொத்துக்களை தானே அழிக்கவேண்டியேற்பட்டது.

இரண்டு தரப்புமே இதனை பேசித் தீர்த்திருக்கலாம். பல்லாயிரம் மக்கள் கொலையுண்டிருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது. பெறுமதியுடைய சொத்துக்கள் அழிய வேண்டி ஏற்பட்டிருக்காது. ஆனால். இரண்டு தரப்புமே அதில் தவறிவிட்டோம். இரண்டு தரப்புமே தோற்று விட்டோம். இரண்டு தரப்புமே சந்தர்ப்பங்களை தவறவிட்டுள்ளோம். எனினும் கூட நாம் சமாதானத்தை நோக்கி அடியெடுத்து வைக்கவேண்டும். இவ்வளவும் நடந்திருந்தாலும் கூட சமாதானத்தைக் கட்டியெழுப்புவதும், உரிமைகளோடு வாழ்வதும் தான் ஒரு நாட்டிற்கு நல்ல விடிவைத் தரக்கூடிய ஒரேயொரு தெரிவு. இதற்கு பேச்சுவார்த்தை ஒன்றுதான் நம் முன்னே உள்ள தெரிவு. சிங்கள, தமிழ், முஸ்லீம் சமூகங்கள் ஒன்று கூடி பேசுவதன் மூலம் தான் ஒரு நல்ல வாழ்வைக் கட்டியமைக்க முடியும்.

### தமிழ் மக்களுக்குரிய உரிமை கிடைக்கவில்லை

இலங்கை அங்கு வாழும் சகல இனங்களுக்கும் உரியது. இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட அரசில் சிங்கள மக்களுக்கு உரிய பங்கு கிடைத்தது. தமிழ் மக்கள் தமது பங்கை, தமது உரிமைகளைப் பெற விரும்பினார்கள். உரிமைகளைப் பெறுவதற்காக சாத்வீக வழிமுறைகளை நாடியிருந்தார்கள். ஆனால் அவர்களால் அந்த உரிமைகளைப் பெறமுடியவில்லை. ஆயினும் அந்த சாத்வீக வழிமுறைகள் தமிழ் மக்களை ஓரணியில் திரட்ட உதவியது. தமது கோரிக்கைகளில் மேலும் மேலும் உறுதி பூண உதவியது. எனினும் தமிழ் மக்களது முயற்சிகள் வன்முறை வழியில் அடக்கப்பட்டன. எனவே அவர்கள் ஆயுதப் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டனர். தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தித் தமிழ் மக்களைப் பாதுகாக்க முனைந்தார்கள். ஆனால் முடியவில்லை.

எனினும் தமிழ் இளைஞர்களின் முனைப்புக் காரணமாக இலங்கையில் தமிழ் மக்களுக்கு நியாயமான பிரச்சினைகள் உண்டு என்பது வெளித்தெரிந்துள்ளது. இலங்கையில் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உண்டு என்பதை சிங்கள மக்கள் அறிந்துள்ளார்கள்; உலகம் அறிந்துள்ளது. தமிழ் மக்களின் நியாய மான அபிலாசைகளின் அடிப்படையில் ஒரு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பது இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும்.

அபிலாசைகளின்அடிப்படையில் தீர்வு என்றால் அபிலாசைகளை அந்த மக்கள் தான் வெளிப்படுத்த வேண்டும். வெவ்வேறு சமூகங்கள் தங்கள் அபிலாசைகளை வெளிப்படுத்தி அந்த வெளிப்பாடுகளின் அடிப்படையில் தீர்வு காணப்படும்போதுதான் நிரந்தர அமைதி கிட்டும்.

ஆனால் தமிழ் மக்கள்தங்கள்அபிலாசைகளை வெளிப்படுத்தக் கூடிய நிலையிலா இன்று உள்ளார்கள்? குரலற்றுக் கிடக்கின்றார்கள். யுத்தக் குரூரத்தால் இது நிகழ்ந்தது.

பல்லாயிரக்கணக்கானோர் தமது அவயங்களை இழந்துள்ளனர் என்றும் பல நூற்றுக் கணக்கான சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர் என்றும் அறிகின்றோம். முகாம்களில் இறப்பு வீதம் அசாதாரணமாக உள்ளது. கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு வீதம் அதிகரித்துள்ளது. மே மாதத்தில் கருத் தரித்த தாய்மார்கள் 7 பேர் இறந்திருப்பதாக அறிகின்றோம். கர்ப்பம் தரித்த தாய் ஒருவர் இறந்திருந்தாலே நாடுதழுவிய ரீதியில் பெரிய விசாரணை நடைபெறவேண்டிய நிலையில் ஏழுபேர் இறந்திருப்பது மிகவும் வேதனைக்குரியது.

முகாம்களில் பலர் சிரங்கு, பொக்கிளிப்பான், செங்கண்மாரி போன்ற நோய்களால் பாதிப்படைந்துள்ளனர்; நியுமோனியா, மூளைக்காய்ச்சல் போன்ற நோய்களால் மக்கள் இறந்திருக்கின்றனர். இதுவரை மூளைக்காய்ச்சல் நோயால் 34பேர் இறந்துள்ளனர் என அறிகின்றோம்.

இனி மழைகாலம் தொடங்க வலயம் 1-4 வரையான முகாம் பகுதி ஒரு நீரேந்து பிரதேசமாக இருப்பதால் 1 1/2 அடிக்கு மேல் தண்ணீர் நிற்கும் பகுதியாக இருக்கும் அதிலும் பெரிய அனர்த்தத்தை அம் மக்கள் எதிர்நோக்க உள்ளனர்.

### முகாம்களில் இன்னல்களால் அல்லற்படும் மக்கள்

இத்தகைய அனர்த்தத்தின் மத்தியிலும் உள்ள சாதகமான நிலை என்னவெனில் அரசு, தொண்டு நிறுவனங்கள் அந்த மக்களுக்கு உதவ நிறைய முயற்சிகளை எடுக்கின்றன. சிங்கள மக்களும் முகாம்களில் உள்ள எம் உறவுகளுக்கு உதவுகின்றனர்.

நான் ஒரு தமிழ்ப் பெண் என்ற வகையில் அந்த மக்கள் எப்படி வேதனைப்படுவார்கள், கண்ணீர் சொரிவார்கள் என்பது எனக்கு நன்கு தெரியும். குறிப்பாகப் பெண்கள், குழந்தைகள் எவ்வளவு அந்தரிப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். பெண்கள் தமக்கென ஒதுக்கிடம் இன்றி குளிப்பதற்கு மறைப்பிடமின்றி மாதவிலக்கு வரும் நாள்களில் மறைப்பிடம் இன்றி படக்கூடிய அவஸ்தைகளை நான் அறிவேன்.

ஏற்கனவே மன அழுத்தம், மன உளைச்சலுக்கு உட்பட்ட அந்த மக்களை அவர்கள் படும் அவஸ்தை மேலும் அவர்களை மன அழுத்தத்திற்கு உட்படுத்தும். முகாம்களில் இந்த மூன்று லட்சம் மக்கள் படும் அவலம் முழு தமிழ்ச் சமூகத்தையுமே மன உளைச்சலுக்கும், பயத்திற்கும் உட்படுத்தியுள்ளது.

இன்று உடனடியாகச் செய்யப்பட வேண்டிய விடயம் தமிழ் மக்களின் பயத்தை நீக்கி அவர்களின் மன உளைச்சலுக்கும்,மன அழுத்தத்திற்கும் ஆறுதல் அளிக்கப்பட வேண்டும். அவர்கள் பயமில்லாமல் திறந்த மனதுடன் கதைப்பதற்கு இடமளிக்கப்பட வேண்டும். பயமில்லாமல் வாழ முடியும் என்ற உறுதி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இத்தகைய ஆற்றுகை தமிழ் பண்பாட்டின் அடிப்படையில் செய்யப்படவேண்டும். அவ்வாறு அவர்கள் பேசுவதற்கு அரசு நாட்டில், பயம் நீங்கியதற்கான சமிக்ஞைகளை காட்டவேண்டும். யுத்தம் நடந்தபோது மக்களோடு நின்ற வைத்தியர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் விடுவிக்கப்படுதல், சரணடைந்த போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குதல் போன்றவை நீண்டகாலமாக நிலவிவரும் பரஸ்பர நம்பிக்கையீனங்களைத் தகர்த்து இனங்களுக்கிடையே மீள் இணக்கம் (Reconciliation) ஏற்படுவதற்கான சாத்தியத்தை வழங்கும்.

நாடாளுமன்றத்தில் மேதகு ஜனாதிபதி அவர்கள் ஆற்றிய உரையில் "இந்நாட்டில் வாழும் எல்லா மக்களும் பயம், சந்தேகம் இல்லாமல் பாதுகாப்பாக வாழ வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், ஆங்காங்கே நடைபெறும் சம்பவங்கள் அந்த நம்பிக்கையைக் கொள்வதற்குப் போதுமானதாக இல்லை. 04.07.2009 அன்றும் வவுனியாவில் ஓர் அதிபரும் ஒரு வர்த்தகரும் கொல்லப்பட்டுள்ளனர். யாழில் பத்திரிகைகள் எரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும். ஆயுதங்கள் மூலம் ஒருவரை ஒருவர் அச்சுறுத்தும் நிலை ஒழியவேண்டும். ஒரு அச்சமற்ற சூழல் உருவாக வேண்டும்.

### தமிழ் மக்கள் பயமின்றி வாழ உறுதியளிக்க வேண்டும்

எனவே அங்குள்ள அடிப்படை வசதிகளைப் பன்மடங்காக அதிகரிப்பதன் மூலமும், பணியாற்றுகின்ற மருத்துவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களைப் பன்மடங்காக்குவதன் மூலமும் அழிவில் இருந்து அம்மக்களைப் பாதுகாக்க முடியும்.

மேலும் முகாம்களில் உள்ள தமிழ் மக்களை உறவினர்கள் பொறுப்பெடுக்க விரும்பின் அவர்களை உறவினர்களோடு செல்ல அனுமதிப்பதன் மூலம் முகாம்களின் அடர்த்தியைக் குறைத்து இறப்பு வீதத்தையும், நோய், போஷாக்குப் பிரச்சினைகளையும் குறைக்க முடியும்.எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களை மிக விரைவில் அவர்களது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமரும் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அடுத்து தமிழ் மக்கள் பயமின்றி தமது இயல்பு வாழ்வை வாழ்வதற்கான உறுதி வழங்கப்படும் போதுதான் அவர்களது அபிலாசைகளை அவர்கள் வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். அவர்கள் வெளிப்படுத்தும் அபிலாசைகளின் அடிப்படையில் கட்சிகளுக்கிடையில் ஓர் உடன்பாடு காணப்பட்டு அரசியல் தீர்வு காணப்படும் போது உண்மையான சமாதானம் ஏற்படும். அண்மையில் நாட்டில் அபிவிருத்தியும் மீள் இணக்கமும் பற்றி சிந்திப்பதற்காக ஜனாதிபதி தலைமையில் கூடிய அனைத்துக் கட்சிகளும் மீள் குடியேற்றம் மிக விரைவில் நடக்க வேண்டும் என்பதில் ஒன்றுபட்டு நின்றன. இது மிகவும் வரவேற்கத்தக்கது. இவ்வாறே அரசியல் தீர்வு முயற்சியிலும் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளின் அடிப்படையில் உடன்பாடு எட்டப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு - என்றார் பத்மினி சிதம்பரநாதன். (50)





## நிர்மாணத்துறையினருக்கான கிளினிக்

1. ஒப்பந்த வேலைகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கும்
2. நிர்மாண முகாமைத்துவத்தில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும்
3. நிர்மாணம் சம்பந்தமான ஆலோசனைகள் வழங்குவதற்கும்

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம் வாரமொரு தடவை மேற்படி கிளினிக் ஒன்றினை நடத்த முன்வந்துள்ளது.

பயனடைய விரும்புபவர்கள் கீழே தரப்பட்டுள்ள மன்ற காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமை).

## சுஜீவா வைத்தியசாலை
## புதிய கிளை திறப்புவிழா அழைப்பு

24 ஆவது 25 ஆவது அனுராதபுர இராஜவைத்திய பரம்பரை முறைகள், செகராஜசேகர, பரராஜசேகர அரச வைத்திய முறைகள் மற்றும் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் போதனை முறைகள் மூலமாக பக்க விளைவற்ற அதிசிறந்த செயல்திறன் மிக்க தெரிந்தெடுக்கப்பட்ட இலங்கை, இந்திய மருந்துகள் மூலமாக விசேடமாக குழந்தையின்மை உட்பட மாற்ற முடியாத நோய்களை நீக்குவதில் பிரசித்திபெற்ற **சுஜீவா வைத்தியசாலை** முன்னர் கனத்தாவ, பாலிநகர், காரைநகர் போன்ற இடங்களிலும் தற்போது கலட்டி அம்மன் வீதி எனும் முகவரியிலும் இயங்கி வருகிறது.

இங்கு சிகிச்சை பெறும் தூர இடங்களைச் சேர்ந்தவர்களின் வசதி கருதி யாழ்.நகர மத்தியில் வண்ணை சிவன் கோயிலுக்கு அருகில் K.K.S வீதியில் புதிய கிளை (16.07.2009)வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Dr.C.Jeyalan**
DAM R.I.M.P. Regd No.12128
Medical offecer in charge.

(சி/559532)


## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சுப்பிரமணியம் சிவவாகீசர் (B.A)**

(முன்னாள் அதிபர், யா/வட்டு.திருஞானசம்பந்த வித்தியாசாலை)

தோற்றம்: 13★05★1932 | மறைவு: 14★07★1994

முகத்தினிலே சிரிப்பதனைத் தேக்கி நின்று
முத்தான கதைகள் பல பேசிக் கொள்வீர்
அகத்தினிலே இல்லா தொன்றுமில்லை
அன்புடன் வரவேற்கும் பண்புகொண்டீர்
அப்பா நீங்கள் பிரிந்து பதினைந்து
ஆண்டுகள் சென்றாலும் அகலவில்லை
நின் நினைவுகள், என்றும் வாழ்வீர் எம் இதயத்தில்

என்றும் உங்கள் நினைவில்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

(87029)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல் - குவைதா தலைவர் பின்லேடன் ஆப்கானிஸ்தானில் பதுங்கியிருக்கிறார்

## பாக். உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தகவல்

லண்டன், ஜூலை 14

''அல்-குவைதா தலைவர் பின் லேடனும், அந்த அமைப்பின் முக்கியத் தலைவர்களும் ஆப்கானிஸ்தானில் பதுங்கியிருக்கிறார்கள்'' என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாலிக் கூறுகையில், ''குனார் பகுதியில்தான் இவர்கள் பதுங்கியுள்ளார்கள் என உறுதியான தகவல்கள் கிடைத்துள்ளன. அவர்கள் நிச்சயமாக பாகிஸ்தான் பிராந்தியத்திற்குள் இல்லை'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''ஒருவேளை அவர்கள் பாகிஸ்தானுக்குள் இருந்திருந்தால், தற்போது அப்பகுதியில் குவிக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான பாகிஸ்தான் படையினரிடம் சிக்கியிருப்பார்கள். அதேபோல அல்-குவைதா அமைப்பின் முக்கியத் தலைவர்களும் பாகிஸ்தான் மண்ணில் இல்லை. அதனால் பாகிஸ்தான் பகுதிக்குள் அமெரிக்கப் படைகள் நடத்திவரும் ஏவுகணைத் தாக்குதல்களாலும் எந்தப் பலனும் கிடையாது'' என்றும் அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

''பாகிஸ்தான் அரசுக்குக் கிடைத்துள்ள உறுதியான தகவல்களின்படி நிச்சயம் பின்லேடன் ஆப்கானிஸ்தானில்தான் இருக்கவேண்டும். பாகிஸ்தானுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது குனார் பகுதியிலிருந்துதான் ஏவி விடப்படுகின்றன. எனவே, குனார் பகுதியில்தான் அல்-குவைதா இயக்கத்தினர் பதுங்கியிருக்கின்றனர் என நாம் நம்புகிறோம்'' என்றும் ரஹ்மான் மாலிக் விவரித்துள்ளார்.

''கடந்த பத்து மாதங்களாக நாற்பதுக்கும் மேற்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களை பாகிஸ்தான் பகுதிக்குள் அமெரிக்கா நடத்தியுள்ளது. இதனால் எந்தப் பயனும் இல்லை. காரணம், அவர்களது எதிரிகள் பாகிஸ்தானுக்குள் இல்லை. ஆப்கானிஸ்தானில்தான் அவர்கள் (பின் லேடன் மற்றும் பிற தலைவர்கள்) பதுங்கியிருக்கிறார்கள்'' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

''அமெரிக்கா தற்போது சின்ன மீனைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஆனால், உண்மையில் பெரிய மீன் (பின் லேடன்) குனார் பகுதியில்தான் உள்ளது'' என்றும் மாலிக் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்.

பின் லேடன் உயிருடன் இல்லை என்று முன்னர் முஷாரப் கூறினார். பின்னர் ஜனாதிபதி சர்தாரியும் பல முறை இவ்வாறு கூறினார். இந்த நிலையில் ரஹ்மான் மாலிக், பின் லேடன் உயிருடன் உள்ளார் எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பணத்துக்காகவே ஜக்ஸன் கொலை செய்யப்பட்டுள்ளார்

## பேட்டியில் சகோதரி லா டோயா குற்றச்சாட்டு

லண்டன், ஜூலை 14

''பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸன் பணத்துக்காகவே கொலை செய்யப்பட்டுள்ளார். அளவுக்கு அதிகமான மருந்து மாத்திரைகளை உட்கொண்டமையால் அவர் மரணித்திருக்கலாம் என்ற கூற்றை என்னால் நம்பவும் முடியாது; ஏற்கவும் இயலாது'' என அவரது மூத்த சகோதரி லா டோயா ஜக்ஸன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

''உலகச் செய்தி' என்னும் பிரிட்டிஷ் பத்திரிகைக்கு தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் இவர் இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளார். இவர் தம் பேட்டியில், ''எனது சகோதரர் மரணத்துக்குப் பொறுப்பானவர்களை எனக்குத் தெரியும். அவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்படவேண்டும். இதில் உறுதிப்பாடாக நான் இருக்கிறேன்'' என்றும் தெரிவித்துள்ளார்.

லா டோயா ஜக்ஸனின் இப்பேட்டி 'த நியூஸ் ஒப்த வேர்ல்ட்' (உலகச் செய்தி) பத்திரிகையிலும், 'த மெயில்' என்ற பத்திரிகையிலும் ஞாயிற்றுக்கிழமை வெளியாகியுள்ளது. இதில் ''எனது சகோதரர் பணத்துக்காகவே கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை நான் உணர்கின்றேன்'' என்றும் லாடோயா குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் மாதம் 25 ஆம் திகதி திடீரென மரணமடைந்த பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸனின் மரணத்தில் இப்பேட்டியால் மீண்டும் சர்ச்சை கிளம்பியுள்ளது. ''ஜக்ஸனின் கொலைக்கான சதிகாரர்களை எனக்குத் தெரியும்'' எனக் குறிப்பிட்டுள்ள இவர் அவர்களின் பெயர்களையோ, இதர விவரங்களையோ வெளியிடவில்லை.

''ஜக்ஸன் உயிருடன் இருப்பதைவிட இறந்தால்தான் சிலருக்கு இலாபம் என்ற நிலை இருந்தது. ரூ. 24 ஆயிரம் கோடி மதிப்புள்ள ஜக்ஸனின் இசை ஆல்பத்தின் வெளியீட்டு உரிமைக்காகவும், சொத்துக்களுக்காகவும் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம்'' என்றும் இவர் தெரிவித்துள்ளார்.

''ஜக்ஸன் பல ஆண்டுகளாக ஒரு சிலரின் கட்டுப்பாட்டுக்குளிருந்தார். குடும்பத்தினர்கூட அவருடன் நெருங்கிப் பழக முடியாத சூழ்நிலை இருந்தது. அவர் அதிக அளவு மருந்து சாப்பிட்டதால் மரணமடைந்திருக்கலாம் என கூறப்படுவதை எம்மால் நம்பமுடியாது. அவர் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என நான் எண்ணுகிறேன்'' என்றும் லாடோயா குறிப்பிட்டுள்ளார்.

''இதில் தனி நபர் ஒருவர் மட்டும் ஈடுபட்டிருக்க முடியாது. ஜக்ஸனின் பணத்துக்காக ஒரு கும்பல் சதித்திட்டம் தீட்டி இந்தக் கொடிய சம்பவத்தை நிறைவேற்றியிருக்கிறது என்றே தோன்றுகிறது. ஜக்ஸன் உயிருடன் இருப்பதைவிட இறந்தால்தான் அவர்களுக்கு அதிக லாபம். பணத்துக்காகத்தான் ஜக்ஸன் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்'' என்றும் இவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

''ஜக்ஸன் நல்ல உடல் நிலையுடன் தான் இருந்து வந்தார். அவர் மரணமடைவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் எங்கள் பெற்றோர்களின் 60 ஆவது ஆண்டு திருமண நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். அப்போதும் முழு ஆரோக்கியத்துடனும், உற்சாகத்துடனும்தான் அவர் இருந்தார்'' என்றும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''மரணமடைந்த போது அவரது கழுத்து மற்றும் கைகளில் ஊசி குத்தியதற்கான தழும்புகள் இருந்துள்ளன. இதில்தான் மர்மம் உள்ளது. இயல்பாகவே ஜக்ஸன் மெலிந்த உடல்வாகு உடையவர்தான். மருந்துகள் மற்றும் நோயினால் அவர் பாதிக்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுவது சரியல்ல'' என்றும் லாடோயா கூறியுள்ளார்.

ஜக்ஸன் கொலை செய்யப்பட்டாரா என்பது தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என லொஸ் ஏஞ்சல்ஸ் பொலிஸார் அறிவித்த இரு நாள்களில் ஜக்ஸனின் சகோதரி இப்பேட்டியை அளித்துள்ளார்.

பொப் இசை மன்னரான மைக்கல் ஜக்ஸன் கடந்த ஜூன் 25 இல் லொஸ் ஏஞ்சல்ஸில் மரணமடைந்தார். முதலில் அவர் மாரடைப்பால் இறந்துவிட்டார் என தெரிவிக்கப்பட்டது. பின்னர் மரணம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்தன. அதிக வீரியமிக்க மாத்திரைகளைச் சாப்பிட்டு வந்தமையால் அவர் இறந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், அவர் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் தற்போது எழுந்துள்ளது.

# ஆப்கானிஸ்தானில் கடும் மோதல்: 12 தலிபான்கள் உட்பட 20 பேர் பலி

கந்தஹார், ஜூலை 14

ஆப்கானிஸ்தானில் சர்வதேசப் படையினரும் ஆப்கான் பொலிஸாரும் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக சனிக்கிழமை கூட்டாக மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின்போது, 12 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். கண்ணிவெடித் தாக்குதலிலும், இதர சம்பவங்களிலும் 6 பொலிஸார் உட்பட 8 பேர் உயிரிழந்தனர் என பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

''ஆப்கானிஸ்தானின் வடபகுதியிலுள்ள உருஸ்கான் மாகாணத்தில் தலிபான்கள் பதுங்கியிருக்கிறார்கள் எனத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து, சர்வதேசப் படையினரும், பொலிஸாரும் இணைந்து சனிக்கிழமை மாலை அப்பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது அங்கு பதுங்கியிருந்த தலிபான்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே கடும் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. இதில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இராணுவத் தரப்பில் எவரும் பலியாகவில்லை'' என்றும் அவர் விவரித்தார்.

''இதேபோல குனார் மாகாணத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வீட்டை சர்வதேசப் படையினர் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தினர். அப்போது தீவிரவாதிகள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினார்கள். இதில் பொதுமக்களில் ஒருவர் உயிரிழந்தார். 5 பேர் காயமடைந்தனர்'' என்றும் அவர் கூறினார்.

''ஹெல்மந்தா மாகாணத்தில் பொலிஸார் சென்ற வாகனம் மீது தலிபான்கள் சனிக்கிழமை கண்ணிவெடி மூலம் தாக்குதல் நடத்தினர். இதில் 6 பொலிஸாரும், 2 சிவிலியன்களும் உயிரிழந்தனர். முதல் நாளான வெள்ளிக்கிழமை அப்பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் படுகாயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்'' என்றும் அவர் விளக்கினார்.

---

# மூன்று லட்சம் அகதி மக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களே பயங்கரவாதத்தை அழிப்பதற்கு எமக்கு உற்சாகமளித்தவர்கள். ஜோர்ஜ். டபிள்யூ புஷ்ஷை நாங்கள் பின்பற்றினோம். அவர் விரும்பியதை நாங்கள் நிறைவேற்றினோம். பயங்கரவாதத்தை அழித்தோம். அவர்கள் எம்மைப் பாராட்ட வேண்டும்.

நாங்கள் அவர்களது யுத்தத்தை முன்னெடுத்தோம். பயங்கரவாதத்தை ஒழிக்கலாம் என நாங்கள் அவர்களுக்குக் காண்பித்தோம்.

யுத்தத்தின் இடையில் சிக்கிப் பொதுமக்கள் பாதிப்புறுவதை சர்வதேச சமூகம் தடுப்பதற்கான பரீட்சார்த்த களமாக இந்த யுத்தத்தின் கடைசிக் காலகட்டத்தை நோக்கியிருக்கவேண்டும் என சில வெளிநாட்டுக் கொள்கை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த மக்கள் எனது பிரஜைகள். அவர்களின் பாதுகாப்புக்கு நானே பொறுப்பு. அவர்களைப் பாதுகாத்து, பாதுகாப்பாக வெளியேற்றுவது எனது பொறுப்பு. நான் வெளிநாடு எதையும் இந்த வேலையைச் செய்ய அனுமதித்திருந்தால் அவர்கள் பெரும்பாலான மக்களைக் கொன்றிருப்பார்கள். எனவே, எனது வீரர்களே, எனது மக்களைக் காப்பார்கள். அவர்கள் எனது மக்கள், எனது வாக்காளர்கள். ஓர் அரசு மக்களால் முறையான வகையில் தெரிவுசெய்யப்பட்டிருக்குமானால் அத்தகைய அரசுக்கு சர்வதேச சமூகம் உதவி ஒத்தாசையே புரியவேண்டும்.

கேள்வி:- தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசு தனது சொந்த மக்களுக்கு எதிராக நடந்தால் என்ன செய்வது? அதற்காக எல்லா மக்களையும் தண் டிக்கப் போகிறீர்களா? அல்லது அதற்குப் பொறுப்பானவர்களையா?

### மனித உரிமை மீறல்கள் நடைபெறவில்லை

ஜனாதிபதி ராஜபக்ஷ:- இப்போது என்னை எடுத்துக் கொள்ளுங்கள். நானே இந்த மனித உரிமை களை மீறி, மக்களைக் கொன்றேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். சரியா? நீங்கள் என்னை - மஹிந்த ராஜபக்ஷவை - தண்டிப்பீர்களா அல்லது தடைகள், முட்டுப்பாடுகள், பயணக் கட்டுப்பாடுகளைப் போட்டு அப்பாவி மக்களை முடக்குவீர்களா? என்னைத் தண்டிப்பதாயின் கூட அதற்கும் வழி உண்டு. இப்படிச் சொல்வதற்காகவும் கூட நான் தண்டிக்கப்படலாம். (சிரிக்கிறார்)

கேள்வி:- நீங்கள் யுத்தத்தை முடித்த விதம் மிக மோசமான - ஆபத்தான - முன்மாதிரி என்று பலரும் உணருகின்றனர். மனித உரிமை மீறல், சிவிலியன் அழிவு போன்றவை மிக உச்சம் என்று எண்ணுகின்றனரே....?

பதில்:- நான் இதனை முற்றாக நிராகரிக்கிறேன். எவ்வித மனித உரிமை மீறல்களும் இடம்பெறவில்லை. பொதுமக்கள் இழப்பு ஏதுமில்லை.

அப்படிச் செய்வதாக இருந்தால் இந்த யுத்தத்தை முடிப்பதற்கு இரண்டரை வருடங்கள் எனக்குத் தேவைப்பட்டிராது. சில மணித்தியாலங்களில் இதனைச் செய்திருக்கலாம். இவை அனைத்தும் பொய்ப்பிரசாரங்களே.

ஏழாயிரம் பேர் கொல்லப்பட்டனரா? வாய்ப்பேயில்லை. கிழக்கு மாகாணத்தில் எவ்வித இழப்புகளும் இல்லை. வடக்கில் ஓர் இழப்பும் இல்லை எனத் தெரிவிக்க மாட்டேன். தப்ப முயன்ற சிலரை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

என்ன நடைபெற்றது என்பதைக் கண்டறிய வேண்டும். என்றாலும் கடந்த காலங்களைக் கிளற நான் விரும்பவில்லை. பலர் இலங்கையில் அப்படி நடைபெறுவதையே விரும்புகின்றனர்.

### வடக்கும் தெற்கும் மீண்டும் மோத அனுமதிக்க முடியாது

கடந்த காலங்களில் என்ன நடைபெற்றது எனப் பேச அவர்கள் விரும்புகின்றனர். அதனை முறையாகச் செய்யவேண்டும். தாங்கள் மீண்டும் தண்டிக்கப்படுவதாகக் கருதக்கூடாது. அப்படியானால் மீண்டும் வடக்கும் தெற்கும் மோதும் நிலை உருவாகும். இது மீண்டும் நிகழ அனுமதிக்க முடியாது.

கடந்த காலங்களைக் கிளறிக் காயங்களை உண்டுபண்ண நான் விரும்பவில்லை.

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் 3 லட்சம் மக்கள் உள்ளனர். வடக்கின் முழுப் பகுதியும் கண்ணிவெடிகளினால் நிரம்பியுள்ளன. கண்ணிவெடிகளை அகற்றவேண்டும். அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

எங்களிடம் 180 நாள் நிகழ்ச்சி நிரல் உள்ளது. அதுவே எமது திட்டம். இது வாக்குறுதியல்ல. இலக்கு மாத்திரமே. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் 60 வீதமானவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பார்கள்.

### இன அடிப்படையில் தனிப் பிரதேசங்களை வழங்க முடியாது

இன அடிப்படையில் தனித்தனி பிரதேசங்களை வழங்க முடியாது. அதனை அனுமதிக்க முடியாது.

எனினும், மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். உள்ளூர் விடயங்களை அவர்களே நிர்வகிக்க முடியும்.

முழு நாடும் ஒரே மாதிரியான முறைமையைக் கொண்டிருக்க வேண்டும். வடக்கிற்கு ஒரு முறைமை, கிழக் கிற்கு இன்னொன்று என இரண்டாக்க முடியாது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத் திட்டம் எம்முடையது. சீனா உதவுகிறது. அது வர்த்தகத் திட்டம். அது எனது பகுதி. பல வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தது. அதனை அபிவிருத்தி செய்வது எனது கடமை.

நானே உதவி கோரினேன். சீனா கேட்டு வரவில்லை. அது சீனாவின் யோசனையல்ல. அவர்கள் நிதி வழங்கினர்.

நாங்கள் உங்களுக்குத் துறைமுகம் தருகிறோம் என இந்தியா கூறுமானால் நாங்கள் அதனையும் வரவேற்போம்.

அமெரிக்கா முழுமையான வசதிகளுடன் விமானநிலையத்தைத் தருகிறோம் என்றால் ஆம். ஏன் இல்லை?

துரதிஷ்டவசமாக அவர்கள் அதனை எமக்கு வழங்குகிறார்கள் இல்லை.

இந்தியாவை விட நெருங்கிய சகாவாக சீனா மாறுகின்றது என்று நான் கருதவில்லை.

இந்தியா எமது அயல் நாடு. எமது உறவு. எமது நண்பன். நாங்கள் விசேட உறவுகளைக் கொண்டவர்கள்.

சிறிய நாடு என்ற வகையில் அபிவிருத்திக்கு நிதி தேவை. அதை மறக்க முடியாது. - என்றார் ஜனாதிபதி. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவோயிஸ்ட்டுகள் அதிரடித் தாக்கு; எஸ்.பி. உட்பட 36 பொலிஸார் பலி!

## சத்தீஷ்காரில் துயரச் சம்பவம்



ராய்ப்பூர், ஜுலை 14

சத்தீஷ்கார் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் மாவோஸ்ட்டுகள் பொலிஸார் மீது நடத்திய அதிரடித் தாக்குதலில் மாவட்ட பொலிஸ் சூப்பிரண்டு (எஸ்.பி.) உட்பட 36 பொலிஸார் பலியாகினர். மேலும் பலர் காயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் பற்றிய விவரம் வருமாறு-

சத்தீஷ்கார் மாநிலத்தில் உள்ள ராஜ்நந்த்கோன் மாவட்டம் மாவோயிஸ்டுகள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி. இந்த மாவட்டத்தில் மதன்வாடா என்ற கிராமத்தில் உள்ள பொலிஸ் முகாம் மீது நேற்றுமுன்தினம் காலை மாவோயிஸ்ட்டுகள் திடீரெனத் தாக்குதல் நடத்தினர். இதில் 2 பொலிஸார் பலியாகினர்.

இதுபற்றிய தகவல் கிடைத்ததும், மாவட்ட பொலிஸ் சுப்ரிண்டண்ட் விநோத்குமார் அந்த இடத்திற்கு விரைந்து சென்றார்.

மதன்வாடா கிராமத்தை நெருங்கியபோது, வழியில் மாவோயிஸ்டுகள் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி அவர்கள் சென்ற வாகனம் நொறுங்கியது. மேலும் மாவோஸ்ட்டுகள் மறைந்திருந்தபடி துப்பாக்கியாலும் சுட்டனர்.

இந்தச் சம்பவத்தில், பொலிஸ் சுப்ரிண்டண்ட் விநோத்குமாரும் மற்றும் 33 பொலிஸாரும் உயிரிழந்தனர். 15 பேர் படுகாயம் அடைந்தனர். இதனால் சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பின்னர் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர்.

பொலிஸ் சுப்ரிண்டண்ட் விநோத்குமார் கொல்லப்பட்ட தகவலை உறுதி செய்த துர்க் மண்டல ஐ.ஜி.முகேஷ்குப்தா, மாவோயிஸ்ட்டுகள் திட்டமிட்டு இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

இதற்கிடையில், 600 வீரர்கள் கொண்ட மத்திய பொலிஸ் படையும், மதன்வாடாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.



தயாரிப்பாளர் கே.எஸ்.நாகராஜன் ராஜா எழுதியுள்ள 'மௌனம் சத்தியசாயி பாபாவின் சரிதை' என்ற புத்தக வெளியீடு நேற்றுமுன்தினம் நடந்தது. இந்தப் புத்தகத்தை ரஜினிகாந்த் வெளியிட, நல்லி குப்புசாமி செட்டியார் பெற்றுக் கொண்டார். அருகில் பதிப்பாசிரியர் ரங்கநாதன்.....

# இந்தியா மீது 2012 இற்குள் சீனா போர் தொடுக்கும்....!

## பாதுகாப்புத் துறை நிபுணர் எச்சரிக்கை

புதுடில்லி, ஜூலை 14

ஆசியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக இந்தியா மீது 2012ஆம் ஆண்டுக்குள் சீனா போர் தொடுக்கும் - என்று பாதுகாப்புத் துறை நிபுணர் பரத் வர்மா எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து இந்தியன் 'டிபென்ஸ் ரெவியூ' பத்திரிகையில் அதன் ஆசிரியரான பரத் வர்மா எழுதியுள்ளவை வருமாறு -

ஆசியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக இந்தியாவுக்கு இறுதியாகப் பாடம் புகட்ட வேண்டும் என சீனா நினைப்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

சர்வதேச பொருளாதார தேக்க நிலை காரணமாக சீன ஏற்றுமதி நிறுவனங்கள் பல மூடப்பட்டுவிட்டன.

இதனால், முன்னெப்போதும் இல்லாத வகையில் சீனாவில் சமூக அமைதி சீர்குலைந்து வருகிறது. இதனால் சமூகத்தின் மீது இருந்து வந்த கம்யூனிஸ்ட்டுகளின் பிடி தளர்ந்து வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகி வருகிறது.

இவை மட்டுமல்லாமல், இந்தியாவுக்கு எதிராக சீனாவின் வலது கரம் போல செயற்பட்டு வந்த பாகிஸ்தான் உள்நாட்டுச் சண்டையில் மூழ்கியுள்ளது. இது, இந்தியாவுக்கு எதிராகச் செயற்பட பாகிஸ்தானுக்கு ஊக்கம் அளித்து வந்த சீனாவுக்கு எரிச்சலை அதிகப்படுத்தியுள்ளது.

அத்துடன், அமெரிக்காவுடன் இந்தியாவின் நெருக்கம் அதிகமாவதும் சீனாவுக்கு பதற்றத்தை அதிகரித்துள்ளது. அமெரிக்கக் கூட்டுறவால் தொழில்நுட்ப அளவில் இந்தியா தன்னை மிஞ்சிவிடும் என சீனா அஞ்சத் தொடங்கியுள்ளது.

பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஜப்பான் போன்ற மேற்கத்திய நாடுகள் மீது போர் தொடுப்பது விவேகமானதாக இருக்காது. ஒரே கல்லில் பல மாங்காய் அடிப்பது போல பொருளாதார தேக்கம், வேலையின்மை போன்றவற்றில் இருந்து மக்களைத் திசை திருப்பவும், ஆசியாவில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டவும் மென்மையான இலக்கான இந்தியா மீது போர் தொடுத்து இந்தியாவின் வடகிழக்குப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதே சீனாவின் திட்டம் - என்று அதிலுள்ளது.



மத்திய பிரதேச மாநிலம் போபாலில் உள்ள வான் விகார் தேசிய பூங்காவில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பாம்புகள் பற்றிய விழிப்புணர்வுப் பிரசாரம் செய்யப்படுகிறது. நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்ச்சியில் சிறுமி ஒருவர் பாம்பைப் பிடித்து பார்வையாளர்களுக்கு விளக்கியபோது....

# மகாராஷ்டிராவில் படகுகள் கவிழ்ந்ததில் 34 பெண் தொழிலாளர் பரிதாபமாகப் பலி!

நாக்பூர், ஜூலை 14

மகாராஷ்டிராவில் வெயின்கங்கா ஆற்றில் இரு படகுகள் கவிழ்ந்ததில் 34 பெண் தொழிலாளர்கள் இறந்தனர்.

மகாராஷ்டிர மாநிலம் பன்டாரா மாவட்டத்தில் உள்ள கமாரி என்ற கிராமத்தில் வெயின்கங்கா நதியில் சனியன்று மாலை இரண்டு படகுகளில் பெண் விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் கிராமத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது லேசாக மழை பெய்து கொண்டிருந்தது. திடீரென மின்னலுடன் பலத்த சத்தமாக இடி இடித்தது.

இதனால் படகுகளில் இருந்த பெண்கள் பீதியடைந்தனர். மழையில் நனையாமல் இருக்கவும் தங்கள் பொருள்களைப் பாதுகாப்பாக வைக்கவும் படகில் இருந்த பெண்கள் இங்குமங்கும் நகர்ந்தனர். ஆற்றில் வெள்ளமும் அதிகமாக இருக்கவே, 2 படகுகளும் நிலைதடுமாறிக் கவிழ்ந்தது. படகில் இருந்த அனைவரும் நீரில் மூழ்கித் தத்தளித்தனர்.

இதில் 2 படகிலும் இருந்த 34 பெண்கள் நீரில் மூழ்கி இறந்தனர்.

பொலிஸாரும் தீயணைப்புப் படையினரும் மீட்புப் பணியில் ஈடுபட்டு 19 உடல்களை மீட்டனர். மழை பெய்வதால் மீட்புப் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். மீட்புப் பணி தொடர்ந்து நடக்கிறது. 2 படகுகளை ஓட்டியவர்களும் 4 பெண்களும் நீந்திக் கரை சேர்ந்தனர் என பொலிஸார் கூறினர்.

# நடுக்கடலில் தத்தளித்த இலங்கை மீனவர் இந்தியக் கடற்படையால் படகுடன் மீட்பு



இராமேஸ்வரம், ஜூலை 14

தனுஷ்கோடி அருகே நடுக்கடலில் தத்தளித்த இலங்கை மீனவர்கள் 6 பேரை இந்தியக் கடலோர காவல்படையினர் மீட்டனர்.

இலங்கை மாத்தறையைச் சேர்ந்த மீனவர்கள் 5 பேர், கடந்த 4ஆம் திகதி மீன்பிடிக்கப் புறப்பட்டனர். இவர்கள் பல்வேறு பகுதிகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது படகில் திடீரென பழுது ஏற்பட்டது.

இதனால் படகை இலங்கை நோக்கிச் செலுத்த முடியாமல் திணறினர். காற்றின் திசையில் சென்ற படகு, தனுஷ்கோடியில் இருந்து 2 கடல்மைல் தொலைவுக்கு வந்தது. அங்கு நங்கூரமிட்டு படகை நிறுத்தினர். நங்கூரம் பாறைகளுக்கு இடையே சிக்கியதால் படகை எடுக்க முடியாமல் திணறினர்.

இதையடுத்து வாக்கிடோக்கி மூலம் இலங்கைக் கடற்படையுடன் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்துள்ளனர். அவர்கள் தூதரகம் மூலம் இந்தியக் கடலோர காவல் படையிடம் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, தூத்துக்குடியில் இருந்து கடலோர காவல்படை கப்பல் நேற்றுமுன்தின் அப்பகுதிக்கு வந்தது. இலங்கை மீனவர்கள் வந்த படகு மற்றும் 5 பேரை மீட்டு தூத்துக்குடி மீன்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# தமிழக ஆட்சியில் காங்கிரஸுக்குரிய பங்கு: சோனியாவிடம் மீண்டும் வலியுறுத்துவோம்

## தங்கபாலு தெரிவிப்பு

புதுக்கோட்டை, ஜூலை 14

தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் பங்கேற்க வேண்டும் என்ற கோரிக்கையை தீர்மானமாக நிறைவேற்றி கட்சித் தலைவர் சோனியா காந்திக்கு மீண்டும் அனுப்பவிருக்கிறோம் - என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வீ. தங்கபாலு தெரிவித்தார்.

இதுகுறித்து புதுக்கோட்டையில் நேற்று முன்தினம் அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

கூட்டணிக் கட்சிகளுக்கு உரிய மரியாதையையும், வாய்ப்புகளையும் அளிக்கும் கட்சி காங்கிரஸ் மட்டும்தான். அதனால்தான், பல்வேறு மாநிலங்களிலும் பல்வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்திருக்கிறோம்.

தமிழக காங்கிரஸாரின் உணர்வுகளை கட்சித் தலைமைக்குத் தெரிவிப்பதில் எவ்விதக் குழப்பமும் இல்லை. தமிழக அமைச்சரவையில் பங்கேற்க வேண்டும் என்ற கட்சியினரின் உணர்வை விரைவில் மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றி கட்சித் தலைமைக்கு அனுப்பவுள்ளோம் - என்றார்.

# நொறுங்கியது 'மெட்ரோ' ரயில் பாலம்; ராஜினாமா செய்தார் திட்டத் தலைவர்

## சம்பவம் குறித்து விசாரிக்க 5 பேர் கொண்ட குழு நியமனம்

டில்லி, ஜுலை 14

டில்லியில் மெட்ரோ ரயில் போக்குவரத்துக்காக புதிதாக அமைக்கப்பட்டு வரும் பாலம் இடிந்து விழுந்த சம்பவத்துக்கு தார்மீகப் பொறுப்பேற்று 'மெட்ரோ' ரயில் திட்டத் தலைவர் ஸ்ரீதரன் ராஜினாமாச் செய்தார்.

இந்த விபத்தில் பொறியியலாளர் உட்பட 6 பேர் பலியாகினர். மேலும் 15 பேர் காயமடைந்தனர்.

டில்லியில் முக்கிய பகுதிகளை இணைக்கும் வகையில் போக்குவரத்து வசதிக்காக வீதிகளின் மேலே மெட்ரோ ரயில் (பறக்கும் ரயில்) பாதை அமைக்கப்படுகிறது. அதற்காக, பாலம் அமைக்கும் பணிகளில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். தெற்கு டில்லியில் உள்ள லஜ்பத் நகரில் லேடி ஸ்ரீராம் கல்லூரி அருகே நேற்று முன்தினம் அதிகாலையில் சுறுசுறுப்பாக பணிகள் நடந்தன.

பாலத்துக்கான தூண்கள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாலத்தை தாங்கிப் பிடித்துக் கொண்டு இருந்த கிரேன்கள் அகற்றப்பட்டன. இந்த நிலையில், காலை 5 மணியளவில் பலத்த சத்தத்துடன் பாலம் இடிந்து விழுந்தது.

அப்போது பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தொழிலாளர்கள் மீதும், அந்த வழியாக வீதியில் சென்று கொண்டிருந்தவர்கள் மீதும் பாலம் நொறுங்கி விழுந்தது. அதில், சம்பவ இடத்திலேயே 2 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும் 4 பேர் வைத்தியசாலையில் இறந்தனர். இது தவிர, 15 பேர் 'எய்ம்ஸ்' மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 2 பேருடைய நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

பாலம் விழுந்த தகவல் அறிந்ததும் மீட்பு நடவடிக்கைகளை டில்லி முதல்வர் ஷீலா தீட்சித் மற்றும் டில்லி மெட்ரோ அதிகாரிகள் முடுக்கி விட்டனர். இதுகுறித்து விசாரணை நடத்துமாறு ஷீலா தீட்சித் உத்தரவிட்டுள்ளார்.

பாலம் இடிந்து விழுந்ததில் காயமடைந்து எய்ம்ஸ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களை நேரில் பார்வையிட்ட ஷீலா தீட்சித், இச்சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு 5 லட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு 2 லட்சம் ரூபாவும் இழப்பீடாக வழங்கப்படும்என அறிவித்தார்.

பாலம் இடிந்து விழுந்தது குறித்து விசாரணை நடக்க 5 பேர் கொண்ட குழுவை ஷீலா தீட்சித் நியமித்துள்ளார். விபத்துக்கான காரணங்கள் குறித்து [illegible] என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# கருணாநிதியிடம் பொதுப்பணித்துறை: துரைமுருகனிடமிருந்து பிடுங்கி எடுப்பு

சென்னை, ஜூலை 14

அமைச்சர் துரைமுருகனிடம் இருந்த பொதுப்பணி மற்றும் பாசனத்துறை பொறுப்புகள் தமிழக முதல்வர் கருணாநிதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது- என்று ஆளுநர் பர்னாலா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து, ஆளுநர் மாளிகையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை வெளியான தகவல்கள் வருமாறு-

முதல்வர் கருணாநிதியின் ஆலோசனைப்படி பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் பதவி வகித்துவரும் துரைமுருகனிடம் இருந்து பொதுப்பணித் துறை மாற்றப்படுகிறது. அந்தத் துறையை முதல்வர் கருணாநிதியே கவனிப்பார் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2006இல் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற துரைமுருகனிடம், 2 ஆண்டுகளுக்கு முன்பு சட்டத்துறை வழங்கப்பட்டது. அதுவரை அப்பொறுப்பை வருவாய்த்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கவனித்து வந்தார்.

தமிழக அமைச்சரவையிலும் தி.மு.கவிலும் மூத்தவராகக் கருதப்படுபவர் அமைச்சர் துரைமுருகன். கடந்த 1971 முதல் ஆறு முறை சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

[illegible] அமைச்சராகப் பொறுப்பேற்றார். [illegible]ந்து, 1996 - 2001, 2006 முதல் தற்போது வரை பொதுப்பணித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்து வந்தார்.

பொதுப்பணித் துறையை அங்குலம் அங்குலமாக அலசி வைத்திருப்பவர் துரைமுருகன். பொதுப்பணித் துறை தொடர்பாக, சட்டப் பேரவையில் எந்தக் கேள்வி கேட்டாலும் தயங்காமல் பதிலளிப்பார்.

இப்படி பொதுப்பணித் துறையில் பல ஆண்டுகளாக கோலோச்சிய மூத்த அமைச்சரான துரைமுருகன், திடீரென மாற்றப்பட்டிருப்பது அரசுத் துறை வட்டாரத்தில் மட்டுமல்லாது, அவர் சார்ந்துள்ள தி.மு.கவிலும் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



மேற்குவங்க மாநிலம் கஜோல் கிராம மக்கள், மழை வேண்டி தவளைகளுக்கு நேற்றுமுன்தினம் திருமணம் செய்து வைத்த போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுணாவில் - கொல்லங்கிராய் வீதி நேற்று பாவனைக்குத் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 14

தென்மராட்சி தெற்குப் பகுதிகளான மறவன்புலோ, கைதடி, நாவற்குழி கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் சாவகச்சேரி செல்வற்கு வசதியாக நுணாவில் கொல்லங்கிராய் பாதை நேற்று திங்கட்கிழமை முதல் மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

இவ்வீதியை மக்கள் முன்னர் பாவனைக்குப் பயன்படுத்தி வந்த போதிலும் 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மூடப்பட்டது.

அதன் பின்னர் இப்பகுதி மக்கள் தச்சன் தோப்பு, கைதடி ஊடாகவே சாகவகச்சேரி பயணத்தை மேற்கொண்டனர். தற்போது இவ்வீதி மீண்டும் மக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டுள்ளது. தபால் ஊழியர்கள் இவ்வீதியைப் பயன்படுத்தி தபால் சேவையை மேற்கொள்ளலாம் எனவும் இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

(1-207)

# வடக்கில் தொழில் முயற்சிகளை மேற்கொள்வோருக்கு கடன்உதவி

## ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்

கொழும்பு,ஜூலை 14

வடமாகாணத்தில் தொழில் முயற்சிகளை மீள ஆரம்பிக்க முயல்பவர்களுக்கு கடன் உதவிகளை வழங்கும் திட்டமொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஆரம்பித்து வைத்துள்ளார்.

இது தொடர்பாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடமாகாண அபிவிருத்தியில் வங்கித்துறையினரின் பங்களிப்பு குறித்து வங்கிகளின் பிரதான அதிகாரிகளுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டார்.

மேலும் வடமாகாண அபிவிருத்திக்காக மத்திய வங்கியினால் விசேடமாக வடிவமைக்கப்பட்ட வடக்கு விழிப்புணர்வு எனும் விசேட அபிவிருத்தி கடன்உதவித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

விவசாய, கால்நடை, மீன்பிடித் துறைகள் உட்பட சிறுதொழில் துறைகளுக்கு மூலதன முதலீட்டை வழங்குவதற்கான கடனை பெற்றுக்கொடுப்பதை நோக்கமாக கொண்டு இலங்கை மத்திய வங்கி 'வடக்கை விழிப்புணர்வடையச் செய்தல்' எனும் இந்தக் கடனுதவித் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்தக் கடனுதவியின் கீழ் முந்நூறு கோடி ரூபா வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# விவசாய ஓய்வூதியத்துக்கு தெரிவாகியுள்ள 73 பேரின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை14

யாழ்.மாவட்டத்தில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து, தற்போது 60 வயதைப் பூர்த்தி செய்த மேலும் 73 பேருக்கு இந்த மாதம் முதல் ஓய்வூதியம் வழங்கப்படவிருக்கின்றது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்றும் நாளையும் யாழ்.ப.நோ.கூ.சங்க கட்டடத்தில் இயங்கும் கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச் சபையின் மாவட்டக் காரியாலயத்துக்கு சமுகம் அளித்து ஓய்வூதியப் புத்தகத்தைப் பெற்று தமது பகுதி தபால்கந்தோரில் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு சபையின் உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு :-

சி.நாதன் - சுருவில், ஐ.சரவணபவானந்தன்-மட்டுவில்வடக்கு, பொ.மங்களேஸ்வரன் -கே.கே.எஸ். றோட், வி.நல்லம்மா-துன்னலை வடக்கு, வி.குணராசா-தொட்டிலடி,த.சுப்பிரமணியம்-பருத்தித்துறை, ஆ.அல்பிரட்-மாதகல்,பி.யோசேப்- இளவாலை மேற்கு, பொ.கமலாதேவி- பத்தைமேனி, நா.இராசரட்ணம்-சண்டிலிப்பாய், இ.தருமரத்தினம்கரணவாய்வடமேற்கு, சோ.ஜெகதீஸ் வரக்குருக்கள் - ஊரெழு, நா.சின்னவன்-உயரப்புலம், கி.ஏகாம்பரம்- இமையாணன், சி.இராஜேஸ்வரி-புன்னாலைக் கட்டுவான் ,நி.கந்தையா-தெல்லிப்பழை, த.சரஸ்வதி- கோண்டாவில் மேற்கு, க.திரவியம்- மூளாய் வீதி, மு.அருளானந்தம்-காரைநகர்,மு.கோபாலசிங் கம்-உரும்பிராய் வடக்கு, சி.செல்வராசா- கரணவாய் மேற்கு, சி.இராசமலர் -நீர்வேலி , மு.செல்வமலர்- இணுவில்,க.கணபதிப்பிள்ளை -இடைக்காடு,கு.குலத்துங்கசேகரம்-குமரக்கோட்டம்,பொ.குணராசா -சங்கானை, ச.கந்தசாமி-வல்வெட்டி,வே.கணேசமூர்த்தி-அளவெட்டி, ப.மார்க்கண்டு-நாவற்குழி, சு.படிகலிங்கம் -சரவணை கிழக்கு, சி.கனகரத்தினம்-வல்வெட்டி, சு.திலகவதி-அச்சுவேலி தெற்கு, த.நற்குணராஜன் -கோப்பாய் தெற்கு, இ.ஜெயலட்சுமி- மாதகல்,செ.கனகம்மா-பருத்தித்துறை,த.கமலாதேவி - அளவெட்டி, சி.பரமசிவம் - ஊரிக்காடு, க.புவனேஸ்வரன் -இளவாலை, சி.நவரத்தினம்-5ஆம்குறுக்குத்தெரு, வ.குமாரதாசன் - மாவிட்டபுரம் வடக்கு, தி.ஜெகதீஸ்வரி -பண்டத்தரிப்பு, வே.திருஞானம் -வல்வெட்டி,சி.கிட்டிணன்- கைதடி, செ.பரமலிங்கம் -கோப்பாய், ந.கதிர் காமத்தம்பி- தெல்லிப்பழை, தே.அன்னம்மா-நல்லூர் றோட், இ.தம்பித்துரை -மல்லாகம், க.சின்னத்துரை-கைதடி மேற்கு, க.செல்லத்துரை -நீர்வேலி, செ.துரைசிங்கம் -கரணவாய் மேற்கு,மா.மகேந்திரம்-அளவெட்டி, சு.ஞானானந்தா -இணுவில்,

ஜெ.சாந்தினி-நல்லூர், ஜெ.விக்னேஸ்வரன் -உடுவில், கு.சுப்பிரமணியம்- கைதடி, ச.விஸ்மாபுத்திரன் -இளவாலை, வ.சின்னத்தம்பி -கொடிகாமம், சி.சண்முகராசா -கோண்டாவில்கிழக்கு, அ.இராஜேஸ்வரி- சுழிபுரம், க.தங்கேஸ்வரி-கைதடி கிழக்கு, க.கனகரத்திம் -ஏழாலை, தி.கனகசபை-ஏழாலை, ச.சுப்பிரமணியம் -மீசாலை, பூ.சோதிலட்சுமி- நாயன்மார்க் கட்டு, க.சண்முகசுந்தரம் -மட்டுவில் கிழக்கு, ஸ்ரீ.தெய்வநாயகி-இடைக்காடு,ச.நடராசா- மட்டுவில் கிழக்கு,சி.கணேசன் -கைதடி,சி.கணபதிப்பிள்ளை -ஆவரங்கால்மேற்கு,சி.சரஸ்வதி-மீசாலை, செ.பரஞ்சோதிலிங்கம்-கொக்குவில், ஆ.ஏகாம்பரநாதன்-மூளாய் மேற்கு, மா.இரத்தினசிங்கம் -புத்தூர்.

# அமிர், யோகேஸ் நினைவு நிகழ்வு

வலி.வடக்கு, ஜூலை14

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருந்த அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வெற்றிவேலு யோகேஸ்வரன் ஆகியோரின் 20 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை நண்பகல் 11.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்றன.

கூட்டணியின் யாழ்.மாநகரசபை வேட்பாளர் எஸ்.சங்கையா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாநகர தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு நினைவுதீபம் ஏற்றியதுடன் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர். (1-86)

# இன்றைய நிகழ்வுகள்

வண்ணை, ஜூலை 14

யாழ். சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை கல்விக் கண்காட்சி இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் திருமதி லு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசனும் சிறப்பு விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி றோமன் நேசராசா அடிகளாரும் கல்ந்துகொள்வர்.

* * *

பண்டத்தரிப்பு, ஜூலை, 14

வலி.தென்மேற்கு பிரதேச செயலக பிரிவுக்கான ஆயுள்வேத பாதுகாப்பு சபை அங் குரார்ப்பண நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்ப கல் 10 மணிக்கு செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை வலி. தென்மேற்கு பிரதேச ஆயுள்வேத பொது சுகாதார வைத்திய அதிகாரி திருமதி அனுஷியா சிவரூபன் மேற்கொண்டுள்ளார்.

(203-130)

# கூட்டமைப்பினர் ஜனாதிபதியைச் சந்தித்த பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்திருந்தால் இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்குச் செல்வதற்கு எப்போதோ அனுமதி கிடைத்திருக்கும் என்றும் அவர் 'ஏசியன் ரிபியுன்' இணையத் தளத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

நாடு கடந்த அரசை அமைக்கும் முயற்சியை முற்றாக நிராகரித்துள்ள அவர், அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குறித்து மிகவும் பிழையாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது என்பதை நேர்மையுடன்தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் போது எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடுமையான விதத்தில் அதனை வெளிப் படுத்தியிருக்கக்கூடும்.

எனினும், பொதுவாக சம்பந்தர் முதல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கனிஷ்ட மட்ட உறுப்பினர்கள் வரை ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்விற்குத் தயார் என்றே தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்துள்ளனர்.

### அர்த்த புஷ்டியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவில்லை

யுத்தம் நடைபெற்ற வேளை அரசு எவ்வித அர்த்த புஷ்டி நிறைந்த தீர்வுத்திட்டத்தையும் முன்வைக்கவில்லை. இதனால் எம்மால் விடுதலைப் புலிகளை அத்தகைய திட்டத்தைக் கருத்தில் எடுத்து பேச்சிற்குத் திரும்புமாறு கேட்க முடியாமல் போய்விட்டது.

இந்த நிலைப்பாடு தொடர்கிறது. நாங்கள் மக்களுக்குப் பதில் சொல்லவேண்டும்.

நாங்கள் அரசியல் ரீதியாக சாகசம் செய்ய முடியாது.

இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களுக்குச் செல்வதற்கு நாங்கள் அனுமதி கோரியிருந்தால் அவர்கள் தாராளமாக அதற்கு இணங்கியிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

நாங்கள் அதற்கான அனுமதியைக் கோராததால் ஜனாதிபதியை முதலில் சந்தித்து இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான விடயங்கள் குறித்து ஆராய்ந்த பின்னர் முகாம்களுக்குச் செல்வது என எண்ணியுள்ளோம்.

### யாழ்ப்பாணம் வவுனியாத் தேர்தல்கள்

நடைபெறவுள்ள யாழ். - வவுனியா தேர்தல்களைப் பொறுத்தவரை மக்களுக்கு எம்மைப் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆனந்தசங்கரி ஆகியோரின் வேண்டுகோளைப் புறக்கணித்து ஏன் எங்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை மக்களுக்குச் சொல்ல வேண்டியது எமது கடமை.

இதற்கு மேலதிகமாக இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது என்பது தொடர்பான விவகாரமும் மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டியதாகும்.

ஜனாதிபதி 'இந்து' பத்திரிகைக்கான தனது பேட்டியில், ''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள்தாங்கள் நினைப்பதெல்லாம் கிடைக்காது என்றாலும் உரியதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.'' - என்றார். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவத்தைப் புலப் படுத்துகின்றது.

அந்தப் பேட்டி மிகவும் முக்கியமானது; சுவாரஸ்யமானது.

ஈ.பி.டி.பி., புளொட் அல்லது எனது நல்ல நண்பர் ஆனந்தசங்கரி குறித்து எதனையும் ஜனாதிபதி அப்பேட்டியில் தெரிவிக்கவில்லை. கூட்டமைப்புக் குறித்தே குறிப்பிட்டுள்ளார்.

இதனால் ஜனாதிபதிக்கு நாங்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். அவுஸ்திரேலிய வானொலிக்கும் இதனை நான் தெரிவித்தேன்.

### கூட்டமைப்பின் முக்கியத்துவம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டும் ஜனாதிபதி குறிப்பிட்டமை கூட்டமைப்பின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகின்றது.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஏதாவது இணக்கப்பாடொன்றிற்கு வந்திருக்கலாம். நாங்கள் அதனை நிபந்தனையற்ற விதத்தில் ஆதரித்திருப்போம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இருக்கும் வரை எமது கருத்து இதுவாகத்தான் காணப்பட்டது. இரு தரப்பும் பேசினால் இதற்குத் தீர்வு காணலாம் எனக் கருதினோம்.

தற்போது நாங்களே வலியுறுத்த வேண்டும் எனக் கருதுகிறோம்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை விடயங்களை எங்களது கரத்திற்கு எடுத்துள்ளோம்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை தற்போது நாங்களே மக்கள்.

நாடாளுமன்றம் இருக்கும் வரை நாங்களே மக்களின் பிரதிநிதிகள்; ஆணித்தரமான பிரதிநிதிகள்.

### நாடுகடந்த அரசு யதார்த்தமற்றது

விடுதலைப் புலிகளையும் தமிழர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக கே.பி. மற்றும் உருத்திரகுமரன் போன்றவர்கள் குறிப்பிடுகின்றவை குறித்துக் கருத்துத் தெரிவித்து உங்களது நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

எனது நண்பர் ராஜா விஸ்வநாதனின் மகன் உருத்திரகுமார். அவரின் தலைமையில் சிலர் நாடுகடந்த அரசு குறித்துத் தெரிவித்தவற்றை நான் எப்போதோ நிராகரித்துவிட்டேன்.

இது குறித்த அறிவிப்பு வெளியான உடனேயே இதன் ஒரு பகுதியாக நாங்கள் இணைய முடியாது, எவரும் எம்மீது தமது அரசியல் நிகழ்ச்சி நிரலைத் திணிக்க முடியாது எனத் தெரிவித்துவிட்டேன்.

அரசியலில் தொடர்ந்தும் இருப்பதற்கான சில குழுக்களின் முயற்சி இது.

நாடு கடந்த அரசு என்பது யதார்த்தமற்றது. எந்த வெளிநாடும் இதற்கு ஆதரவளிக்கவில்லை. எரித்திரியா இதனை ஆதரிக்கவில்லை. நோர்வேயும் இதற்கு ஆதரவளிப்பதாக நான் கருதவில்லை, நோர்வே சமாதான நடைமுறைகளில் ஆழமாகத் தொடர்பு கொண்டுள்ளது. அவர்கள் இதற்கு ஆதரவளிப்பார்கள் என நான் கருதவில்லை. அப்படி ஆதரவு அளிப்பதன் மூலம் அவர்களுக்கு என்ன பலன் உண்டு? - என்றார் அவர். (அ-சி)


**தேவை**

பெண்களுக்கான ஆடைகள் தைப்பதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. சிறந்த ஊதியம் வழங்கப்படும். அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

**நோபிற் பிறின்டேஸ்,**

545, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

T.P. 021 222 8134

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

அனைத்து Diploma

கணனிக்கற்கை நெறிகளுக்குமான

புதிய பிரிவுகள் ஆரம்பம்

ஆரம்பம்

18.07.2009 காலை 10.00 மணி

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES

#209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வரச்சந்தி, யாழ்ப்பாணம்.

T.P 021 222 8232 Fax: 021 222 6933

**தேவை**

ஊர்ச்சேவல், கல்பேட் உடன் தேவை

758/4, **தாசன் பாம்**,

கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**கடை விற்பனைக்குண்டு**

கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் சந்திக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்புகட்கு :- 0773150842

**தவறிவிட்டது**

பாடசாலைப் பயன்பாட்டிற்கான 35 மீற்றர் நீளமான Mic வயர் நேற்று (13.07. 2009) வியாழக்கிழமை கே.கே. எஸ் வீதிக்கும் சுண்டுக்குழிக்கும் இடை யில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின் வரும் தொலை[illegible] கொள்ளவும். 0771906764

**மணமகள் தேவை**

பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரியும் 28 வயதுடைய அத்த நட்சத்திரம்,கௌரவ இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு படித்த, அழகான, வயது குறைந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர் . தொடர்பு கொள்ள விளம்பர இல: 3919 மே/பா உதயன்

**வகுப்புகள்**

தரம் 1 முதல் 5 வரை ஆங்கிலமும் சிங்களமும் கற்பிக்கப்படும்.

திருமதி.S.அரியரட்ணம்

16, [illegible] அவனியூ, சுண்டுக்குளி,

யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5031

**தவறிவிட்டது**

கேசாவில் பிள்ளையார் கோவிலுக்கும் சாயி துர்க்கா தேவி கோயிலுக்குமிடையில் கொக்குவில் கே.கே.எஸ்.வீதி - ஆடியபாதம் வீதியில் திறப்புக் கோர்வை ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 30/1, கோணா வளை வீதி, கொக்குவில் கிழக்கு என்னும்முகவரியில்தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அடிப்படை உரிமை மீறல் வழக்காக தேர்தல் சர்ச்சையை ஆராய முடியாது

## உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவு

கொழும்பு, ஜூலை 14

தேர்தல் சர்ச்சை விடயங்களை, அடிப்படை உரிமை மீறல் மனுவாக ஏற்று விசாரிக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்ட உயர்நீதிமன்றம், இந்த வகையில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஒரேயடியாகத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, ஷிராணி பண்டாரநாயக்கா, எஸ்.ஐ.இமாம் ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கியது.

நடந்து முடிந்த மேல்மாகாண சபைத் தேர்தலின் விருப்பு வாக்குத் தெரிவு தொடர்பான சர்ச்சையை ஒட்டி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் ஐ.தே.க. வேட்பாளர்களும், களுத்துறை மாவட்டத்தின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரும் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்

இந்த மனுக்கள் நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரசுத் தரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணி நெரின்புள்ளே ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினார்.

தேர்தல் ஆட்சேபனைகள் தொடர்பான விடயங்கள் விசேட மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். அச்சமயத்தில் தேர்தல் நீதிமன்றங்களாக இயங்கி அப்பிரச்சினைகளை அந்த மன்று ஆராயும். அதற்கான நியாயாதிக்கம் அந்த நீதிமன்றுக்கே உண்டு. அந்த விவகாரங்களை அடிப்படை உரிமை மீறலாகக் காட்டி உயர்நீதிமன்றுக்குக் கொண்டுவருவது பொருத்தமற்றது - என்றார் அவர்.

அவரது வாதத்தை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

ஆனால் அதனை மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி வெலியமுன ஆட்சேபித்தார்.

ஏற்கனவே, முன்னைய பிரதம நீதியரசர் தேர்தல் ஆட்சேபனை விடயத்தை அடிப்படை உரிமை மீறலாக ஏற்க முடியும் என்று குறிப்பிட்டு, அந்த விடயங்களை அந்த வகையில் ஏற்று விசாரித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளார். எனவே அந்த முன்மாதிரியை நீதிமன்றம் பின்பற்ற வேண்டும் என்றார் அவர்.

எனினும், அந்த வாதத்தை ஏற்க நீதியரசர்கள் மறுத்து[illegible]டனர்.

அரசமைப்பிலு[illegible]டத்திலும் உள்ளபடிதான் நீதிமன்[illegible] இயங்கமுடியும். இவ்விடயத்தில் வழிவகை என்னவென்பதை சட்டமும், அரசமைப்பும் தெளிவாக வரையறை செய்துள்ளன. அதன்படி ஒழுகுவதைத் தவிர நீதிமன்றுக்கு வேறு வழியில்லை எனத் தெரிவித்து மனுக்களைத் தள்ளுபடி செய்தனர் நீதியரசர்கள்.

தேவையானால் மனுதாரர்கள் சட்டத்தில் குறிப்பிட்டபடி மேன்முறையீட்டு நீதிமன்றில் விண்ணப்பித்துத் தங்களுக்குரிய நிவாரணத்தைப் பெற முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (சி)

# யாழ்., வவுனியா தேர்தல்களில் ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல் இல்லை என்பதை உறுதிப்படுத்தமுடியுமா?

### ஜயலத் ஜயவர்த்தனா கேட்கிறார் இப்படி



கொழும்பு,ஜூலை 14

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் செயற்படும் ஆயுதக் குழுவினர் வாக்காளர்களை அச்சுறுத்தமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் - என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

இப்பகுதிகளில் தேர்தல்களுக்கான சூழ்நிலை முற்றுமுழுதாக காணப்படவில்லை. பயப் பீதியே காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்., வவுனியா தேர்தல்கள் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் அரச ஆதரவுடன் பல ஆயுத குழுக்கள் நடமாடுகின்றன.

இந்த ஆயுதக் குழுக்கள் வாக்காளர்களையும், ஊடகங்களையும் அச்சுறுத்த போவதில்லை என்பதற்கு என்ன உத்தரவாதம்?

'உதயன்' பத்திரிகைக்கு என்ன நடந்தது என்பதைப் பாருங்கள். பெரும் எண்ணிக்கையானோரால் வாசிக்கப்படும் 'உதயன்' பத்திரிகையை அவர்கள் மிரட்டியுள்ளனர்.

இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்-மா-அதிபரைக் கேட்டுள்ளேன்.

விடுதலைப் புலிகள் இல்லாத நிலையில் ஆயுதக்குழுக்களிடம் ஆயுதங்கள் இருக்கக்கூடாது.

தேர்தல் நடைபெறுவது அவசியமானது. சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படுவதும் அவசியம்.

மிகக் குறுகிய காலத்திற்குள் 100 வீத பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த முடியுமென நான் சொல்லவில்லை.

என்றாலும், ஏ - 9 வீதி திறக்கப்பட வேண்டும். ஏதாவது ஒருவகை சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படவேண்டும்.

அங்குள்ள அரச அதிபர்கள், அதிகாரிகளோ தங்களை விட செல்வாக்குமிக்க இராணுவ அதிகாரிகள் உள்ளனர் எனக் கருதுகின்றனர்.

எமக்கு தெரியாமலே இராணுவ நிர்வாகம், சிவில் நிர்வாகத்தை பொறுப்பெடுத்துள்ளது- எனத் தெரிவித்துள்ளார். (அ-சி)

## பல்லி விழுந்த உணவை உண்டோர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 14

குருநகர், சொலமன் வீதிப் பகுதியில் நேற்றிரவு உணவில் பல்லி விழுந்ததால் அதை உண்ட மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த சகோதரிகளான ஆர்.மேரி தர்சினி (வயது17), ஆர். கணேஜா(வயது 3),எம். அமீனா (வயது 5) ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு உணவு வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தில் பல்லி வீழ்ந்ததாகவும் அதை அவதானிக்காமல் அதை உண்ட இவர்கள் உபாதைக்கு உட்பட்டனர் என்றும் உடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1-78)

## போட்டியிடும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதக் குழுக்களால் அச்சுறுத்தல் இருப்பதாக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியில் சில கட்சிகள் தெரிவித்து வருவது தொடர்பாக செய்தியாளர்கள் கேட்டபோதே, பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு கூறினார். (அ-1)

## வடக்கின் ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி நகரத்துக்கு மின்சார வசதி அளிப்பது தொடர்பான ஆரம்ப வைபவம் அண்மையில் மின்சாரசபைத் தலைவர் ஈ.ஏ.எஸ்.கே.எதிரிசிங்கவின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது இரணமடு குளத்துக்கு அருகில் வைத்து முதலாவது மின்மாற்றி பொருத்தப்பட்டது.

கிளிநொச்சி நகரத்துக்கு இன்னும் இரு வாரங்களில் மின்சார வசதி அளிக்கவுள்ளதாகவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி நகரத்துக்கு மின்சார வசதி அளிக்கும் திட்டத்துக்கு 600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சுக் கூறியது. (அ-07)

## மீட்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11ஆம் திகதி ஓட்டமாவடியில் கண்டுபிடிக்கப்பட்ட ரி- 56 ரக துப்பாக்கி ரவைகள் 20, கைக்குண்டு -01 ஆகியன தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பித்த அறிக்கையைப் பரிசீலித்த நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

''சட்ட விரோத ஆயுதங்களையும், சந்தேக நபர்களையும் கண்டுபிடிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியே இது. குண்டு செயலிழக்கும் பிரிவு மூலம் இதனை அழிக்க அனுமதிக்க வேண்டும்'' - என்று பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆயுதங்களை அழிப்பதற்கான அனுமதியை அளித்த நீதிமன்றம் சந்தேக நபர்களை கைது செய்யுமாறு உத்தர விட்டுள்ளதோடு, இது தொடர்பான அறிக்கையை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் பொலிஸாரைப் பணித்துள்ளது. (அ-சி)

## கிழக்கு மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயப்படுத்தினர் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மருதமுனைக்கு அருகாமையில் வைத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஓட்டோவில் பயணம் செய்த செய்னுலாப்தீன் நஸ்ருல்லா என்பவருக்கும் வெள்ளை நிறப் 'பிக்கப்' ஒன்றில் வந்த அமைச்சர் மற்றும் அமைச்சரின் ஆள்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதாகக் கூறப்படுகின்றது.

அமைச்சரும் அமைச்சரின் ஆள்களும் ஓட்டோவில் பயணம் செய்தவரை தாக்கி காயப்படுத்தினர் எனவும், காயப்பட்டவர் உடனடியாகக் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின் தற்போது மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் வழக்கு அழைக்கப்பட்டபோது மன்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அஷ்ரப் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு காயமடைந்தவர் வழங்கிய முறைப்பாட்டின் பேரிலேயே இவ்வழக்கைத் தாங்கள் தாக்கல் செய்துள்ளனர் எனக் கல்முனைப் பொலிஸ் நிலைய சிறுகுற்றப் பிரிவு பொலிஸாரின் சார்பில் ஆஜரான பொலிஸ் சார்ஜன்ட் அப்துல் ஹை மன்றுக்குத் தெரிவித்தார். அப்போது ஏன் சம்பந்தப்பட்ட அமைச்சர் உட்பட சந்தேக நபர்களைக் கைது செய்யவில்லையென பொலிஸ் சார்ஜன்ட் அப்துல் ஹையிடம் நீதிவான் வினாவினார். அதற்கு பொலிஸ் சார்ஜன்ட் அப்துல் ஹை அமைச்சரின் விலாசம் தெரியாது என்று பதில் கூறினார். இப்பதிலை அடுத்து நீதிமன்றில் சிறிய சலசலப்பு ஏற்பட்டது. நீதிவான் அப்துல்லா ஒரு மாகாண அமைச்சரின் விலாசம் பொலிஸாருக்குத் தெரியாதோ என்று கிண்டலாகவும், கடுமையான தொனியிலும் பொலிஸ்சார்ஜன்ட்டை கேட்டார்.

நேற்றைய வழக்கு விசாரணையின் முடிவில் அவர் சந்தேகநபர்களான அமைச்சர் மற்றும் அமைச்சரின் ஆள்களை கைது செய்து எதிர்வரும் 27 ஆம் திகதி மன்றுக்கு ஆஜராக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-சி)

## ஜனாதிபதியுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணிசேரா நாடுகளின் உச்[illegible]நாட்டில் பங்குபற்றுவதற்காக எகிப்துக்குச் சென்றிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாடு திரும்பியதும் - பெரும்பாலும் இந்த வார இறுதியில் - அவரது பரிசீலனைக்குக் கிடைக்கக்கூடியதாகக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் இக்கடிதத்தை அவருக்கு அனுப்பிவைக்கும் என்றும் கூறப்படுகின்றது.

இக்கடிதம் கிடைத்து, கூட்டமைப்பினரைத் தனியாகச் சந்தித்துப் பேசுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணங்குவாரானால் - பெரும்பாலும் அடுத்த வாரம் அளவில் - இந்தச் சந்திப்பு இடம்பெறக் கூடிய வாய்ப்புகள் பிரகாசமானவையாக இருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

அகதிமுகாம் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள், உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும் வவுனியா, யாழ். நகரங்களின் பாதுகாப்பு நிலைவரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களின் பாதுகாப்பு விடயங்கள், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் ஆகியவை குறித்தே இந்த உத்தேச சந்திப்பின்போது ஜனாதிபதியுடன் நேரில் பேசி பிரச்சினைகளை இயன்றவரை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆவலாக உள்ளனர் என்றும் கூறப்பட்டது.

அண்மையில் 'இந்து' பத்திரிகையின் ஆசிரியருக்கு அளித்த பேட்டியில், தீர்வுக்கான விடயங்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்கவேண்டும் என்ற சாரப்பட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

இதனை, தீர்வு முயற்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவத்தை - பங்களிப்பை - ஜனாதிபதி கோடிகாட்டிக் குறிப்பிட்ட விடயமாகக் கருதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்தச் சந்தர்ப்பத்தை வசமாகப் பற்றிக்கொண்டு, ஜனாதிபதியை நேரில் சந்தித்து, விடயங்களை முன்நகர்த்த விரும்புகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (சி)

## மரண அறிவித்தல்

### அப்பாத்துரை இராசரத்தினம்



(முன்னாள் இ.போ.ச.சாரதி)

அராலியைப் பிறப்பிடமாகவும் வட்டப்புலம், இளவாலையை வசிப்பிடமாகவும் தற் போது கனடா ஒன்ராரியோவில் வசித்தவருமாகிய அப்பாத்துரை இராசரத்தினம் 11.07.2009 சனிக்கிழமை கனடா ஒன்ராரியோவில் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான அப்பாத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமரர் களான சரவணமுத்து - அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் தில்லைநாயகியின் (கனடா) அன்புக் கணவரும் அமரர்களான சபாரத்தினம், நவரத்தினம், அழகரத்தினம், மனோன்மணி, துரைரத்தினம் மற்றும் குணரத்தினம் (மலேசியா), கனகரத்தினம்(வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேஸ்வரராஜன் - இராயேஸ்வரி (கனடா), தவபாலசிங்கம் (சித்தப்பா), - காசிவிசாலாட்சி (லாலா - இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் விமலேஸ்வரி(கனடா), கிரு பாநந்தி (கனடா), குகாநந்தி(கனடா), கமலேஸ்வரி (கனடா),குகாநந்தன்(கனடா), துவாரகா(கனடா), ஸ்ரீரமணன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஸ்வநாதன்(கனடா), சசிதரன்(கனடா), குமணன்)கனடா), சரவணன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ரகுன்(கனடா),ரகுனியா(கனடா), சஞ்சேய்(கனடா),தர்மினா (கனடா), பிரணவன் (கனடா), ஹரிஸ்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் சசிரேகா (கனடா), கிருசாந்தி(கனடா), சுகிர்தன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா ஒன்ராரியோவில் இன்று (14.07.2009) செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா.தில்லைநாதன்
(மச்சான்).

பொந்தி வீதி,
பண்டத்தரிப்பு.

A/L 2009 இந்து நாகரிகம்
மாபெரும் கருத்தரங்கு
திரு.S.ஜெயக்குமார் B.A.(Hons)
ஜூலை 15, 16 காலை 9 a.m.
BITSMANS மானிப்பாய்
NOTE: எதிர்பார்க்கைக்குரிய வினாக்கள், வெளிமானவர்களும் பங்குபெறலாம். அச்சிடப்பட்ட குறிப்புகள் வழங்கப்படும்

கணிதம்
தரம் 9
மாகாண மட்டப் பொதுப் பரீட்சைக்குரிய
* மாதிரி வினாத்தாள்களும்
* கடந்த கால வினாத்தாள்களும்
விடைகளுடன்
விலை ரூபா 80.00
தொகுப்பு
சோ.கிருஷ்ணதாஸ்

Diploma in Computerized Accounting
(With Manual Accounting)
INDIVIDUAL Classes Speed Batches
#MYOB #Quick Book Pro #Accpack #Tally
புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன, பதிவுகளை நேரில் மேற்கொள்ளவும்
324, Palaly Road, Jaffna. *Supported by UNDP/JIRRP*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.